REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 நவம்பர் 10 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 266 | Thursday 10, November, 2022 | 16 பக்கங்கள் | 50/-

IMF பணிப்பாளருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

கடன் முகாமைத்துவம் தொடர்பில் கலந்துரையாடல்

ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அன்டலினா ஜோர்ஜியேவா ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

எகிப்தில் நடைபெற்று வரும் கோப் 27 மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அந்நாட்டுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு பல்வேறு தரப்பினருடனும் முக்கிய சந்திப்புக்களை 06

பொதுமக்கள் கேள்வி கேட்க சந்தர்ப்பம்

அமைச்சர் அலி சப்ரி டுவிட்டரில் நேரலையாக தொடர்பு கொள்கிறார்

பாராளுமன்றிலிருந்து இன்று 12.30 முதல் 1.30 வரை

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் முன்னோக்கிய வழி தொடர்பில், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கலந்துகொள்ளும் நேரடி டுவிட்டர் கலந்துரையாடல் இன்று (10) பி.ப. 12.30 மணி முதல் பி.ப. 01.30 மணி வரை பாராளுமன்ற உத்தியோகபூர்வ டுவிட்டர் (@ParliamentLK) கணக்கினூடாக நடைபெறவுள்ளது. 06

பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு தொடர்பில்

தனுஷ்கவின் வழக்கு செய்திகளை வெளியிட ஊடகங்களுக்கு அனுமதி

தடையை நீக்கி சிட்னி நீதவான் நீதிமன்று உத்தரவு

அவுஸ்திரேலியாவில் பெண் ஒருவரை பாலியல் துன்புறுத்தல் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று (09) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிரான வழக்கு தொடர்பான செய்திகளை அறிக்கையிடுவதற்கு ஊடகங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கி, சிட்னி நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை பரிசீலித்த நீதிமன்றம், இந்த உத்தரவை பிறப்பித்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காணொளி தொழில்நுட்பத்தினூடாக தனுஷ்க குணதிலக்க 06

இதுவரை இலாபமடைந்தோரது பெயர்கள் சபையில் சமர்ப்பிப்பு

சீனி வரி குறைப்பின் பிரதிபலன் மக்களுக்கு

பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சீனி வரி குறைப்பால், கிடைக்க வேண்டிய பிரதிபலனை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க அல்லது அதனை அரசாங்கம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். வரிக் குறைப்பால் இலாபமடைந்தோரின் பெயர்கள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் கவனத்திற் கொண்டுள்ளதாக சபையில் தெரிவித்த அமைச்சர், அந்த வரி குறைப்பு மூலம் இலாபமடைந்துள்ளவர்களின் பெயர்கள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பெறுமதி சேர் வரி சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.

கொள்கை ரீதியான தீர்மானத்துக்கமைய சீனிக்கு மட்டுமின்றி பருப்பு, ரின் மீன் ஆகியவற்றுக்கும் வரி குறைப்பு செய்யப்பட்டது. துறை சார் நிபுணர்களின் ஆலோசனைக்கிணங்கவே இது மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் நுகர்வோரின் மாதாந்த அத்தியாவசிய உணவுப் பொருள் செலவுப் பட்டியலில் 500 ரூபாவை குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது.

சீனி வரி குறைப்பு மூலம் மேலதிக வருமானத்தை பெற்றுக் கொண்டோரிடமிருந்து நாம் வருமான வரி அறவிட்டு, அதனைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம். இதனூடாக உச்சளவில் வருமானத்தை பெற்றுக் கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. 06

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, கானாவின் நிதி அமைச்சர் கென் ஒபோரி அட்டா மற்றும் மாலைதீவு சபாநாயகர் மொஹமட் நஷீட் ஆகியோரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சந்தித்து கடன் முகாமைத்துவம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்திய போது பிடிக்கப்பட்ட படம்.

மாணவர்களை தாக்கிய அதிபரை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை

மேல் மாகாண கல்வித் திணைக்களம் தெரிவிப்பு

03

இரண்டாவது குரங்கு அம்மை நோயாளி நேற்று அடையாளம்

மங்கிபொக்ஸ் (monkey pox) எனப்படும் குரங்கம்மை தொற்று உறுதியான இரண்டாவது நபர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து நாட்டுக்குள் வந்த இந்நபர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. முன்னதாக டுபாயிலிருந்து நாடு திரும்பியிருந்த ஒருவர், மங்கிபொக்ஸ் தொற்றுடன் கடந்த (03) அடையாளம் காணப்பட்டார்.

இவர், குரங்கம்மையுடன் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட முதலாவது நபராவார்.

களனி பகுதியைச் சேர்ந்த 20 வயதான இவர், தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மூழ்கிக்கொண்டிருந்த கப்பலில் மீட்கப்பட்டவர்கள் 76 பேர் தமிழர்

303 பேரும் பதற்றமில்லாது இருப்பதாக வியட்நாம் ஊடகம் தெரிவிப்பு

மூழ்கிக்கொண்டிருந்த கப்பலிலிருந்து மீட்கப்பட்ட இலங்கையர்களுக்கு, உரிய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் மகிழ்ச்சியுடன் உள்ளதாக வியட்நாம் ஊடகம் தெரிவித்துள்ளது. சிங்கப்பூருக்கு அருகில் சர்வதேச கடற்பரப்பில் தத்தளித்த படகிலிருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையரில் 76 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரியவந்துள்ளது. இவர்கள் மலேசியாவுக்கு விமானம் மூலம் சென்று, படகு மூலம் வேறொரு நாட்டுக்கு செல்வதற்காக பயணித்துள்ளதாகவும், படகில் ஏறுவதற்கு முன் ஆட்கடத்தல்காரர்களுக்கு பணம் கொடுத்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார். 06

தனுஷ்க மீதான வழக்கு விசாரணை ஜன.12 இல்

நேற்று சூம் ஊடாக விசாரணை

அவுஸ்திரேலியாவில் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்குள்ளாகி, அந்நாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணியின் தனுஷ்க குணதிலக்க மீதான வழக்கு விசாரணை 2023 ஜனவரி (12) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது சிட்னியிலுள்ள புளூ வோட்டர்ஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனுஷ்க குணதிலக்கவுடன், காணொளி தொழில்நுட்பம் ஊடாக தொடர்பு கொள்ளப்பட்டு விசாரணை செய்யப்பட்டது.

சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார் கவனம்

குரங்கு அம்மையை தடுக்க கைகளை நன்றாக கழுவவும்

டாக்டர் தீபால் பெரேரா அறிவுரை

குரங்கம்மை நோய் தொற்றுவதை தடுப்பதற்காக கைகளை நன்றாக கழுவி சுத்தம் செய்வதே சிறந்த முறையென கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் ஆலோசகர், குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பெரியம்மை மற்றும் சின்னம்மை என்பவற்றுக் கிடையிலுள்ள ஒரு வைரஸால் குரங்கம்மை ஏற்படுகிறது. குரங்கம்மை அல்லது பெரியம்மை தடுப்பூசிகள் நாட்டில் இல்லை.இதனால் அடிப்படை சுகாதார வழிகாட்டல்களைப் பேணுவது மிகவும் அவசியமென்றும் பெரேரா கூறியுள்ளார்.

இந்நோய், தோலிலிருந்து தோல் மற்றும் வாயிலிருந்து வாய் உட்பட சாதாரண தொடர்புகள் மூலமாகவும் பாலியல் வல்லுறவு தொடர்பு மூலமாகவும் 06

டிசம்பர் மாத இறுதிக்குள் அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

டிசம்பர் மாத இறுதிக்குள் நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளில் நிலவும் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படுமென கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையில், இடம்பெற்றுள்ள சிக்கல்கள் காரணமாக வழக்கு தொடர்ந்துள்ள தரப்பினரை கல்வி அமைச்சுக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர்கள் தமது வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் இடைக்கால தடையுத்தரவு நீக்கப்படுமானால், அதிபர் வெற்றிடங்களை விரைவாக 06

ஒரு லீற்றர் டீசல் ரூ.12 நட்டத்திலே விற்பனை

சபையில் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

ஒரு லீற்றர் டீசல் 12 ரூபா நட்டத்திலேயே தற்போது விற்பனை செய்யப்படுவதாக எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி சானக்க தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேயின் வினாவுக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் பாராளுமன்றத்தில் இதனை தெரிவித்தார்.

எரிபொருள் விலை சூத்திரத்திற்கமைய எரிபொருள் விலையில் மாற்றங்களை கொண்டுவருவதாக, அமைச்சர் கஞ்சன விஜயசேக்கர முன்னதாக அறிவித்திருந்தார். எனினும், விலைசூத்திரத்துக்கேற்ப எரிபொருள் விலையில் மாற்றங்களைச் செய்யாதமை மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகுமென 06

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட

458 கிலோ கேரள கஞ்சா நெடுந்தீவு கடலில் மீட்பு

கடற்படையினர் நேற்று அதிரடி நடவடிக்கை

இந்தியாவிலிருந்து கடத்தி கொண்டுவரப்பட்ட 458 கிலோ கேரள கஞ்சா, நெடுந்தீவுக் கடலில் நேற்றுக் காலை கடற்படையினரால் மீட்கப்பட்டது.

நெடுந்தீவுக் கடலில சந்தேகத்திற்கிடமாக பயணித்த படகை வழிமறித்த கடற்படையினர், அதில் எடுத்துவரப்பட்ட 458 கிலோ கஞ்சாவையும் கைப்பற்றினர். இதன்போது கஞ்சாவுடன் இரு படகோட்டிகளையும் படையினர் கைது செய்துள்ளனர். 06

நாட்டில் Gas க்கு பற்றாக்குறை இல்லை

லிட்ரோ மற்றும் லாஃப் Gas தட்டுப்பாடின்றி விநியோகம்

இரு நிறுவனங்களின் அதிகாரிகளும் தெரிவிப்பு

லிட்ரோ மற்றும் லாஃப் ஆகிய இரண்டு சமையல் எரிவாயு நிறுவனங்களும் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை, தட்டுப்பாடின்றி விநியோகிப்பதாக நிறுவனங்களின் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுமெனவும், ஏதேனும் ஒரு பகுதியில் எரிவாயு தட்டுப்பாடு 06

கந்தக்காடு மோதலில் இதுவரை 13 பேர் சரணடையவில்லை

பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவிப்பு

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் அண்மையில் இடம்பெற்ற மோதலின் போது, தப்பிச் சென்றவர்களுள் 13 கைதிகள் இதுவரை சரணடையவில்லையென பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

இங்கு கடந்த (06) திகதி இரவு ஏற்பட்ட மோதலின் போது 50 தொடக்கம் 100 வரையான கைதிகள் முகாமிலிருந்து தப்பிச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

போதைக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த மோதலின் பின்னர் இதுவரை 301 கைதிகள் புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் 06

மலையக மக்களது பிரச்சினை தொடர்பில்

ஜெனீவாவுக்கு செல்லும் நிலைக்கு தள்ள வேண்டாம்

அரசுக்கு எச்சரிக்கை விடுப்பதாக மனோ எம்பி உரை

லோரன்ஸ் செல்வநாயகம்

நமது பிரச்சினைகளை எடுத்து கொண்டு சென்னைக்கு சென்று, நியூயோர்க்குக்கு சென்று, ஜெனீவாவுக்கு சென்று பேச எனக்கு விருப்பமில்லை.

ஆனால், என்னை அந்த நிலைமைக்கு தள்ளி விட வேண்டாமென அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்க விரும்புவதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

நாட்டில் நலிவடைந்த பிரிவினர் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுர திசாநாயக்க, தமிழ் முற்போக்குகூட்டணிதலைவர் 06

சிவனொளிபாத யாத்திரை டிசம்: பூரணையுடன் ஆரம்பம்

ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடல்

சிவனொளிபாதமலை யாத்திரையின் பருவகாலம் எதிர்வரும் டிசம்பர் மாத பூரணை (பௌர்ணமி) தினத்துடன் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் யாவும் முன்னெடுக்கப்பட்டுவருவதாக சிவனொளிபாதமலையின் தலைமை தேரர் தெரிவித்தார். நுவரெலியா மாவட்ட செயலாளர் 06

மலைச்சாரல்

உள்ளூராட்சி தேர்தல்கள்;

எதிர்க்கட்சிகள் அரசியல் இலாபம் அடைய முனைகின்றன

ஜனக பண்டார தென்னகோன் எம்.பி

உக்குவளை விசேட நிருபர்

உள்ளூராட்சி மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அதில் மாற்றுக்கருத்து கிடையாது என்றாலும் நாடு தற்போது எதிர்நோக்கும்பொருளாதாரபிரச்சினைகளுக்கு மத்தியில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த முடியாத சூழலில் எதிர்க்கட்சி உட்பட பலதரப்புகள் வற்புறுத்துவது தேவையற்ற செயற்பாடாகும் என மாத்தளை மாவட்ட பொதுஜன பெரமுன பா.உ ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்

உள்ளூராட்சி மாகாண சபை தேர்தல்கள் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினரின் தம்புள்ளை இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து பேசிய அவர்,..

கொவிட் 19 காரணமாக நமது நாடு பல மாத காலமாக முடக்கப்பட்டிருந்த நிலையில் நாட்டில் எந்தவித அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ள முடியாது பொது மக்களின் பொருளாதாரம் முற்றும் பாதிக்கப்பட்டிருப்பதை அரசு மாத்திரம் அல்லாமல் எதிர்க்கட்சிகளும் இதை நன்றாக புரிந்து வைத்திருக்க வேண்டும்.

பல சவால்களை எதிர்கொண்ட நமது நாடு மெதுமெதுவாக மீளெழுந்து வருகின்றது. விவசாயிகள் எதிர்நோக்கிய பசளை, சமையல் எரிவாயு போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்படும் நேரத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல்களை நடத்த கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படுவதால் இதற்கு செலவு செய்யக்கூடிய பணத்தை முக்கிய தேவைகளுக்கு பயன்படுத்தலாம்.

உள்ளூராட்சி மாகாண சபை தேர்தல்கள் நடத்த வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக்கருத்தே கிடையாது. தேர்தலை நடத்தி கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்யும் காலமல்ல. சில கட்சிகள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க பார்க்கின்றனர்.சந்தர்ப்பவாத அரசியலை எதிர்க் கட்சியினர் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

இந்தியா TANTEA தோட்டங்களில் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்;

இந்திய உயர்ஸ்தானிகர், இ.தொ.கா பேச்சுவார்த்தை

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து, TANTEA தோட்டங்களில் குடியேறியுள்ள பெருந்தோட்ட சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினை தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிற்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து சென்றவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் கூட்டுப் பொறுப்பு இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு அரசாங்கங்களுக்கும் உண்டு.

மேலும் மலையகத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டிய 10,000 வீடுகள் குறித்தும், பெருந்தோட்ட இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் இந்திய ஆசிரியர்களை நியமித்து, புதிய பாடநெறிகள் ஆரம்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இ.தொ.காவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என இதன் போது இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் அரசியல் பிரிவுக்கான முதன்மைச் செயலாளர் திருமதி பானு ஆகியோர் தெரிவித்தனர்.

சப்ரகமுவ மாகாண அரச ஊழியர்களுக்கு மொழி பயிற்சி

காவத்தை தினகரன் விசேட நிருபர்

சப்ரகமுவ மாகாண அரச ஊழியர்களுக்கான தமிழ் மொழி பயிற்சி நெறியின் நிறைவுநாள் நிகழ்வு நேற்று முன்தினம் (08) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் குருவிட்ட புஸ்ஸல்ல முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

அரச கரும மொழி திணைக்களமும் சப்ரகமுவ மாகாண சபையும் இணைந்து மேற்படி பயிற்சி நெறியை நடாத்தினர்.

சப்ரகமுவ மாகாண அரச சேவையை சேர்ந்த 148 பேர் இரண்டு பிரிவுகளாக மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். முதலாவது பிரிவிற்கு 150 மணித்தியாலமும், இரண்டாவது பிரிவிற்கு 200 மணித்தியாலமும் இப்பயிற்சிநெறி நடைபெற்றது.

மேற்படி பயிற்சி நெறியை, ஆசிரியர்களான பெனடிக் ஆசிர்வாதம், பி.பரமசிவம், பி.பழனியாண்டி ஆகியோர்களால் நடாத்தப்பட்டது.

மேற்படி பயிற்சி நெறியின் இறுதி நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

அக்குறணை பிரதேச சபையின் 2023 பட்ஜட் நிறைவேற்றம்

பூஜாபிட்டிய தினகரன் நிருபர்

அக்குறணை பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் (பட்ஜட்) அக்குறணை பிரதேச சபையின் விசேட பொதுக்கூட்டத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக அக்குறணை பிரதேச சபை தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன் தெரிவித்தார்.

அபிவிருத்திகள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் தொழிற் கல்விசார் செயற் திட்டங்கள், சுகாதார மேம்பாடுகள் உட்பட சகல துறைகளையும் அபிவிருத்தி செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு இலங்கையின் முதல் தர உள்ளூராட்சி மன்றமாக அக்குறணை பிரதேச சபையை மாற்றுவதற்கு முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். சிறந்த முறையில் மக்களுக்கு சேவை நல்கும் மக்கள் மயமான பிரதேச சபையை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அக்குறணை பிரதேச சபை எப்பொழுதும் தயாராக இருப்பதாக அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்துள்ளார்.

புஸல்லாவ பகுதியை சேர்ந்த சமூக சேவகர் வெள்ளசாமி பிரசன்னாவிற்கு சமூக சேவைகளுக்கான இலங்கையின் அதி உயர் விருதான கீர்த்தி ஸ்ரீ தேசமாணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அகில இலங்கை சமூக,கலாசார சுற்றுப்புறச் சூழல் அதிகார சபை ஊடாக இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது.

கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலையின் குறைபாடாக உள்ள இரண்டு மாடி கட்டடத்தை கண்டி தமிழ் வர்த்தக சங்கமும் கண்டி இந்து இளைஞர் மன்றமும் ஒன்றிணைந்த நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. பாடசாலைக்கு தேவையான பௌதிக வளங்கள் தொடர்பில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே,மாகாண பொறியியலாளர் குழுவினருடன் சென்று பார்வையிடுவதையும் அதிபர் பி.சிவக்குமார் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படங்கள் – நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

சிவனொளிபாதமலை பருவகாலம் டிசம்பரில் ஆரம்பம்; நல்லத்தண்ணியில் கலந்துரையாடல்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

2022 – 2023 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை பருவகாலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் பௌர்ணமி தினத்தில் ஆரம்பிக்கப்பட்டவுள்ளதாக பெல்மதுளை ரஜமகாவிகாரை, இரத்தினபுரி பொத்குல் விகாரை விகராதிபதி வெங்கமுவ ஸ்ரீ தம்மதின்ன தேரர் தெரிவித்துள்ளார்.

பருவகாலம் ஆரம்பிப்பது தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஸ்ரீபாத நல்லத்தண்ணி கிராமசேவகர் காரியாலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலகொட தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில், தேரர் மேலும் தெரிவித்ததாவது,..

பெல்மதுளை கல்கொத்தாவ ரஜ மகா விகாரையில் பதிவு படுத்தப்பட்டுள்ள சம்ன்தேவ ஆலயப் பொருட்கள் மற்றும் பூஜைக்குத் தேவையான பொருட்கள் என்பன டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி குறித்த விகாரையில் இருந்து வெளியில் எடுக்கப்படும். பின்னர் 6ஆம் திகதி குறித்த பெட்டி வீதி ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு சிவனொளிபாத மலை உச்சியில் பிரதிஷ்டை செய்யப்படும். இரத்தினபுரி வீதி, இரத்தினபுரி அவிசாவளை வீதி , பெல்மதுளை – பலாங்கொடை – பொகவந்தலாவை வீதி வழியாக கொண்டு செல்லப்படும். பலாங்கொடை – பொகவந்தலாவை வீதி, நோட்டன் பிரிட்ஜ் வழியாக நல்லத்தண்ணி வீதி திருத்தப்படாதுள்ளதால் அதனை திருத்தித் தருமாறு உரிய அதிகாரிகளை விகாராதிபதி கேட்டுக் கொண்டார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும்,நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் 28 ஆவது பிறந்த தினம் நேற்று கொண்டாடப்பட்டது. பிறந்த தினத்தையொட்டி (09) காலை கண்டியில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. கண்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் ஆசீர்வாத பூசைகள் இடம்பெற்றதுடன்,கண்டி தலதா மாளிகைக்கு சென்று ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டார். அத்தோடு கண்டி பேராதனை வீதியில் அமைந்துள்ள 'தயா' சிறுவர்கள் காப்பகத்திலுள்ள சிறார்களுடன் கேக் வெட்டி தனது பிறந்த தினத்தை கொண்டாடினார். இந்த நிகழ்வில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்,உப தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (பட உதவி ஆ.ரமேஸ்)

யாழ்ப்பாணம் – கொழும்பு பஸ் சேவை

பேருந்துகளின் ஆவணங்களை முகமாலையில் பரிசோதிக்க முடிவு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் அனைத்து பேருந்துகளின் வழித்தட அனுமதி, சாரதி அனுமதி பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் நாளை வெள்ளிக்கிழமை முதல் முகமாலையில் பரிசோதிக்கப்பட உள்ளதாக வட மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினரும் வட மாகாண தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் தலைவருமான சி. சிவபரன் தெரிவித்தார். வடமாகாண உள்ளூராட்சி அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது நாளை வெள்ளிக்கிழமை முதல் கொழும்பு யாழ்ப்பாண இரவு சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தினதும் வழித்தட அனுமதி பத்திரங்கள், சாரதி அனுமதிபத்திரம் முகமாலையில் பரிசோதிக்கப்படும் எனவும் அதேபோல யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு செல்லும் அனைத்து பேருந்துகளும் புளியங்குளப் பகுதியில் 20 நிமிடங்கள் நிறுத்தி மீண்டும் பயணிக்க அனுமதிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அது தவறும் பட்சத்தில் பொலிசார் மற்றும் வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகளால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு பயணித்த பேருந்து வவுனியாவில் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகி மூவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

சீமெந்து லொறி குடைசாய்ந்து விபத்து; ஒருவர் காயம்

ஓமந்தை விஷேட நிருபர்

கெப்பித்திகொல்லாவ பகுதியில் சீமெந்து லொறி ஒன்று நேற்று (9) குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சீமெந்து ஏற்றிச் சென்ற லொறியொன்று கெப்பித்திகொலாவ, புளியங்குளம் பகுதியில் குடைசாய்ந்துள்ளது. இயந்திரக் கோளாறு காரணமாக லொறி கவிழ்ந்ததில் சீமெந்து பைகள் வீதிக்கு அருகில் சிதறியதாகவும் காயமடைந்தவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். பரமேஸ்வரா கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலர் நாளை வெளியீடு

யாழ். திருநெல்வேலி ஸ்ரீ பரமேஸ்வரா கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீட்டு விழா நாளை 11 ஆம் திகதி மாலை 03 மணிக்கு யாழ். கைலாசபதி கலையரங்கில் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர் பேராசிரியர் திருமதி. சுபதினி ரமேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா ,சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு மலர் வெளியீட்டு விழாவில் வரவேற்புரையை ஸ்ரீ பரமேஸ்வராக்கல்லூரி அதிபர் யோக.தயாளன், வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், கருத்துரைகளை இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ச.முகுந்தன், சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த.செல்வ மனோகரன், நன்றியுரையை பரமேஸ்வராக் கல்லூரி போஷகர் கனக. நமநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

வடக்கு மீனவர்கள் போதைப்பொருள் கடத்தலுக்கு துணை போகக் கூடாது; யாழ். நாக விகாரை விகாராதிபதி கோரிக்கை

யாழ்.விசேட நிருபர்

போதைப்பொருள் கடத்தலுக்கு வடக்கு மீனவர்கள் துணை போகக் கூடாது எனவும் அவ்வாறு கடத்தலில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் அதனை பாதுகாப்பு தரப்பினருக்கோ பொலிஸாருக்கோ தெரியப்படுத்த வேண்டும் என யாழ்ப்பாணம் ஆரிய குளம் நாக விகாரை விகாராதிபதி மீனவர்களிடம் கோரியுள்ளார். வடக்கில் அமைக்கப்படும் கடலட்டை பண்ணைகள் தொடர்பில் , யாழ்.மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விகாராதிபதியை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

அதன் போதே மீனவர்களிடம் விகாராதிபதி இவ்வாறு கோரினார். அவர் மேலும் தெரிவிக்கையில் , வடக்கில் போதைப்பொருள் பாவனைகள் அதிகரித்துள்ளன. பெரும்பாலான போதைப் பொருட்கள் தமிழகத்தில் இருந்து கடல் வழியாக வடக்கு மீனவர்களின் உதவிகளுடன் வடக்குக்கு கடத்தி வரப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

எனவே கடற்தொழிலுக்கு செல்வோர் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக விழிப்புடன் இருந்து , போதைப்பொருள் கடத்தலை தடுத்து நிறுத்த வேண்டும். யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் கடத்தலை தடுத்து நிறுத்த மீனவர்கள் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். கடத்தலுக்கு துணை போகாது, கடத்தல்காரர்கள் தொடர்பில் தகவல்கள் அறிந்தால் , அது தொடர்பில் விரைந்து பாதுகாப்பு தரப்பிற்கோ அல்லது பொலிஸாருக்கோ அறிவிக்க வேண்டும் எனக் கோரினார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 நவம்பர் 10 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	04.41
லுஹர்	11.56
அஸர்	03.18
மஃரிப்	05.50
இஷா	07.02

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் ஐப்பசி 24

ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: மரண யோகம்

திதி: துவிதியை

இராசி பலன்கள்

மேஷம்	பாராட்டு
ரிஷபம்	பொறுமை
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	வெற்றி
மகரம்	மறதி
கும்பம்	செலவு
மீனம்	சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

திடீர் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு:

முட்டையை இறக்குமதி செய்ய அரசு தீர்மானம்

அடுத்த மாத நடுப்பகுதியில் ஏற்பாடு

நாட்டில் நிலவும் முட்டை விலை அதிகரிப்புக்கு தீர்வு காண, அடுத்த மாத நடுப்பகுதியில், முட்டையை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள உணவு பாதுகாப்பு குழுவின் தலைவர் சரத் வீரசேகர எம்பி, பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலை,உற்பத்தி விலையை விடவும் குறைவாக உள்ளதாலேயே , முட்டைக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் சுட்டிக் காட்டினார்.

முட்டைக்கான உற்பத்தி செலவு 46 ரூபாவாக இருக்கையில், கட்டுப்

பாட்டு விலை 43 ரூபாவாக உள்ளது. இதனால், முட்டை உற்பத்தியாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாத நடுப்பகுதியில், முட்டையை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தயாசிறி ஜயசேக்கர எம்பி, எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், உணவுப் பொருட்கள் கொள்கைக்கிணங்க 53 ரூபாவுக்கு முட்டையை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அவ்வாறு முட்டையை விற்பனை செய்ய முடியாத

06

ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் சபாநாயகருடன் நேற்று சந்திப்பு

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலித் நசர் அல்அமீரி நேற்று (08) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவைச் சந்தித்தார்.

இருதரப்பு உறவுகளை பல்வேறு அம்சங்களில் மேலும் மேம்படுத்துவது குறித்து, இதில் கலந்துரையாடப்பட்டது.

அந்நாட்டின் தேசிய சபைக்கு (National Council) பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் முறை தொடர்பில் விளக்கமளித்த தூதுவர், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடினார். சிறுவர்கள், பெண்களை வலுப்படுத்துவது, குறிப்பாக வர்த்தகத்துறையில் பெண்களை வலுப்படுத்துவது குறித்தும் இங்கு கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்திசெய்ய, புதுப்பிக்கத்தக்க சக்தியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதும் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

கொழும்பு துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தி பணிகள் நேற்று ஆரம்பம்

789 மில்லியன் அமெ. டொலர் முதலீடு

நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய சக்தியை பெற்றுக் கொடுக்கும் 789 அமெரிக்க டொலர் முதலீடான,(CWIT) இறங்கு துறையை அமைக்கும் பணிகள் நேற்று (09) ஆரம்பமாகின.

கொழும்பு மேற்கு சர்வதேச இறங்குதுறை எனப்படும் CWIT கொழும்பு மேற்கு சர்வதேச இறங்கு துறை (தனியார்) நிறுவனம் CWIT (Pvt) Ltd), என நிறுவப்பட்டுள்ளதுடன்,இரண்டு கட்டமாக இத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் நிர்மாண நடவடிக்கைகள் துறைமுக கடற்றொழில் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் இலங்கையின் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேயின் பங்களிப்புடன் கொழும்பு துறைமுகத்தில் 'கொழும்பு துறைமுக விரிவுபடுத்தல் திட்ட ' வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த துறைமுக கடற்றொழில் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இரண்டு நட்பு நாடுகளான இந்தியா மற்றும் இலங்கைக்கிடையேயுள்ள தொடர்புகள் இந்தத் திட்டத்தின் மூலம் மேலும் வலுப்படுவதாக தெரிவித்தார். "இலங்கை தற்போது முகம் கொடுத்துள்ள பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்காக வேறு எந்த ஒரு நட்பு நாடும் செய்யாதளவில், உதவித்தொகையாக நான்கு பில்லியன் அமெரிக்க டொலரை இந்தியா வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 789 மில்லியன் அளவில் முதலீடு மேற்கொள்ளப்படும்.

இதனால், இலங்கையில் காணப்படும் டொலர் பிரச்சனைக்கும் தீர்வும் கிட்டும். அதேபோன்று இளைஞர்களுக்கும் பாரிய அளவில் தொழில் வாய்ப்பும் கிடைக்கும். இந்தத் திட்டத்திற்கு நான் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்" என அமைச்சர் தெரிவித்தார்.

CWIT (Pvt) Ltd) நிறுவனத் தொகுதி இந்தியாவின் அதானி சர்வதேச துறைமுக நிர்மாணிப்பு நிறுவனம்(Adani International Port Holding PTE), இலங்கையின் ஜோன் கீல்ஸ் கட்டட நிர்மாண தனியார் நிறுவனம்(John Keels Holding PLC) மற்றும் இலங்கை துறை முக அதிகார சபை போன்ற நிறுவனங்கள் முறையே நூற்றுக்கு 51, 34 மற்றும் 15 என்ற ரீதியில் பங்குகளில் முதலீடு செய்துள்ளன.

இந்நிகழ்வில் துறைமுக, கடற்றொழில் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி. எஸ். ருவன்சந்திர, இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் கித் டீ பனார்ட், பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் ஜாகோப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண பல்கலைகழக இந்து கற்கைகள் பீடத்தின் புதிய பீடாதிபதியாக முன்னேஸ்வரம் தேவஸ்தானம், நல்லூர் சிவன் தேவஸ்தானம் தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்ம நாபசர்மா ஏகமனதாகத் தெரிவாகியுள்ளார்.

சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குபடுத்த நடவடிக்கை

அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படும் -அமைச்சர் சுசில்

சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படுமென, நேற்று (09) பாராளுமன்றத்தில் உரையாற்றிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்துள்ளார் .

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், கல்வித் திணைக்களம் பாடசாலைகளிலுள்ள இடம், கிடைக்கக்கூடிய வசதிகள் மற்றும் ஆசிரியர்களின் கல்வித் தகைமைகள் போன்ற ஏனைய அளவுகோல்களை மாத்திரமே கவனிக்கும் என்றார்.

“சர்வதேச பாடசாலைகள் தொடர்பான வேறு எந்த அம்சங்களையும் நாங்கள் கட்டுப்படுத்த விரும்பவில்லை” எனவும்

06

நீர்வேளாண்மை திட்டங்கள் வெற்றியளிப்பு

இறால் வளர்ப்பு நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு

கடந்த வருடம் 43 மில். டொலர் வருமானம்

இலங்கையின் பொருளாதாரத்துக்கு இறால் வளர்ப்பு கணிசமான பங்களிப்பு செய்வதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கொவிட் 19 தொற்றுப் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இறால் வளர்ப்பின் மூலம் கடந்த வருடம் சுமார் 43 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்தாகவும் தெரிவித்தார்.

'உயிரியல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றின் ஊடாக நிலைபேறான நீர்வேளாண்மை' எனும் தொனிப் பொருளிலான செயலமர்வு, கொழும்பில் நேற்று (08) நடைபெற்றது.

இதில், பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாயம் தொடர்பான அமைப்பின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இலங்கையில் நீர் வேளாண்மை உற்பத்திகளை வலுப்படுத்தவதற்கான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை வழங்கும் கொரிய குடியரசு, உணவு மற்றும் விவசாய அமைப்புக்கு அமைச்சர் நன்றியும்

06

மாணவர்களை தாக்கிய அதிபரை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை

மேல் மாகாண கல்வித் திணைக்களம் தெரிவிப்பு

ஹொரணை, மில்லனிய கனிஷ்ட வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலரை, பணத்தை திருடியதாகக் குற்றம் சாட்டி, தாக்கியமை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அதிபரை பணியிலிருந்து இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மேல் மாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஸ்ரீலால் நோனீஸ் குறிப்பிட்டார்.

விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவில், மத்திய கல்வி அமைச்சின் அதிகாரியொருவரும் அடங்குகின்றார். சம்பவத்துடன் தொடர்புடைய அதிபர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரை எதிர்வரும் (16) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று(08) உத்தரவிட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது, பாடசாலையின் பிரதி அதிபர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக

06

அமைச்சர் டக்ளஸ் பிறந்தநாள்; சர்வதேச இந்துமதபீடம் ஆசி.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இன்று தனது 65ஆவது அகவையில் தடம் பதிக்கின்றார்.

இவர், தமிழ் மக்களுக்கான சேவையை முன்னெடுப்பதில் அல்லும் பகலுமாக செயற்படுபவர். குறிப்பாக வடக்கு மக்களுக்கு தனது அரசியல் வாழ்வில் அர்பணிப்புடன் சேவைகளை முன்னெடுத்து வருகிறார் இவர்.

எப்பொழுதும் யதார்த்தமாக

06

கொழும்பு, டீ,எஸ் சேனநாயக்க கல்லூரியால், தேசியமட்ட "TOP 05" பதக்கம் வழங்கப்பட்ட சம்மாந்துறை மாணவி ஜெலீல் பாத்திமா மின்ஹாஜை (09) நேற்றுக் காலை, புரவலர் ஹாஸிம் உமர் விருது வழங்கி கௌரவித்தார். புரவலரின் கொள்ளுப்பிட்டியிலுள்ள புத்தகப்பூங்கா அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், தினகரன், வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர், புரவலரின் பாரியார் மற்றும் மாணவியின் பெற்றோர்களான ஜெலீல் ஜீ, ஷெய்னம்பு (ஆயிஷா) ஆகியோரும் பங்கேற்றனர்.

மூன்று நிலையியற் குழுக்கள் தொடர்பில்

நிலையியற் பரிந்துரையை முன்வைக்க நான்கு பேர் கொண்ட குழு நியமனம்

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானம்

பாராளுமன்றத்தில் புதிதாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்று நிலையியற் குழுக்கள் குறித்து மேலும் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைக்க, நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற அலுவல்கள்

பற்றிய குழுவில் நேற்று (08) இதுபற்றி தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, பொருளாதார

06

நேபாளத்தில் நேற்று பாரிய நில நடுக்கம்

6.3 ரிச்டர் பதிவு, 06 பேர் உயிரிழப்பு

நேபாளத்தில் நேற்று அதிகாலை 1.57 மணியளவில் நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகியது.

இந்நிலநடுக்கம் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலை கொண்டுள்ளதாக தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம்காலை நேபாள நாட்டின் தலைநகர் காத்மண்டுவில், ரிச்டரில் 4.5 அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டது.

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	231.31	242.45
கனடியன் டொலர்	265.08	277.22
யூரோ	358.78	373.86
ஜப்பான் யென்	2.4417	2.5454
சிங்கப்பூர் டொலர்	255.60	266.39
ஸ்டேலிங் பவுன்ஸ்	412.93	429.30
சுவிஸ் பிராங்க்	360.91	378.36
அமெரிக்க டொலர்	360.88	371.68

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	964.12	கட்டார் ரியால்	99.42
குவைத் டினார்	1,174.43	சவூதி ரியால்	96.73
ஓமான் ரியால்	944.10	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	98.96

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 24ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 14

குறள் தரும் சிந்தனை

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து

களத்தில், முதலில் எதிர்கொள்ளும் போரைத் தாங்கித் தகர்க்கும் ஆற்றலை அறிந்திருப்பின், அதுவே வெற்றி மாலை தாங்கிச் செல்லக்கூடிய சிறந்த படையாகும்.

அதிகரிக்கும் வீதிவிபத்துகளால் அநியாய உயிரிழப்புகள்!

நாட்டில் எரிபொருள் விநியோகத்தில் கட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், வீதிகளில் வாகனவிபத்துகள் இன்னுமே குறைந்து விடவில்லை. மிகவும் கோரமான வாகனவிபத்துகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. உயிரிழப்புகள் குறையவில்லை. விபத்துகளில் படுகாயமடைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

பயங்கரமான வீதிவிபத்துகள் அடிக்கடி நிகழ்கின்ற இடமாக பெருந்தெருக்களே உள்ளன. கொழும்பில் இருந்து வடபகுதி மற்றும் தென்பகுதிக்கான நெடுஞ்சாலைகளில் ஏற்படுகின்ற வாகன விபத்துகள் அச்சம் தருவனவாக உள்ளன. இரவு நேரத்திலேயே வீதிவிபத்துகள் பெருமளவில் நிகழ்கின்றன. பயணிகள் பேருந்துகளே அடிக்கடி விபத்துகளில் அகப்பட்டுக் கொள்கின்றன. அங்கு சம்பவிக்கின்ற அநியாய மரணங்களும் அதிகம்.

இரவில் விபத்துகள் அதிகம் சம்பவிப்பதற்கு காரணம் இல்லாமலில்லை. விபத்துகளுக்கான முதலாவது காரணம் அதிகரித்த வேகம் ஆகும். அடுத்தாக உறக்கக் கலக்கம், மது மற்றும் போதைப்பொருள் பாவனையில் சாரதிகள் ஈடுபடல் போன்றனவும் வீதிவிபத்துகளுக்குக் காரணமாக அமைகின்றன. பொதுவாக நோக்கும் போது சாரதிகளின் அலட்சியப் போக்குகள்தான் இவ்வாறான விபத்துகளுக்குக் காரணமாக அமைகின்றன.

வடக்கில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த சொகுசுரக பேருந்து ஒன்று சில தினங்களுக்கு முன்னர் மோசமான விபத்து ஒன்றில் அகப்பட்டதால், அதில் பயணம் செய்த சாரதி உட்பட மூவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இந்த விபத்துக்கும் சாரதியின் கவனக்குறைவே காரணமாக அமைந்துள்ளது.

அதிவேகமாக பஸ்ஸைச் செலுத்திச் சென்ற சாரதி, பின்னால் வந்த மற்றொரு வாகனத்துக்கு இடம் விடுவதற்கு முற்பட்ட போது தனது வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நிலைமைக்கு உள்ளாகினார். அந்தப் பேருந்து குடைசாய்ந்து உருண்டவாறு மோசமான விபத்துக்கு உள்ளாகியது. மூவர் மரணமடைந்தனர். பஸ்ஸில் பயணம் செய்த பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

அந்த பஸ்ஸின் சாரதி நிதானமாக வாகனத்தைச் செலுத்தியிருப்பாரானால் பேருந்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தி இருக்க முடியும். அதிகரித்த வேகம்தான் அந்த விபத்துக்குக் காரணமாக அமைந்து விட்டது.

எமது நாட்டில் அன்றாடம் இவ்வாறான விபத்துகள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. உயிரிழப்புகளும் பாதிப்புகளும் குறைவின்றித் தொடர்கின்றன. ஆனாலும் விபத்துகள் கட்டுப்பாட்டுக்குள் வந்தபாடாக இல்லை. உயிர்கள் இவ்வாறாக நடுவீதிகளில் பறிக்கப்படுவது கவலை தருகின்றது. எனவே இந்த விடயம் குறித்து நாம் தொடர்ந்தும் அலட்சியமாக இருந்து விட முடியாது. வீதிவிபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். அநியாய உயிரிழப்புகள் தொடர்வதற்கு இடமளிக்க முடியாது.

தூரநகரங்களுக்கு இடையிலான வீதிகள் இப்போது மிகவும் தரமுள்ளதாக உள்ளன. அவை அகலமானதாகவும், 'கார்ப்பட்' இடப்பட்டு அழுத்தமானதாகவும் உள்ளன. இரவு நேரங்களில் அவ்வீதிகளில் வாகனப் போக்குவரத்து மிகவும் குறைவு என்பதால் தூர இடங்களுக்கான பேருந்துகள் அதிக வேகத்தில் பயணம் செய்கின்றன. தூர இடங்களுக்கான சேவையில் ஈடுபடுகின்ற பேருந்து சாரதிகளில் அநேகர் இளைஞர்களாவர். அவர்கள் மத்தியில் பயந்த சுபாவம் கிடையாது. எனவே அதிவேகத்தில் பஸ்களை ஓட்டிச் செல்ல அவர்களால் முடிகின்றது.

விரைவாக பஸ்ஸைச் செலுத்துவதும், நேரகாலத்துடன் பயணிகளை உரிய இடத்துக்குக் கொண்டு சேர்ப்பதும் பெருமைக்குரியவையென அவர்கள் எண்ணுகின்றனர். இடைவழியில் சந்திக்கின்ற உயிராபத்து நிறைந்த வாகனவிபத்துகள் குறித்து அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இதனால்தான் நகரங்களுக்கு இடையிலான வீதிகளில் அடிக்கடி வாகன விபத்துகள் ஏற்படுகின்றன.

தூக்கக் கலக்கம் என்பது அனைவருக்கும் பொதுவானது. அதுவும் நடுநிசி தாண்டிய பின்னர் நித்திரைக் கலக்கம் என்பது தவிர்க்க முடியாததாகும். பேருந்து சாரதிகள் பலர் நித்திரைக் கலக்கத்தினால் விபத்துகளைச் சந்தித்து வருகின்றனர். இரவு நேரத்தில் விடிய விடிய வாகனத்தைச் செலுத்துவதானால் குறிப்பிட்ட வாகனத்தின் சாரதி பகல் நேரத்தில் போதிய ஓய்வு எடுத்திருக்க வேண்டும். பகல் நேர உறக்கமும் அவருக்கு அவசியம்.

ஆனால் இரவுநேர வாகன சாரதிகள் பலர் அதுபற்றிக் கவனம் கொள்வதில்லை. அடுத்தடுத்து மூன்று நாட்கள் தொடர்ச்சியாக இரவுநேரக் கடமையில் ஈடுபடுகின்ற சாரதிகளும் உள்ளனர். இவர்கள்தான் உறக்கக் கலக்கத்தில் விபத்துகளுக்குக் காரணமாகி விடுகின்றனர். இதுவிடயத்தில் பேருந்து உரிமையாளர்கள் உரிய கவனம் மேற்கொள்வது அவசியம். பணம் ஈட்டுவதை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்டு அவர்கள் செயற்படுவது முறையல்ல.

வாகன விபத்துகள் விடயத்தில் போக்குவரத்துப் பொலிசாருக்கும் பெரும் கடமைப்பாடு உள்ளது. போக்குவரத்துக் குற்றங்களைக் கண்டுபிடித்து, தவறிழைக்கும் சாரதிகளுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டியது போக்குவரத்துப் பொலிசாரின் கடமையாகும். பொலிசார் மிகவும் தீவிரமாகவும் நேர்மையாகவும் செயற்பட்டால் வீதிவிபத்துகளை பெருமளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

editor.tkn@lakehouse.lk

Laptop Fiesta வெற்றியாளர்களுக்கு SLT-MOBITEL மடிக்கணினிகள்

நிலையான மற்றும் மொபைல் தொலைபேசி வாடிக்கையாளர்கள் தொடர்ச்சியாக கட்டணப் பட்டியல் கட்டணங்களை செலுத்துவது மற்றும் ரீலோட்களை மேற்கொள்வதை கௌரவிக்கும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL முன்னெடுத்திருந்த Laptop Fiesta நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியாளர்களுக்கு மடிக் கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்கும் வகையிலும், மாணவர்கள், தொழில்முயற்சியாளர்கள், சிறியளவிலான வியாபாரங்கள் மற்றும் அறிவை நாடுவோருக்கு டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வகையிலும் Laptop Fiesta நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியினூடாக நிலையான மற்றும் மொபைல் வாடிக்கையாளர்கள் வருடம் முழுவதிலும் கட்டணப் பட்டியல்கள் கொடுப்பனவுகள் மற்றும் ரீலோட்களை மேற்கொள்கின்றமைக்காக, மடிக்கணனியை அவர்கள் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

இலங்கைக்கு பெருமை சேர்த்த பேராசிரியர் நாலக ஜயக்கொடி

தேசிய மட்டத்திலும், சர்வதேச ரீதியிலும் கல்வி மற்றும் கடல்சார் செயற்பாடுகளில் புகழ்பெற்றவரான பேராசிரியர் கப்டன் நாலக ஜயக்கொடிக்கு, அண்மையில் சுவீடனின், மல்மோவில் இடம்பெற்ற World Maritime University (WMU)இன் 2022 பட்டமளிப்பு விழாவின் போது, சிறந்த பழைய மாணவருக்கான கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த கௌரவிப்பை வழங்கும் தீர்மானம் பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபையைச் சேர்ந்த வெவ்வேறு நாடுகளின் 30 அங்கத்தவர்கள், International Maritime Organization (IMO) ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் நிர்வாகிகள், சுவீடன் அரசாங்கம் மற்றும் மல்மோ நகரைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் International Maritime Organization (IMO)இன் ஆளுநரும் செயலாளர் நாயகமுமான எச்.ஈ.கிட்டாக் லிம், WMU இன் தலைவர் கலாநிதி கிளியோப்பட்ரா துவோம்பியாஹென்ரி, ஆளுநர் சபையைச் சேர்ந்தவர்கள், WMU ஊழியர்கள் மற்றும் பல விசேட விருந்தினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

தெற்காசியாவிலிருந்து இந்தப் பெருமைக்குரிய விருதைப் பெற்றுக் கொண்ட முதலாவதும் ஒரேயொருவருமாக நபராக பேராசிரியர் ஜயக்கொடி திகழ்கின்றார். பேராசிரியர் ஜயக்கொடி உரையாற்றுகையில், "இது மிகவும் உயர்ந்த கௌரவிப்பாக அமைந்துள்ளது. எனது தொழில் வாழ்க்கையிலும் பிரத்தியேக வாழ்க்கையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்துள்ளது. அத்துடன், எனது நாட்டுக்கும் (இலங்கை) இந்த நெருக்கடியான காலப்பகுதியில் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது" என்றார்.

World Maritime University தலைவர் கலாநிதி கிளியோப்பட்ரா துவோம்பியா ஹென்ரி கருத்துத் தெரிவிக்கையில், "கடல்சார் கல்வியில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியவரும், புகழ்பெற்ற பட்டதாரியையும் கௌரவிப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்" என்றார்.

கடல்சார் கல்வி மற்றும் பயிற்சி (MET) பிரிவில் MSc பட்டத்தை பேராசிரியர் ஜயக்கொடி, 2001 ஆம் ஆண்டில் WMU பல்கலைக்கழகத்தில் பெற்றார். அதனைத் தொடர்ந்து, கடல்சார் விவகாரங்கள் புலமைக் கல்வியை, சீனாவின் Dalian Maritime University இல் தொடர்ந்திருந்தார். WMU இல் தமது கல்வியைத் தொடர்கையில், மாணவர் சம்மேளனத்தின் உப தலைவராக பேராசிரியர் ஜயக்கொடி திகழ்ந்ததுடன், தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் Malmo Dragon Boat பந்தயத்தில் WMU ஐ பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார். 2001 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான கௌரவிப்பும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

CINEC இன் உப தலைவராகவும் பேராசிரியர் ஜயகொடி திகழ்ந்ததுடன், Sri Lanka Association of Non State Higher Education Institutes இன் தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் ஆலோசகர், உலக வங்கித் திட்டங்கள் அடங்கலாக உயர் கல்வி அமைச்சின் ஆலோசகராகவும் திகழ்ந்தார். நாட்டின் முன்னணி உயர் கல்வி நிலையங்களில் ஒன்றான Saegis Campus இன் உப வேந்தர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக பேராசிரியர் ஜயகொடி திகழ்கின்றார்.

2019ஆம் ஆண்டில் IES India இனால் இவருக்கு International Leadership Innovation Excellence Award வழங்கப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டில் ஜனாதிபதியினால் 'Award of Academic Excellence' கௌரவிப்பும் வழங்கப்பட்டிருந்தது. கல்விசார் நிபுணத்துவத்தை எய்தும் முன்னர், பேராசிரியர் அனுபவம் வாய்ந்த மாலுமியாக திகழ்ந்ததுடன், பல்வேறு வகையான கப்பல்களை செலுத்தியுள்ளதுடன், 90க்கு அதிகமான நாடுகளுக்கு பயணம் செய்து, பரந்தளவு கலாசாரங்களைச் சேர்ந்தவர்களுடன் பணியாற்றியுள்ளார்.

புத்தளம் மாவட்ட ஆசிரியர்களுக்கான வாய்மொழிமூல ஆங்கிலப் பயிற்சி

அனைத்துலக மருத்துவநல அமைப்பு (IMHOUSA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன்(Ratnam FoundationUK) அமைப்புகளின் நிதியுதவியில் புத்தளம் மாவட்ட பாடசாலைகளில் தரம்1,2 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்படுசார் வாய்மொழிமூல (ABOE) ஆங்கில பயிற்சி இரண்டாவது தொகுதி ஆசிரியர்களுக்காக புத்தளம் புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயத்தில் இரு தினங்கள் நடைபெற்றது.

இப்பயிற்சியில் புத்தளம் பிரதேசத்திலுள்ள கற்பிட்டி, புத்தளம் வடக்கு மற்றும் தெற்கு கல்விக் கோட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 21 பாடசாலைகளைச் சேர்ந்த 42 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இப்பாடசாலைகளில் கற்கும் 4360 சிறார்களின் கற்றல் செயற்பாட்டுக்கு இத்திட்டம் உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு நாள் பயிற்சி Regional English language Supporting Centre இல் கடமையாற்றி ஓய்வுபெற்ற சிறந்த வளவாளர்களான திருமதி கே.பெனடிக், சி.தயாகரன் ஆகியோரால் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் வகுப்பறை ஆங்கில பிரயோகம், சொற்களஞ்சியம் (vocabularies) மற்றும் சொற்றொடர்கள்(phrases)அடங்கிய 16 கருப்பொருட்களுடனான(Themes) செயற்படுசார் பயிற்சி வழங்கப்பட்டது. இதனூடாக ஆசிரியர்களின் சுவரொட்டிகள் காட் சிப்படுத்தப்பட்டன. Zigzag ஆக்கங்களுடனான கதை சொல்லும் நுட்பங்களைப் பயன்படுத்தி அவர்கள் தமது திறமைகளை வெளிபடுத்தியது சிறப்பாக அமைந்திருந்தது.

இப்பயிற்சியின் போது ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட துணை வழிகாட்டல் கைநூல்கள், 16 கருப்பொருட்கள் அடங்கிய லெமினேற் செய்யப்பட்ட கண்கவர் படங்கள் கொண்ட பொதிகள், தேசிய கல்வி நிறுவகத்தின் ABOE செயற்பாடுகள் பதிவேற்றம் செய்யப்பட்ட விரலிகள் மற்றும் பயிற்சியின் போது பயன்படுத்துவதற்கான காகிதம், எழுதுபொருட்களும் வழங்கப்பட்டிருந்தன.

இப்பயிற்சி அனைத்துலக மருத்துவநல அமைப்பின் வதிவிடப் பணிப்பாளரும் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய சு.கிருஷ்ணகுமார் அவர்களினால் நெறிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அடுத்த கட்ட பயிற்சிகள் மட்டக்களப்பு மேற்கு மற்றும் தென்மராட்சி கல்வி வலயங்களில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

எச்.எச்.விக்ரமசிங்க...

'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டத்துடன் கைகோர்த்துள்ள London Stock Exchange குழுமம்

டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC ஸ்ரீ லங்கா ஆகியன கூட்டாக ஆரம்பித்த 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டத்தில் இணைந்து கொண்ட CBL குழுமம் Citi Bank, Sunshine Holdings PLC, Huawei Technologies Lanka Co மற்றும் Unilever ஆகிய பெருநிறுவன கூட்டுறவாளர்கள் வரிசையில் London Stock Exchange (லண்டன் பங்குச் சந்தை) குழுமமும் முழு சமுதாயத்திற்கும் தம் சார்பாகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் நோக்கில் இந்நிவாரணப்பணியில் கைகோர்த்துள்ளது.

இடமிருந்து வலமாக LSEG இன் இலங்கைக்கான தயாரிப்பு முகாமைத்துவ மற்றும் வணிகப் பகுப்பாய்வுத் தலைவர் ஹிரான் ஜயரத்ன, சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைவர் டொக்டர் வின்ய ஆரியரத்ன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும தலைமை நிதி அதிகாரி ஹாங் சோ வோங், LSEG தொழில்நுட்ப மூலதனச் சந்தைகள், லண்டன் பங்குச் சந்தையின் இலங்கை குழுமத்தின் மனிதவளத் தலைவர் புலஸ்திகா வீரசிங்க, CSR மற்றும் நிலைபெறுதகு இணை முகாமையாளர் சாரா சடுன்.

தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக, நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த 200,000 இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்கும் நோக்கில் 'மனிதநேய ஒன்றிணைவு' திட்டத்தின் மூலம் 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதுடன், இதுவரை 115,000 இற்கும் மேற்பட்ட ஆதரவற்ற குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. பயனுள்ள பொருளாதார முன்மாதிரித் திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண வேலைத்திட்டமானது தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

'மனிதநேய ஒன்றிணைவு' நடவடிக்கையில் தமது நிறுவனம் பங்கேற்பது குறித்து கருத்து தெரிவித்த லண்டன் பங்குச் சந்தையின் இலங்கை குழுமத்தின் மனிதவளத் தலைவர் புலஸ்திக வீரசிங்க "லண்டன் பங்குச் சந்தையானது நமது சமூகத்திற்கு ஏதாவது ஒன்றை மாற்றீடாக செய்ய வேண்டும் என்று உறுதியாக நம்புகிறது. அதன்படி,எமது நாட்டுக்கு மிகவும் இன்றியமையாத தருணத்தில் எமது சொந்த மக்களுக்கான கடமையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை வழங்கிய 'மனிதநேய ஒன்றிணைவு' குழுவினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிதி அதிகாரி ஹொங் சூ வொங் கருத்துத் தெரிவிக்கையில்" மனிதநேய ஒன்றிணைவில் எங்களுடன் இணைந்த லண்டன் பங்குச் சந்தைக்கு 'மனிதநேய ஒன்றிணைவு' பணிக் குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எங்கள் பணியை மேலும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு, சமூக நலனை நோக்கமாகக் கொண்ட ஏனைய நிறுவனங்களும் இந்த கூட்டு முயற்சியில் கைகோர்க்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

மேற்படி கூட்டு முயற்சியில் பங்களிக்குமாறு ஏனைய அனைத்து குடிமக்களையும் நிறுவனங்களையும் 'மனிதநேய ஒன்றிணைவு' அழைக்கிறது. எந்தவொரு நபரும் https://dlg.lk/donate_s என்ற இணையத்தளத்தைப் பார்வையிடலாம் மற்றும் அவர்கள் தமது கிரெடிட்/டெபிட் கார்ட்களை பயன்படுத்தி அல்லது வங்கிப் பரிமாற்றம், Star Points, eZCash, genie, வங்கி வைப்பிலிடல் அல்லது 077 642 1421 என்ற எண்ணுக்கு ரீலோட் செய்தல் என பல வழிமுறைகளில் பணம் செலுத்தலாம். அத்துடன் www.karuna.lk Crowdfunding தளம் வழியாகவும் நன்கொடைகளை அளிக்க முடியும்.

'மனிதநேய ஒன்றிணைவு' பற்றிய மேலதிக விபரங்களுக்கு dlg.dialog.lk/manudammehewara க்கு செல்ல முடியும்.

நகர்வலம்

இந்தியாவிலிருந்து கடல் வழியாக கொண்டுவந்த

நுரைச்சோலையில் சிக்கிய 39 களைநாசினி பொதிகள்

புத்தளம் விசேட நிருபர்

பல இலட்ச ரூபாய் பெறுமதியான தடை செய்யப்பட்ட களை நாசினிகளுடன் சந்தேக நபர் நுரைச்சோலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்குடா பிரதேசத்தில் வைத்தே இவ்வாறு இந் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து கடல் வழியாக கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதன் பின்னர் கெப் ரக வாகனத்தில் கொண்டு செல்லப்படுவதாக நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். தர்மகுமாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே இவ்வாறு இந்த தடை செய்யப்பட்ட களை நாசினிகள் கைப்பற்றப்பட்டன.

சாரதி தப்பியோட்டம்; ஒருவர் கைது

பெருமளவிலான களைநாசினிகள் கைப்பற்றப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவை இலங்கையில் விற்பனை செய்வதற்கு தடை செய்யப்பட்டவை என்பதோடு, அவை உரப் பைகளில் மிகப் பாதுகாப்பான முறையில் பொதி செய்யப்பட்டு மீண்டும் ஒரு கிலோ என்ற அடிப்படையில் பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் நடவடிக்கையில் ஈடுபட்ட போதே கெப் ரக வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட களைநாசினிகளை கைப்பற்றி சந்தேக நபரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். வாகனத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் அதன் சாரதி தப்பியோடியுள்ளதோடு, வாகனத்தில் பயணித்த சாரதி உதவியாளர் கைது கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கைப்பற்றப்பட்ட பொதிகளுள் 39 பெரிய உரப் பைகளில் பொதி செய்யப்பட்டிருந்ததாகவும், ஒரு உரப் பையில் மூன்று பெட்டிகள் வீதம் இருந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ். தர்மகுமாரவின் உத்தரவில் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே. ஏ. எஸ். பி. ஜயந்தவின் தலைமையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உடப்பு, வம்பிவட்டான் ஐயப்ப சுவாமி ஆலயத்தின் எண்ணெய்க்காப்பு இன்று

நாளை கும்பாபிஷேகம்

உடப்பு குறூப் நிருபர்

உடப்பு, வம்பிவட்டான் பகுதியிலமைந்துள்ள அருள்மிகு ஐயப்ப சுவாமி ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.44 மணி தொடக்கம் 10.24 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. நேற்று 09ஆம் திகதி விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்று 10 திகதி அதிகாலை 5.30மணி முதல் மாலை 4.00 மணி வரையும் பக்தர்களின் எண்ணெய்க்காப்பு நிகழ்வு நடைபெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து,12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். பிரதிஷ்டா பிரதம குருவிப்ர சிரேஷ்டர் விஷ்ணு வித்தியாசாகரம் உடப்பூர் சிவஸ்ரீ குமார பஞ்சாட்சரக் குருக்கள் கலந்து கொண்டு நிகழ்வுகளைச் சிறப்பிப்பதோடு, உதவிக் குருக்கள்களும் கலந்து கொள்கின்றனர்.

ஆற்றில் நீராடிய மத்ரஸா மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி பலி

காலி கிந்தோட்டையில் சம்பவம்

(வெலிகம தினகர நிருபர்)

காலி நாவின்ன அலிய்யா அறபுக்கல்லூரி மாணவர்கள் இருவர் செவ்வாய் கிழமை (08) பிற்பகல் காலி கிந்தோட்டை ஆற்றில் நீராட சென்ற சமயம் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். கல்லூரியின் தவணை விடுமுறையிலேயே இவ்விரு வரும் நீராட சென்றுள்ளனர்.

கல்லூரியில் தரம் 2 இல் கல்வி பயிலும் காலி ஹிறும்புர பகுதியை சேர்ந்த எம்.எம். யூஸுப் மற்றும் மொரகொட பகுதியை சேர்ந்த எம். மின்ஸாப் ஆகிய இரு மாணவர்களுமே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர்கள் ஆவர். நீரில் மூழ்கி அரைமணித்தியாலத்திற்குள் பிரதேச வாசிகளின் உதவியுடன் இருவரும் மீட்டெடுக்கப்பட்டனர்.

அதில் ஒருவர் நீரினுள் உயிரிழந்த நிலையிலும் மற்றையவர் உயிருக்காக போராடிக்கொண்டிருந்த நிலையிலும் மீட்டெடுக்கப்பட்டனர். காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் சிகிச்சை பலனின்றி மற்றையவரும் உயிரிழந்தார். இருவரது ஜனாஸாக்களும் பிரேத பரிசோதனைக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மரண பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஜனாஸாக்கள் ஒப்படைக்கப்பட்டு நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டன. ஜனாஸாவில் பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

'எவோட்ஸ் 2022' சிறுகதைப் போட்டி முடிவுகள்

புதிய அலை கலை வட்டம் நடத்திவரும் எவோட்ஸ்2022, கலாசாரப் போட்டித் தொடருக்கான சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் முதலாம் இடத்தை மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். சபீனாவும் இரண்டாம் இடத்தை மன்னாரைச் சேர்ந்த கே.அதிவீரனும் மூன்றாம் இடத்தை பதுளைச் சேர்ந்த பி.ஜெயபிரியாவும் பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் விரைவில் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் கொழும்பில் நடைபெறவுள்ளது என புதிய அலை கலை வட்டம் அறியத்தருகிறது.

மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சந்திப்பு

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனுக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பு, நேற்று முன்தினம் (08) கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெஸ்ட் மினிஸ்டர் ஹவுஸில் நடைபெற்றது.

இதன்போது, இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை குறித்தும் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைக்கான உதவிகளை வழங்குதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், இக்கட்டான பொருளாதார நெருக்கடி காலங்களில் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கியமைக்காக உயர்ஸ்தானிகருக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

சிங்கள இலக்கிய மன்றம் மற்றும் இலங்கை வங்கி இணைந்து ஏற்பாடு செய்த இலங்கை வங்கியின் மொழிபெயர்ப்பாளர் ஹேமசந்திர பதிரண தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்த அரசியல் நாவலான ''உத்துர கிணி கனி '' நூல் வெளியீட்டு விழா நேற்று (০৯) மாலை இலங்கை வங்கி தலைமையகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நூலின் முதல் பிரதியை டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசீம் உமர் நூலாசிரியரிடமிருந்து பெறுவதையும் அருகில் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, ஞானம் ஆசிரியர் டாக்டர் ஞான சேகரன் ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்

அகில இலங்கை ஸுபி ஆன்மீகப் பேரவையின் ஆயுட்காலத் தலைவரும் ஸுபி நாயகத்தின் முக்கிய முரீதுகளில் ஒருவருமான கலாநிதி அல் முபாரக் அல் ஹாபிழ் மௌலவி தேசமான்ய முஹம்மது முஹ்சீன் அப்துல்லாஹ் நூரியின் தலைமையில் மீலாத் தின விழா வெள்ளவத்தை டியூடுரப் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது நபிகள் நாயகத்தின் பெயரில் பைத்துகள்,ஸலவாத்துக்கள், இஸ்லாமிய கீதங்கள்,கஸீதாக்கள் பாடப்பட்டன. நிகழ்வின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

சீனன்கோட்டை அல் ஸலாஹ் மத்ரஸாவில் முப்பெரும் விழா

20வது வருடத்தில் காலடியெடுத்து வைத்துள்ள பேருவளை சீனன்கோட்டை அல்ஸலாஹ் அரபுக்கல்லூரியின் முப்பெரும் விழா எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி முதல் மத்ரஸா வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

மத்ரஸாவின் நிர்வாக சபைத்தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ரஸ்வி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மத்ரஸாவிலிருந்து வெளியேறிய அல் ஹாபிழ், அல்ஆலிம் மாணவர்களின் பட்டமளிப்பும் மற்றும் பகுதி நேர வகுப்புகளில் குர்ஆனை மனனமிட்ட மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இந்நிகழ்வில் பிரதம பேச்சாளராக ஜாமியா நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். மேலும் சீனன்கோட்டை பள்ளிச்சங்கத்தலைவர் முக்தார் ஹாஜியார், மத்ரஸாக்களின் உலமாக்கள், அதிபர்கள், புத்திஜீவிகள், பள்ளிவாசல்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் சார்பில் அல்ஹாஜ் ஹிதாம் அலி தெரிவித்தார். அத்துடன் பெண்களுக்கும் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பேருவளை சீனன்கோட்டை, பெருகமலை மத்ரஸதுல் தாக்கிரீன் குர்ஆன் மத்ரஸாவின் முப்பெரும் விழா அண்மையில் மத்ரஸா வளாகத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் போட்டிகளில் வெற்றிபெற்ற மத்ரஸா மாணவன் செல்வன் மொஹமட் அஸீம் ரம்ஸானுக்கு பெருகமலை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபைத்தலைவர் அல்ஹாஜ் அர்ஷத் ஸவாஹிர் பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

தகவல் அறியும் சட்டமூலம் தொடர்பில் கொழும்பில் கருத்தரங்கு

"தகவல் அறியும் சட்டமூலத்தை பயன்படுத்துவது எப்படி?" என்ற தொனிப்பொருளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (13) கொழும்பு மருதானையில் உள்ள (AMYS) அஷ் ஷபாப் தலைமையகத்தில் நடைபெறும்.

AMYS அமைப்பின் அனுசரணையில் இடம் பெறும் இக்கருத்தரங்கில், ஸ்ரீலங்கா முஸ்லிம் போரத்தின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் 25 மாவட்ட இணைப்பாளர்களும் கலந்து கொள்வர்.

விடிவெள்ளிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சிரேஷ்ட செயற்குழு உறுப்பினருமான எம்.பி.எம். பைரூஸ் நிகழ்வில் வளவாளராகக் கலந்து கொள்கிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ இப்திகார் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில், அஷ்ஷபாப் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷேக் மௌலவி எம்.எஸ்.எம். தாஸிமும் கலந்து சிறப்பிப்பர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நாட்டின் 25 மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கின்ற மாவட்ட பணிப்பாளர்களுடைய கூட்டமும் மற்றும் செயற்குழு கூட்டமும் இதனை அடுத்து நடைபெறும் என அமைப்பின் பிரதிச் செயலாளர் சாதிக் சிஹான் தெரிவித்தார்.

வட மத்திய மாகாணத்தில்

பாடசாலை மாணவர்களின் கணிதத் திறனை விருத்தி செய்ய திட்டம்

திறப்பனை தினகரன் நிருபர்

பாடசாலை மாணவர்களின் கணிதத் திறனை விருத்தி செய்வதை நோக்காக கொண்ட புதிய திட்டம் ஒன்றை வடமத்திய மாகாண சபை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன் கீழ் 14 திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

வட மத்திய மாகாணத்தில் உள்ள 37 பாடசாலைகளில் "ஆரம்பமு" என்ற பெயரில் வெற்றிகரமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்முறை க. பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கிடையில் கணிதத் துறையில் உயர் கல்வியை தொடர விரும்பும் மாணவர்களுக்கு கணித பாடத்தை அறிமுகப்படுத்துதல், அதற்காக அவர்களின் திறமைகளை அறிந்து அவர்களுக்கு பயிற்சி அளித்தல், போன்ற பாட பரப்புகள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாணத்தில் தற்போது உயர்தர விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களை கற்கும் பிள்ளைகளில் 11% பேர் மூன்று பாடங்களிலும் தோல்வியடைகிறார்கள்.இதனால் இந்த புதிய திட்டத்தின் ஊடாக வடமத்திய மாகாணத்திலுள்ள சகல மாணவர்களையும் உள்ளடக்கிய கணித/விஞ்ஞான பிரிவில் மூன்று பாடங்களிலும் சித்தியடையச் செய்வதே இதன் பிரதான நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வை,எம்,எம்,ஏ பேரவையின் தேசிய தலைவர் அம்பாரை விஜயம்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் தேசிய தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் தலைமையிலான குழுவினர் அம்பாறை மாவட்டத்திற்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (13) விஜயம் செய்யவுள்ளதாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் நிரந்தர அங்கத்துவ உறுப்பினர் எம்.ஐ. உதுமாலெப்பை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது,

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளரின் அழைப்புக்கு அமைய, அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்யயுள்ள இக்குழுவினர், பொத்துவில் வை.எம்.எம்.ஏ. ஏற்பாட்டில் தலைவர் ஏ.மாபீர் தலைமையில் நடைபெறவுள்ள பிரதான நிகழ்வில் கலந்து கொண்டு பல வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளனர்.

பொத்துவில் நூறுல் ஹுதா அறபுக் கல்லூரியில் ஊடகமும் இன்றைய நிலையும் தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.ஜீ.எம்.தௌபிக் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்.

இதன்போது, அன்றைய தினம் அக்கரைப்பற்று , அட்டாளைச்சேனை, பாலமுனை , நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை , இறக்காமம், சாம்மாந்துறை போன்ற வை.எம்.எம்.ஏ.களினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளிலும் தலைவர் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வுகளில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி, பேரவையின் உப தலைவர் எஸ்.தஸ்தக்கீர், பேரவையின் செயற்றிட்டத் தவிசாளர் கே.எல்.சுபையிர், பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸ் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறால் வளர்ப்பு நாட்டின்... (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், "நீர்வேளாண்மை எனப்படும் பண்ணை முறையிலான கடலுணவு உற்பத்தி, மற்றும் நன்னீர் மீன் போன்ற வளர்ப்பு முறைகள் உணவுப் பாதுகாப்பை அதிகரித்துக் கொள்வதற்கான சிறந்த வழிவகைகளாகும்.

குறிப்பாக கடலுணவு உற்பத்திகளை அதிகளவில் உண்பதன் மூலம், தேவையானளவு புரதத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

நீர்வேளாண்மை என்பது பல்வேறு உற்பத்தி முறைகளையும், வெவ்வேறான நீரியல் சூழல்களையும் கொண்ட உற்பத்தியாக உள்ளது. இதனால், நீர்வேளாண்மையை நிலைபேறானதாக மேம்படுத்துவதில் பல்வேறு நாடுகள் ஆர்வம் செலுத்தி வருகின்றன.

அந்தவகையில், இலங்கையில் நீர்வேளாண்மை உற்பத்திகளை நிலைபேறானதாகப் பேணுவதற்கு, கடற்றொழில் அமைச்சு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறது.

குறிப்பாக, பண்ணை முறையிலான இறால் உற்பத்தி, நாட்டின் பொருளாதாரத்துக்கு கணிசமாக பங்களிக்கும் வகையில் வளர்ச்சியடைந்து வருகின்றது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் 2021 ஆம் ஆண்டு சுமார் 14,414 மெற்றிக் தொன் இறால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன்மூலம் சுமார் 43 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்தது.

இந்நிலையில், நோய் பரவுவது உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு இறால் உற்பத்தி தொடர்ந்தும் முகங்கொடுத்து வருகின்றது.

தொழில்நுட்ப ரீதியான தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு, இவ்வாறான சவால்களை கட்டுப்படுத்த முடியும்.

நாரா நிறுவனத்தின் மேற்பார்வையில், தொற்று நோய்ப் பிரிவை உருவாக்குவதன் மூலம் இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள முடியும் என்று நம்புவதாகவும்" அமைச்சர் தெரிவித்தார்.

சிவனொளிபாத யாத்திரை...

நந்தன கலபொடவின் தலைமையில், நல்லதண்ணி கிராமசேவகர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற கூட்டத்திலேயே, தேரர் இதை தெரிவித்தார்.

மேலும் சிவனொளிபாதமலைக்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்கான சேவைகள், பொது வசதிகள், அரச, தனியார் பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுமெனவும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

லிட்ரோ மற்றும் லாஃப் Gas...

ஏற்பட்டால் நிறுவனத்துக்கு தெரிவிக்குமாறும் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும், லாஃப் எரிவாயுவையும் தட்டுப்பாடின்றி வழங்குவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், லிட்ரோ மற்றும் லாஃப் ஆகிய இரண்டு வகையான சமையல் எரிவாயுக்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பட்ஜட் குழுநிலை விவாத நேரம் பி.ப 7.00 வரை நீடிப்பு

2023ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுத் திருத்தச் சட்டமூலம் தொடர்பான குழுநிலை விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை, ஒன்றரை மணி நேரத்தால் அதிகரிப்பதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுத் திருத்தச் சட்டமூலம் தொடர்பான குழுநிலை விவாதத்துக்கான நேரத்தை அதிகரிப்பது குறித்து எதிர்க்கட்சி முன்வைத்த கோரிக்கைக்கு அமைய நேரத்தை ஒன்றரை மணி நேரத்தால் அதிகரிப்பதற்கு இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய வரவு செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதம் நடைபெறும் நவம்பர் 23 முதல் டிசம்பர் 07 வரையான காலப் பகுதியில் பாராளுமன்ற விவாதங்கள் பி.ப 7.00 மணிவரை நடத்தப்படவுள்ளது. மேலும்,

இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கமைய டிசம்பர் 08 ஆம் திகதி மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு பி.ப 5.00 மணிக்கும் நடத்தப்படவுள்ளது.

சர்வதேச பாடசாலைகளை... (03ஆம் பக்கத் தொடர்)

அமைச்சர் தெரிவித்தார். "சர்வதேச பாடசாலைகளும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் வருகின்றன, மேலும் இந்த பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்களை யும், இந்நிறுவனம் கவனிக்க முடியுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச பாடசாலைகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் வருமா? என எதிர்க் கட்சித் தலைவர் இதன் போது கேள்வி எழுப்பினார்.

நிலையியற்பரிந்துரை... (03ஆம் பக்கத் தொடர்)

உறுதிப்படுத்தல் குழு ஆகிய மூன்று குழுக்களுமே இவ்வாறு அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ.த சில்வா, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கௌரவ சாகர காரியவசம் ஆகியோரே இந்த விசேட குழுவில் நியமிக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

தற்பொழுது நடைமுறையிலுள்ள நிலையியற் குழுக்களான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு), அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு), அரசாங்க நிதி பற்றிய குழு ஆகிய குழுக்களின் செயற்பாடுகள் இந்தப் புதிய நிலையியற் குழுக்களின் விடயதானங்களுடன் மேலெழுகை (OVER LAP) செய்கின்றனவா? என்பது குறித்து ஆராய்ந்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், அது பற்றிய பரிந்துரைகளை இந்தக் குழு முன்வைக்கும்.

இதற்கமைய, நாளை வெள்ளிக்கிழமை பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூடி இந்தக் குழுவின் பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் இங்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

முட்டையை இறக்குமதி... (03ஆம் பக்கத் தொடர்)

நிலையிலும், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு முட்டை வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக இலட்சக்கணக்கில் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

உணவு பாதுகாப்புக் குழு என்ற வகையில், நாம் அவர்களை அறிவுறுத்தியிருந்தும் அவர்கள் அதனை பொருட்படுத்தாது செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் முட்டை உற்பத்தியாளர்கள் மற்றும் முட்டை வர்த்தகத்தில் ஈடுபடுவோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

முட்டைக்கான உற்பத்தி செலவு அதிகரித்து கட்டுப்பாட்டு விலை அதனை விட குறைவாக காணப்படுவதால், முட்டை உற்பத்தித் துறை பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதே வேளை இந்தியா, அமெரிக்கா உட்பட உலகளாவிய ரீதியில் உணவு நெருக்கடி ஏற்படுமானால் பால் மா, பருப்பு,பெரிய வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் பெரும் நெருக்கடி நிலை ஏற்படும்.அது தொடர்பில் நாம் எம்மை தயார் படுத்திக் கொள்வது அவசியம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

458 கிலோ கேரள கஞ்சா...

கைது செய்யப்பட்ட இருவரில், ஒருவர், மண்டைதீவை சேர்ந்தவர் எனவும் மற்றையவர் நாச்சிக்குடாவை சேர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது. சந்தேக நபர்களை கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சர் அலி சப்ரி டுவிட்டரில்...

இது தொடர்பான பொதுமக்கள் கேள்விகளை #LKaskMP ஊடாக முன்வைக்க முடியும்.

அன்றைய தினம் நேரடியாக இணைந்தும் கேள்விகளை முன்வைக்க முடியும்.

பொதுமக்கள் மைய பாராளுமன்றத்துக்காக மக்கள் பிரதிநிதிகளையும் பொதுமக்களையும் நேரடியாக தொடர்புபடுத்தும் வகையில், பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இந்த நேரடி டுவிட்டர் கலந்துரையாடல் தொடரை ஏற்பாடு செய்துவருகின்றது.

கந்தகாடு மோதலில் இதுவரை...

பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்தார். மோதலில் ஈடுபட்ட 215 கைதிகள் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மோதலின் போது தப்பியோடிய 14 கைதிகள் புலதிசிபுர மற்றும் சேருநுவர பொலிஸ் நிலையங்களில் இருப்பதாகவும், காயமடைந்த 04 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பிரிகேடியர் ரவி ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

எனினும், தப்பியோடிய 13 கைதிகள் இன்னும் சரணடையவில்லை.

மூழ்கிக்கொண்டிருந்த கப்பலில்...

எனினும், விபத்துக்குள்ளான படகிலிருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையர்களும் தற்போது வியட்நாம் தலைநகர் ஹனோயிலிருந்து 1,800 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வுங் தாவோ துறைமுகத்துக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

இதுபற்றி வியட்நாம் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது, இவர்கள் பதற்றமற்றமின்றி மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்,

இவர்களுக்கான தங்குமிடம், உணவு போன்றவற்றை அரசாங்கம் மிகவும் கௌரவமான விதத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

முன்னதாக நவம்பர் (08) திகதி இரவும் (09) திகதி அதிகாலையும் இலங்கையரை அதிகாரிகள் கரைக்கு கொண்டுவந்து மூன்று இடங்களில்Vung Tau city, district. Xuyen Moc and Dat Do தங்கவைத்தனர். உணவு அடிப்படை வசதிகளும் இவர்களுக்குஞ வழங்கப்படுகிறது.

சிலர், சிகரெட் கூட வாங்கி புகைப்பிடிக்கின் றனர்.

நேற்று அதிகாலை சிரேஸ்ட இராணுவ அதிகாரியொருவர் இலங்கையரை சென்று பார்த்ததுடன், வியட்நாம் அரசாங்கம் சகல உதவிகளையும் செய்யுமென உறுதியளித்தார்.

தாங்கள் அங்கு மகிழ்ச்சியாக இருப்பதாக தெரிவித்துள்ள இலங்கையர், அரிசி மற்றும் பாண் ஆகிய உணவுகளை குறிப்பிட்டு அவை மிகவும் ருசியாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையர் தங்க வைக்கப்பட்டுள்ள பகுதிகளை சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

நவம்பர் ஆறாம் திகதி மதியம் ஹெலியோஸ் லீடர் கப்பல் 303 இலங்கையர்களை காப்பாற்றியது. அவர்களுடைய கப்பல் ஏற்கனவே 40 மணி நேரம் செயல் இழந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

அந்த கப்பலில் இருந்து மீட்கப்பட்ட இலங்கையர் ஒருவர், நாட்டிலிருந்து மியன்மார் சென்று அங்கிருந்து படகு மூலம் பயணித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, வுங் டாவுவில் இலங்கையர் தங்கவைக்கப்பட்டுள்ள இடத்துக்குச் சென்று நிலைமையை மதிப்பிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவுக்கு செல்லும் ...

மனோ கணேசன் ஆகியோர் கூட்டாக கொண்டு வந்த கவன ஈர்ப்பு பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இந்நாட்டில் நாம் 1958, 1977, 1983 கால கட்டங்களில் இனவாத கலவரங்களை பார்த்துள்ளோம். 1971, 1988, ஆண்டுகளில் தெற்கில் ஆயுதப் போரையும் பார்த்துள்ளோம். 2004இல் சுனாமி அழிவை பார்த்துள்ளோம். அதன் பின் 30 ஆண்டுகால போருக்கு முகம் கொடுத்துள்ளோம்.

எதுவாக இருந்தாலும், இன்றைய நிலைமையைப் போல்,எக்காலத்திலும் நமது மக்கள் நெருக்கடியை சந்திக்கவில்லையென எண்ணுகிறேன். எக்காலத்திலும் மக்கள் எப்படியாவது மூன்று வேளையும் சாப்பிட்டனர். பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தபடி வாழ்ந்தனர். இந்த காலத்தில்தான் இப்படி மிகவும் மோசமான நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றனர்.

நாம், இன்று இந்த யோசனையை கொண்டு வந்ததன் நோக்கம், இந்த நெருக்கடிக்குள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பிரிவினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு நிவாரணங்களை ஏற்பாடு செய்யுங்களென்ற கோரிக்கையின்படியேயாகும்.

அது, அரசின் கடப்பாடு மட்டுமல்ல,அரசின் கடமையுமாகும். எதிரணி என்ற முறையில் நாம் அதை அரசுக்கு எடுத்து கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று, இந்நாட்டில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு, துன்புறும், நலிவுற்ற பிரிவினர், தோட்ட தொழிலாளர்களென்பதை நான் அன்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன். இடதுசாரி தலைவர் என்பதால் இது உங்களுக்கு நன்கு தெரியும்.

இதை நாம் எப்போதும் சொல்லி வந்தோம். இதை,யாரும் கவனத்தில் பெரும்பாலும் எடுக்கவில்லை. இன்று உலகம் சொல்ல ஆரம்பித்து விட்டது. இன்று ஐ.நா அமைப்புகள் கூறுகின்றன.

ஐ.நா உணவு விவசாய ஸ்தாபன விசேட அறிக்கையில் என்ன கூறப்பட்டுள்ளது? இந்நாட்டில், அதிகூடிய உணவின்மையால், அதிகம் பெண் தொழிலாளர்களே பாதிக்கப்பட்டுள்ளதோக கூறுகிறது. தோட்டப்புறத்தில் பெண்கள் மேலதிக சுமையை சுமந்து குடும்பங்களை நடத்துகின்றனர்.

அதேவேளை உலக உணவு நிறுவனம், தோட்டப்புறங்களில் உணவின்மை 51 வீதமென கூறுகிறது. நகரப் பகுதிகளில் 43 வீதமும், கிராம பகுதிகளில் 34 வீதமும் என கூறுகிறது.

இந்த உணவின்மை என்பது ஜனாதிபதி, தினந்தோறும் பேசும் ஒரு விஷயம் ஆகும். நான் சொன்னது போன்று, மூன்று வேளை உணவு என்பது, இன்று இரண்டு வேளை ஆகிவிட்டது. இரண்டு வேளை சாப்பிட்டவர்கள் இன்று ஒருவேளை தான் சாப்பிடுகிறார்கள். அது அதிகம் நிகழ்வது இங்கேதான்.

இதை நாம் கூறுவதை விட, ஐ.நா இன்று கூறுகிறது. உலகம் கூறுகிறது என்பதை அரசாங்கம் அறிய வேண்டும். அது மட்டுமல்ல, ஐ.நாவின் நவீன அடிமைத்துவத்துக்கான அறிக்கையாளர் டோமாயா ஒபகாடா, சமீபத்தில் நடந்து முடிந்த ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் அவைக்கு அறிக்கை சமர்பித்துள்ளார்.

இலங்கையில் பெருந்தோட்டங்களில் காணப்படும் ஒடுக்கு முறைக்கு பின்னால் இனத்துவ காரணம் இருக்கிறதென கூறுகிறார்.

பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும்துன்பங்களுக்குகாரணமாக அவர்கள் தொழிலாளர் என்பதை விட, அவர்கள் சிறுபான்மை தமிழர்கள் என்ற காரணமும் உள்ளதாகவும் அவர் கூறுகிறார். இது ஒரு பாரதூரமான குற்றச்சாட்டு என்றும் அவர் தெரிவித்தார்.

நேபாளத்தில் நேற்று பாரிய... (03ஆம் பக்கத் தொடர்)

டோட்டி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 03 பேர் பலியானதாக முதற்கட்ட தகவல் வெளியானது. இந்நிலையில், நிலநடுக்கத்தால் வீடுகள் இடிந்து விழுந்ததில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 06 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அமைச்சர் டக்ளஸ்... (03ஆம் பக்கத் தொடர்)

சிந்திக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மென்மேலும் அவரது சேவையை தொடரவும் அவரது அரசியல் வாழ்வு பலமடையவும் சர்வதேச இந்துமத பீடம் சார்பாக இறைவனை மனதார பிரார்த்தித்து, ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா வாழ்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களை தாக்கிய... (03ஆம் பக்கத் தொடர்)

சந்தேகிக்கப்பட்டு தமது அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள, பொலிஸ் ஜீப் வண்டி தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்வாளரிடம் அறிக்கையொன்றை பெறவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார்.

மாணவர்களின் வாக்குமூலத்துக்கமைய, ஜீப் வண்டிக்குள் மின்சாரம் தாக்கப்பட்டமை தொடர்பிலான சம்பவத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்த அறிக்கை பெறப்படவுள்ளது.

ஆசிரியை ஒருவரின் பையிலிருந்த பணத்தை திருடியதாகக் குற்றம்சாட்டி, மாணவர்களை நூலகத்துக்குள் அழைத்துச் சென்று அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

IMF பணிப்பாளருடன்...

முன்னெடுத்துள்ளார்.

அதற்கமையவே, நேற்று செவ்வாய்க்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அன்டலினா ஜோர்ஜியேவாவையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, கடன் முகாமைத்துவம் தொடர்பில் வெற்றிகரமான கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பில், கானா நாட்டின் நிதி அமைச்சர் மற்றும் மாலைதீவின் சபாநாயகர் மொஹமட் நஷீட் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தனுஷ்கவின் வழக்கு ...

நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானார். இது தொடர்பான வழக்கு அடுத்த வருடம் ஜனவரி 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதனிடையே, தனுஷ்க சார்பில் புதிய பிணை விண்ணப்பத்தை தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளதாக சட்டத்தரணி கலாநிதி சானக சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாலியல் குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ள தனுஷ்க குணதிலக்கவை, அனைத்து வகையான கிரிக்கெட் டிலிருந்தும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் இடைநிறுத்தியுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கை அடுத்தாண்டு ஜனவரி 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரவிக்கப்படுகின்றது.

ஒரு லீற்றர் டீசல் ரூ.12...

ஹேஷா விதானகே தெரிவிக்கின்றார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில், விலைசூத்திரத்திரத்தை பயன்படுத்தி விலை அதிகரிக்கப்படுகின்றது. குறைவடைகின்ற சந்தர்ப்பத்தில் ஏன் மக்களுக்கு எரிபொருளை குறைந்த விலையில் பெற்றுக்கொடுக்க முடியாதெனவும் ஹேஷா விதானகே வினவினார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க டி.வி சானக்க, டீசல் ஒரு லீற்றர் 12 ரூபா நட்டத்திலும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 22 ரூபா நட்டத்திலும் விற்பனை செய்யப்படுகின்றது.

உலக சந்தையில் கடந்த வாரம் எரிபொருளுக்கான விலை குறையாமல், அதிகரித்திருந்ததை ஹேஷா விதானகே புரிந்துக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

குரங்கு அம்மையை தடுக்க...

பரவக்கூடுமென்று கூறப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் தங்கள் நெருங்கிய தொடர்புகளை 21 நாட்கள் வரை கண்காணிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

08 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இந்த நோய்த்தொற்று ஏற்பட்டால் அது தீவிரமாக இருக்கும்.

அத்துடன், கர்ப்பிணிப் பெண்களின் கருக் கூட சிதைவடையலாமென்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பெரியம்மை வைரஸ் 1985 இல் நாட்டிலிருந்து அழிக்கப்பட்டது என்பதை சுட்டிக்காட்டிய மருத்துவர் தீபால் பெரேரா, காய்ச்சலுடன் கூடிய சொறி, தோல் புண் போன்ற குரங்கம்மை போன்ற அறிகுறிகள் இருந்தால், பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பாடசாலைகள் அல்லது வேறு எந்த பொது இடத்திற்கோ அனுப்ப வேண்டாமென்றும் அவர் கேட்டுள்ளார்.

டிசம்பர் மாத இறுதிக்குள் அதிபர்...

நிரப்ப முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) நடைபெற்ற வாய்மூல விடை க்கான வினாக்கள் வேளையில் கிங்ஸ்நெல்சன் எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளுக்கு 16 ஆயிரம் அதிபர்கள் தேவைப்படுகின்றனர். இந்நிலையில் தற்போது பன்னிரண்டாயிரம் அதிபர்களே சேவையில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

நேர்முகப் பரீட்சையின் போது சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள அதிபர்கள் நீதிமன்றத்தின் மூலம் இணக்கப்பாட்டுக்கு வந்ததும் நாலாயிரம் பேருக்கு அதிபர்கள் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே வேளை, கல்வி மறு சீரமைப்பு நடவடிக்கைகளால், அடுத்த ஜனவரி மாதம் முதல் நிர்வாக மாற்றங்களை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சர்ச்சைக்குரிய பிரச்சினைகளாக மாறியுள்ள கல்வி வலயங்களை அதிகரிக்கும் பிரச்சினைகளுக்கும் இதன் மூலம் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

26,000 பட்டதாரிகள் அபிவிருத்தி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் பெருமளவானோரை ஆசிரியர் சேவைகளுக்குள் நியமிப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சீனி வரி குறைப்பின்...

வரி அறவீடு மூலமே அரசாங்கத்தின் செலவினங்களை முன்னெடுக்க முடியும். நாட்டில் 40 இலட்சம் குடும்பங்கள் நிவாரணம் கோரி விண்ணப்பித்துள்ளன.

அத்துடன் பொருளாதார நெருக்கடி மூலம் ஏற்பட்டுள்ள சமூக நெருக்கடியை தீர்ப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். வரி வருமானம் மூலம் மாத்திரமே அதனை ஈடு செய்து கொள்ள முடியும்.

வெளிநாட்டு அந்நிய செலாவணியை அதிகரித்துக் கொள்வதற்காக அரசாங்கம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஈடுபட்டுள்ளோர் வருடத்தில் 3,000 டொலர்களை நாட்டுக்கு அனுப்புவார்களானால் இரண்டு சக்கர வாகனம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கும் 20 ஆயிரம் டொலர்களை அனுப்புவார்களானால் நான்கு சக்கர வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சீனி வரி குறைப்பு மூலம் 1,676 கோடி ரூபாவை அரசாங்கம் அர்ப்பணித்துள்ளது.

அதன் மூலமாக பிரதிபலனை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. எனினும் அதன் பிரதிபலன் மக்களுக்கு கிடைக்கவில்லை.

அவ்வாறு இழக்கப்பட்டுள்ள நிதியை மீள பெற்றுக் கொள்ளும் வகையில் பின் தொடர்ந்து சென்று அதனை மீளப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை வருமான வரி திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

இலங்கை மதுவரித் திணைக்களம்

பெறுகை அறிவித்தல்

இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கான துப்புரவு சேவைகளை வழங்குதல் - 2023

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகம், இல-353, கோட்டே வீதி, இராஜகிரிய, உதவி மதுவரித் ஆணையாளரின் அலுவலக வளாகம் (மேல் மாகாணம் 01) இல-65, பாகொட வீதி, நுகேகொட, விசேட நடவடிக்கை பிரிவு, இல 137/E/04, சியம்பலாபே தெற்கு, சியம்பலாபே, இலங்கை மதுவரித் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு இல 87/A, வெலிக்கடை வீதி, புத்தமுவ, இராஜகிரிய மற்றும் கொழும்பு நகர அலுவலகம், இல-223C, நாவல வீதி, நாரஹேன்பிட்ட ஆகிய இடங்களுக்கு **துப்புரவு சேவைகளை வழங்குவதற்கு** இலங்கையிலுள்ள துப்புரவு முகவர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன.

a. ஒவ்வொரு மனு கட்டளைகளுக்காகவும் மீளப்பெற முடியாத **ரூ.2,500/-** கட்டணத்தைச் செலுத்தி திணைக்களத்தின் காசாளரிடம் பெற்று இரசீதினை **2022.11.10 ஆம் திகதி முதல் 2022.11.30** ஆம் திகதி வரை வார நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணிக்குள் நிதிப் பிரிவில் சமர்ப்பிப்பதன் மூலம் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

b. மனுப் பாதுகாப்பு தொகை **ரூ.50,000/-** (மீளப்பெற கூடிய தொகையாக) மனு ஆவணங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

c. மனுக்கள் **2022.12.01** ஆம் திகதி பி.ப.2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இல 353, கோட்டே வீதி,
இராஜகிரிய.

பெயர் மாற்றம்

இல. 79, புதிய வளத்தாப்பிட்டி மல்வத்தை, சம்மாந்துறை எனும் முகவரியில் வசிக்கும் 198200904395 இலக்க அடையாள அட்டையைக் கொண்ட க. சந்திரமோகன் ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் "கந்தன் சந்திர மோகன்" என எனது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்றிலிருந்து எனது பெயரை "சந்திரமோகன்" என மாற்றிக் கொள்கின்றேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

"சந்திரமோகன்"

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

பொதுமக்களுக்கு அறிவிப்பு

LION BREWERY (CEYLON) PLC

""Lion Beer Sri Lanka 141" Anniversary Limited Time Gift""
PHISHING SCAM (ஃபிஷிங் மோசடி)

சமூக ஊடகங்களின் ஊடாக ஃபிஷிங் மோசடி செய்தி ஒன்று வலம் வருவது குறித்த எச்சரிக்கை அறிவிப்பு. இந்த செய்தியில் இருக்கும் லிங்க் லயன் தயாரிப்புகளை ஒத்த படங்களை கொண்ட ஒரு இணைய பக்கத்திற்கு இட்டு செல்லும். பக்கத்திற்கு வருபவர்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளித்தால் பணப் பரிசு வெல்லாம் என்றவாறு இருக்கும்.

இது லயன் ப்ரூவரி (சிலோன்) பி.எல்.சி இன் உத்தியோகபூர்வ முன்னெடுப்பு அல்ல என்பதை அறியத்தருகின்றோம். இந்த லிங்க்கை க்ளிக் செய்யவோ பகிரவோ வேண்டாம் என பொது மக்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

பெறுகை அறிவித்தல்

குண்டசாலை பிரதேச சபையின் கேள்விதாரர்களின் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்காக விடுக்கப்படும் கேள்வி அழைப்பு

குண்டசாலை பிரதேச சபைக்கு சொந்தமான திகன பல்நோக்குக் கட்டிடத்தின் முதலாம் மாடியில் 05 கடை அறைகளுக்காக கேள்விதாரர்களின் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குத்தகைக்கு விடுவதற்கு மாநகர சபை தீர்மானித்துள்ளது. அத்தீர்மானத்தின் பிரகாரம் சபையினால் சமர்ப்பிக்கப்படும் திட்டமிடலுக்கு அமைவாக குறித்த நிர்மாணங்களை சபையின் மதிப்பீட்டின் கீழ் நிறைவேற்றுவதற்கும் அம்மாடியில் குறித்த கடையின் தரைக்காக சபையினால் பரிந்துரைக்கப்படுகின்ற கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் குத்தகைத் தொகை அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியில் மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் குறித்த கேள்வி ஆவணங்களை 2022.11.10 முதல் 2022.11.23 வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00 வரை குண்டசாலை பிரதேச சபை அலுவலகத்தில் காசு செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

02. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட 02 தொகுதிகளைக் கொண்ட விண்ணப்பத்தை தலைவர், குண்டசாலை பிரதேச சபை, மெனிக்ஹின்ன என்ற முகவரிக்கு 2022.11.24 பி.ப. 2.00 இற்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சபைச் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம். அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் கேள்வி விண்ணப்பத்தை உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கின்ற கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி விலைமனுக்கள்' என்று குறிப்பிடுதல் வேண்டும். அங்கு 02 தொகுதிகள் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிடப்பட்டு வேறு வேறு உறைகளில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. பலகடைகளுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதாயின் அதற்காக வேறுவேறாக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. சகல கேள்வி விண்ணப்பங்களும் 2022.11.24 பி.ப. 2.30 இற்கு, கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படுவதுடன் அதற்காக கேள்விகளை சமர்ப்பிக்கும் நபர்களுக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரித்தல் அல்லது வேறேதும் தீர்மானம் எடுத்தல் குண்டசாலை பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியதாகும்.

அட்டவணை

கேள்விதாரர்களின் செலவில் நிர்மாணிக்கப்பட்டு குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் கடை அறைகள் பற்றிய விபரம் கீழ்க்காணுமாறு அமையும்.

கடை அறை இலக்கம்	உள்ளக தரைப் பிரதேசம்	அதற்காக கேள்விதாரர் செலவிட வேண்டிய ஆகு செலவு	மீளளிக்கப்படும் பிணை வைப்பு	கேள்விப் படிவக் கட்டணம்
01	153 ச. அடி	3825.00	5000.00	1500.00
02	198 ச. அடி	4950.00		
03	198 ச. அடி	4950.00		
04	167 ச. அடி	4175.00		
05	89 ச. அடி	2225.00		

பி.எச்.எஸ். ரஞ்சர அக்மீமன
தலைவர்
குண்டசாலை பிரதேச சபை
மெனிக்ஹின்ன.

கட்டுநாயக்க சீதுவை நகர சபை

பெறுகை அறிவித்தல்

கட்டுநாயக்க சீதுவை நகர சபைக்கு 2023-01-01ம் திகதி முதல் 2023-12-31ம் திகதி வரை பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு பெற்றுள்ள சேவை நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக 2500.00 ரூபா தொகையுடன் மீளளிக்கப்படும் 5000.00 ரூபா வைப்புக் கட்டணத்தையும் செலுத்தியதன் பின் கேள்விப் படிவங்களை 2022-12-01ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை 2022-12-01ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''செயலாளர், கட்டுநாயக்க சீதுவை நகர சபை, சீதுவை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் என்பதுடன் அதன் பின் எவ்விதத்திலும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்வி விண்ணப்பங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''பாதுகாப்பு சேவைகளுக்கான விலைக்கோரல் 2023'' எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். அழித்துள்ள, வெட்டி விடப்பட்ட மற்றும் திரிபுபடுத்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

2022-12-01ஆம் திகதி கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விப்படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை நகர சபை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பின்வரும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 011-2265103

டீ.கே. சமித் நிஷாந்த பிரனாந்து,
தலைவர்,
கட்டுநாயக்க சீதுவை நகர சபை.

2022-11-04
கட்டுநாயக்க சீதுவை நகர சபை.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

பிரதான அலுவலகம் மற்றும் வேரஹெர அலுவலக வளவுகளின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்கள் கோரல் - 2023

பெறுகை இலக்கம்: DMT/H/ACC/13/18/2022

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் வேரஹெர அலுவலக வளவுகளின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. பிரதான அலுவலகத்திற்கு மட்டும் அல்லது வேரஹெர அலுவலகத்திற்கு மட்டும் அல்லது இரண்டு அலுவலகங்களுக்குமான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

02. விலைக்கோரலுக்கு இயைபான சகல விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கிய விண்ணப்பப் படிவங்களை 2022-11-11ஆம் திகதி முதல் 2022-11-30ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
   i. பிரதான அலுவலகத்திற்கான மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணம் - ரூபா 3000.00
   ii. வேரஹெர அலுவலகத்திற்கான மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணம் - ரூபா 3000.00

03. பிரதான அலுவலகத்திற்கான மீளளிக்கப்படும் 50,000.00 ரூபா விலைக்கோரல் பிணை முறியொன்றையும் வேரஹெர அலுவலகத்திற்கான மீளளிக்கப்படும் 65,000.00 ரூபா விலைக்கோரல் பிணை முறியொன்றையும் ஆவணத்தின் 2.8 மற்றும் 6.8 பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை 2022-11-01ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு. மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், நாராஹென்பிட்டி எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம். 2022-12-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும் என்பதுடன் அதன் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக விலைமனு கோரல் - 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 011-2674846 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,
இல. 341, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

ரூ.130,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

22.00% 2024 "A" தொடர்களின் கீழ் ரூ.50,000 மில்லியனையும் 18.00% 2027 "A" தொடர்களின் கீழ் ரூ. 40,000 மில்லியனையும் 18.00% 2032 "A" இன் தொடர்களின் கீழ் ரூ. 40,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 நவெம்பர் 11ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

தொடர்கள்	22.00% 2024 'A'	18.00% 2027 'A'	18.00% 2032 'A'
ISIN*	LKB00224K150	LKB00527E019	LKB01032G014
முன்வைக்கப்பட்ட தொகை	ரூ. 50,000 மில்லியன்	ரூ. 40,000 மில்லியன்	ரூ. 40,000 மில்லியன்
நறுக்கு வீதம்	22.00% ஆண்டொன்றிற்கு	18.00% ஆண்டொன்றிற்கு	18.00% ஆண்டொன்றிற்கு
வழங்கப்பட்ட திகதி	2022 நவெம்பர் 15	2022 மே 01	2022 யூலை 01
முதிர்வுத்திகதி	2024 நவெம்பர் 15	2027 மே 01	2032 யூலை 01
நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள்	15 மே & 15 நவெம்பர்	01 மே & 01 நவெம்பர்	01 சனவரி & 01 யூலை
ஒன்று சேர்ந்த வட்டி வீதம்	ரூ.100.00 இற்கு ரூ.0	ரூ.100 இற்கு ரூ.0.6961	ரூ.100 இற்கு ரூ.6.7011
ஏலவிற்பனைத்திகதி	2022 நவெம்பர் 11, வெள்ளிக்கிழமை		
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும்	2022 நவெம்பர் 11, வெள்ளிக்கிழமை, மு.ப.11.00 மணி		
தீர்ப்பனவுத் திகதி	2022 நவெம்பர் 15		
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை	ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/=) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/- பெருக்கங்களிலிருந்து)		

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297	என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
இலங்கை வங்கி	2541938	மக்கள் வங்கி	2206783
கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி	2317777	சம்பத் வங்கி பிஎல்சி	2305842
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319	செலான் வங்கி பிஎல்சி	2456340
ப்ரெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் லிமிடெட்	2639883	வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

எம்.இசட்.எம். ஆசிம்
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம் : www.cbsl.gov.lk

திகதி 08.11.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4933
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,269,070.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.40,054,633.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 5 3 3 1 0 7

JATHIKA SAMPATHA
DRAW NUMBER : 1388
TOTAL PRIZE WON IN THIS DRAW Rs. 1,905,400.00
WINNING ZODIAC GEMINI WINNING NUMBERS 9 5 8 1 9 4
THE SUPER PRIZE OF THE NEXT DRAW Rs.10,536,890.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3175
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,703,120.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 01 33 44 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,700,360.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 963
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,543,060.00
V 45 63 66 80
வெற்றி இலக்கம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 132,147,805.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 242
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,742,520.00
இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 01 10 19 57
விசேட இலக்கினம் கடகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,674,627.60

லோட்டோ 27+ Mega POWER மேகா பவர் மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1281
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,464,380.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.279,816,798.00
ஆங்கில எழுத்து D சுப்பர் நம்பர் 23 வெற்றி எண்கள் 07 22 55 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
ஜாதிக லொதரய்யி மண்டலய தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
+94 112429341
Hotline 1949

கிழக்கின் குரல்

அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே.சங் கிழக்கு ஆளுநருடன் பேச்சுவார்த்தை

I.M.F.ஊடாக மக்கள் நலத் திட்டங்களுக்கு உதவிகள்

மட்டக்களப்பு சுழற்சி நிருபர், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர், மட்டக்களப்பு விசேட நிருபர், கல்லடி குறூப் நிருபர்

கிழக்கு மாகாணமானது விவசாயத் துறையை நம்பியுள்ள மாகாணமாகக் காணப்படுவதால், இம்மாகாணத்தில் விவசாயத்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதுடன், நஞ்சற்ற விவசாயச் செய்கையை மேற்கொண்டு உலக நாடுகளுக்கே நெல் ஏற்றுமதி செய்யும் ஒரு மாகாணமாக கிழக்கு மாகாணத்தை முன்னேற்றுவதே தமது நோக்கமென்று, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே. சங்கிடம் எடுத்துக் கூறியதாக, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே. சங், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தை நேற்று (08) முன்தினம் சந்தித்து கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

ஆளுநரின் மட்டக்களப்பு விடுதியில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின் போது, விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டன.

அத்துடன், இம்மாகாணத்தில் சுற்றுலாத்துறையை முன்னேற்றுவது தொடர்பிலும் இக்கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது. அதாவது, சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதாயின் கொழும்பிலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு தனியார் விமான சேவையை விடவும், அரச விமான சேவையை ஆரம்பித்து செயற்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதாகவும், கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் கல்வித்துறை முன்னேற்றம் தொடர்பிலும் அமெரிக்காவுடன் ஒன்றிணைந்து கல்விப் பரிமாற்றுத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடியதாகவும், மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், ஐ.எம்.எப். திட்டத்தினூடாக இலங்கைக்கு கடன் உதவி கிடைப்பதற்காக இலங்கைக்கு உதவுவதற்கு அமெரிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், ஆயினும் இக்கடன் உதவித் திட்டங்களை பெறுவதற்கு கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டி வருமெனவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கூறியதாகவும், கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

திருக்கோவிலில் உயிரிழந்த மாணவனுக்கு நீதி வேண்டும்

பெற்றோர் ஆர்ப்பாட்டம்

திருக்கோவில் தினகரன் நிருபர்

அம்பாறை, திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகப் பிரிவில் உயிரிழந்துள்ள மாணவனான சிவபாலன் கிஷானுக்கு நீதி கோரி, தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர் அப்பாடசாலைக்கு முன்பாக நேற்று (09) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் 8ஆம் ஆண்டில் கல்வி கற்று வந்த 13 வயதுடைய சிவபாலன் கிஷானுக்கும் இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மற்றைய மாணவனுக்குமிடையில் நேற்று (08) முன்தினம் கைகலப்பு ஏற்பட்டது.

அதாவது சம்பவதினத்தன்று பாடசாலை முடிவடையும் வேளையில் உயிரிழந்த மாணவனான கிஷான், வகுப்பறை மேசையில் பெயின்ரால் கீறியதாகவும் இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மற்றைய மாணவனின் கை பட்டு அப்பெயின்ட் கீறல் அழிந்து விட்டதாகவும் இதனால், இவ்விருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ள கிஷான், தம்பிலுவில் ஏ.பி.சி. வீதியைச் சேர்ந்தவராவார்.

இம்மாணவன் உயிரிழந்தமைக்கு பாடசாலை நிர்வாகச் சீர்கேடே காரணமெனவும், உடனடியாக பாடசாலை அதிபரை வெளியேற்ற வேண்டுமெனவும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் பெற்றோர் கோஷம் எழுப்பினர். எனவே, இச்சம்பவத்தில் உயிரிழந்த மாணவனுக்கும் அம்மாணவனின் பெற்றோருக்கும் நீதி கிடைக்க வேண்டுமெனவும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பாடசாலை மாணவர்களின் ஒழுக்கக் கல்விக்கு அப்பால், பாடசாலையில் போதைப்பொருள் பாவனை, ஆசிரியர்களின் பாலியல் சேட்டை, பாடசாலையின் நிர்வாகச் சீர்கேடு ஆகியவற்றைக் கண்டித்தும் இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும், தெரிவித்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தைக் கேள்வியுற்று சம்பவ இடத்துக்கு வந்த திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரனிடம் திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் இ.வி.கமலராஜனிடமும் மகஜரொன்றையும் பெற்றோர்கள் கையளித்தனர்.

அம்பாறையில் அடைமழை; தாழ்நிலங்கள் வெள்ளத்தில்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர், பெரியநீலாவணை விசேட நிருபர், சவளக்கடை குறூப் நிருபர்

தற்போது பெய்து வரும் அடை மழையைத் தொடர்ந்து, அம்பாறை மாவட்டத்தின் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் நேற்று (08) முன்தினத்திலிருந்து மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது.

அத்துடன், கல்முனை சவளக்கடை ஊடான கிட்டங்கிப் பாலத்துக்கு மேலாக வெள்ளநீர் பாய்ந்தோடுவதால், பொதுமக்களின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

அப்பாலத்தின் மேலாக இவ்வாறு வெள்ளநீர் பாய்ந்தோடுவதால் மத்திய முகாம், சவளக்கடை, நாவிதன்வெளி, அன்னமலை, சொறிக்கல்முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மேலும், நெற்காணிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் நெற்பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிரானில் அதிக மழைவீழ்ச்சி பதிவு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று (09) அதிகாலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த அதிகபட்ச மழை வீழ்ச்சியாக 79.4 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சி கிரான் பிரதேசத்தில் பதிவாகியுள்ளதாக, மட்டக்களப்பு வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி ரமேஸ் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தும்பங்கேணியில் 76.2 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் உறுகாமம் பிரதேசத்தில் 67.2 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் உன்னிச்சையில் 64 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் வாகனேரியில் 61.9 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

மேலும், கல்முனையில் 54.7 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் நவகிரியில் 49 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் மட்டக்களப்பில் 41.7 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் மயிலம்பாவெளியில் 35.5 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் கட்டுமுறிவுக்குளத்தில் 13 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

பாசிக்குடாவில் 6.9 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தொடர்மழையால் மூதூர் விவசாயிகள் பாதிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

கடந்த ஒரு வாரமாகவிருந்து தோப்பூர் பிரதேசத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால், வயல் விதைப்பை மேற்கொள்ள முடியாதுள்ளதுடன், ஏற்கெனவே விதைக்கப்பட்ட வயல்கள் வெள்ள நீரில் மூழ்கிக் காணப்படுவதாகவும், விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், விதைக்க தயாராக இருந்த விதை நெல் பழுதடைவதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விதைத்து சில நாட்களான விளை நிலங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுவதால், கிருமி நாசினிகள் பயன்படுத்த முடியாதுள்ளதாகவும், பயிர்கள் அழிவடையும் நிலையில் உள்ளதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்த வேண்டுகோள்

நற்பிட்டிமுனை விசேட நிருபர்

சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்துவதற்கான அனைத்துத் தகுதிகளும் இருப்பதனால், சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வேண்டுகோள் விடுத்தார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் நேற்று (08) முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே, அவர் இவ் வேண்டுகோளை முன்வைத்தார்.

இக்கூட்டத்தில், நாட்டின் பல பிரதேச சபைகளை நகர சபைகளாக தரமுயர்த்துவது தொடர்பில் விவாதிக்கப்பட்டது. வடக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பிரதேச சபைகளை நகர சபைகளாக தரமுயர்த்த எடுக்கப்படும் இவ்வேலைத்திட்டத்தில், சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறையிலுள்ள பழம்பெரும் நகரமான சம்மாந்துறையில் காணப்படும் பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்த சகல தகுதிகளும் காணப்படுகின்றது. இதனால், சம்மாந்துறை பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தகவல் ஊடகக் கற்கையை நடத்த வேண்டுகோள்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தகவல் ஊடகக் கற்கை நெறியை விரிவுபடுத்துவதுடன், இக்கற்கைக்கான பொதுப் பரீட்சையில் அதிகளவான மாணவர்கள் தோற்றுவதற்கு ஏற்ற வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று, கிழக்கு மாகாணக் கல்வியாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகத்திடமே, அவர்கள் இவ்வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

சமகாலத்தில் ஊடகத்துறை தொழில் நுட்பம் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வருவதை கருத்தில் கொண்டும் பொதுப் பரீட்சையில் இலகுவில் இப்பாடத்தில் சித்தியடையக்கூடிய வாய்ப்பு இருப்பதை கருத்தில் கொண்டும் இவ்வேண்டுகோளை முன்வைப்பதாகவும், கிழக்கு மாகாணக் கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தகவல் ஊடகக் கற்கைப் பாடத்தை போதிக்கக்கூடிய ஆசிரியர்கள் பலர், பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறியுள்ளதையும், அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் 2023ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தம் அமுலுக்கு வரும் நிலையில், தகவல் தொழில்நுட்பப் பாடத்துக்கு வழங்கும் முக்கியத்துவம் போன்று தகவல் ஊடகக் கற்கை நெறிக்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டுமெனவும், அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டு.பேருந்து நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சமூக விரோதிகள்!

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு பேருந்து நிலையத்தில் மதுபானம் அருந்தி விட்டு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படும் சிலர், மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரால் நேற்று (08) முன்தினம் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் பாவனைக்கு இளம் சமூகத்தினர் அடிமையாகி, பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவதுடன், பொதுமக்கள் நடமாடும் இடங்களை இலக்கு வைத்து இக்குற்றச்செயல்கள் இடம்பெற்று வருவதாகவும், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவனுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக, மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

அகில இலங்கை தமிழ்மொழி தின போட்டியில் கிழக்கு மாகாணம் முதலிடம்

காரைதீவு குறூப் நிருபர்

அகில இலங்கை தமிழ்மொழி தினப் போட்டியில் கிழக்கு மாகாணம் 22 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த இப்போட்டியில், கிழக்கு மாகாணமானது 7 முதலிடங்களையும் 6 இரண்டாமிடங்களையும் 9 மூன்றாமிடங்களையும் பெற்று 22 புள்ளிகளை பெற்றுள்ளது.

இந்நிலையில், இவ்வாண்டுக்கான இப்போட்டியில் முதலாம் நிலை மாகாணமாக கிழக்கு மாகாணம் தெரிவாகியுள்ளது.

இதேவேளை, இம்முறை வடக்கு மாகாணம் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. இம்மாகாணமானது 10 முதலாமிடங்களையும் 5 இரண்டாமிடங்களையும் 5 மூன்றாமிடங்களையும் பெற்று 20 புள்ளிகளை பெற்றுள்ளது.

13 புள்ளிகளுடன் மேல் மாகாணம் மூன்றாமிடத்தையும் 12 புள்ளிகளுடன் மத்திய மாகாணம் நான்காமிடத்தையும் 10 புள்ளிகளுடன் ஊவா மாகாணம் ஐந்தாமிடத்தையும் 5 புள்ளிகளுடன் சப்பிரகமுவ மாகாணம் ஆறாமிடத்தையும் மூன்று புள்ளிகளுடன் வடமேல் மாகாணம் ஏழாமிடத்தையும் இரண்டு புள்ளிகளுடன் தென் மாகாணம் எட்டாமிடத்தையும் பிடித்துள்ளது.

வட மத்திய மாகாணத்துக்கு எந்தவிதமான புள்ளிகளும் கிடைக்கவில்லை.

காத்தான்குடியில் இலவசமாக விழி வெண்படல சத்திர சிகிச்சை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண மக்களின் நலன் கருதி கண்களில் படர்ந்துள்ள விழிவெண்படலத்தை அகற்றுவதற்கான இலவச சத்திர சிகிச்சை முகாம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், இதற்கான மருத்துவ பரிசோதனை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நேற்று (08) முன்தினம் நடத்தப்பட்டது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சபாப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சவூதிஅரேபிய கிங் சல்மான் மனிதாபிமான நிறுவனத்தின் உதவியுடன் பாகிஸ்தான் அல்பசர் நிறுவனத்தினால் இச்சத்திர சிகிச்சை இலவசமாக நடத்தப்படவுள்ளது.

இதற்குரிய சத்திர சிகிச்சை, காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

நேற்று (08) முன்தினம் நடத்தப்பட்ட இம்மருத்துவப் பரிசோதனைக்காக, காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களிலிருந்து 250 க்கும் மேற்பட்டோர் வருகை தந்திருந்தனர்.

பிரதேச கலை இலக்கிய விழா

திராய்க்கேணி தினகரன் நிருபர்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார பிரிவினால் நடத்தப்படும் 2022ஆம் ஆண்டுக்கான பிரதேச கலை இலக்கிய விழா அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது, பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் கலைஞர்களுக்கு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

காத்தான்குடியில் வாவி பெருக்கெடுப்பு; வீதியில் தோணிகள்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து, காத்தான்குடி முதலாம் குறிச்சியையும் இரண்டாம் குறிச்சியையும் அண்டியமைந்துள்ள வாவி பெருக்கெடுத்துள்ளதால், அவ்வாவிக் கரையோரத்தில் மீன்பிடித் தோணிகளை நிறுத்த முடியாமல் போயுள்ளது. இந்நிலையில், தோணிகளை வீதியில் நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், சுமார் 75 தோணிகள் இவ்வாறு வீதியோரத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. நேற்று (08) முன்தினம் முதல் இந்நிலைமை ஏற்பட்டதாக, மீனவர்கள் தெரிவித்தனர்.

போதைப் பொருள் பாவனையிலிருந்து

மாணவ சமூகத்தை மீட்க கூட்டு நடவடிக்கை தேவை

வட மாகாண ஊடக அமையும் வேண்டுகோள்

கோவில்குளம் குறூப் நிருபர்

வட மாகாணத்தில் மாணவர்கள் சமூகத் திடம் வேகமாக பரவி வரும் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த அரச அதிகாரிகள் பாதுகாப்புத் தரப்பினர் ஒன்றிணைந்து கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ள முன்வர வேண்டுமென, வட மாகாண ஊடக அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஊடக அமையத்தின் அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர் பகுதிகளில் மாணவச் சமூகத் திடம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப் பாவனையால் மாணவர் சமூகம் கல்வி கற்கும் நிலையில் பல்வேறு தாக்கங்களையும் கலாசார சீரழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றது. இது எதிர்காலத் தில் மாணவ சமுதாயத்தை நோயாளிகளாக மாற்றுவதோடு பல்வேறு குற்ற நடவடிக் கைகள் அதிகரிக்க காரணமாக இருக்கும். அத்துடன் இளம் சமூகத்தின் சிந்தனை ஆற்றலை அழித்து கல்வி செயற்பாடுகளில் அழிவுகளை ஏற்படுத்தும்.

சமூக விரோதிகளை இனங்கண்டு அவர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற் கொள்ள வட மாகாண ஆளுநர் துரித நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன் வட மாகாண ஆளுநரினால் ஒவ்வொரு மாவட் டங்களும் கண்காணிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வட மாகாண ஊடக அமையம் முன்வைக்கிறது.

மாணவர்கள் போதைப் பொருள் பாவ னைக்கு அடிமையாவதால், பெற்றோர்க ளின் இயல்பு நிலைமைகள் செயலிழந்து வருவதுடன் பொலிசாரிடம் தங்கள் பிள் ளைகளை கையளிக்கும் அவலங்களும் நடைபெறுகின்றது. போதைப் பாவனை யைத் தடுத்து நிறுத்துவதற்கு வடமாகா ணத்தில் பணிபுரியும் அரச அதிகாரிகள் தமது கடமைக்கு மேலதிகமாக பணியாற்ற முன்வர வேண்டும். அத்துடன் பாதுகாப் புத் தரப்பினர் தமது மூலோபாய தந்திர நடவடிக்கைகளை வகுத்து போதைப் பொருள் வர்த்தகம் மேற்கொள்ளும் நபர் கள் விநியோகஸ்தர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரச செயலகங்களில் பணியாற்றும் அதி காரிகளையும் மற்றும் தொழில் சங்கங்கள், மகளிர் அமைப்புகள், விளையாட்டு கழ கங்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியலா ளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டு அமைப் புக்களை ஒன்றிணைத்து வடபகுதியில் மாணவ சமுகத்தில் பரவி வரும் போதைப் பொருள் பாவனையை முற்றாக அழித்தொ ழிக்க ஒருங்கிணைந்த வேலைத்திட்ட நடவ டிக்கை ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் என்று வடமாகாண ஊடக அமையம் சம்பந் தப்பட்ட துறை சார்ந்த அமைப்புக்களிடம் வேண்டு கோள் விடுக்கிறது என்று மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுதொழில் முயற்சியை ஊக்குவிக்க வவுனியாவில் விசேட நடவடிக்கை

வவுனியா விசேட நிருபர்

வவு னியாவில் சிறுதொழில் முயற்சியா ளரை ஊக்குவிக்கும் முகமாக சந்தைப்படுத் தல் வசதியை பெற்றுக் கொடுக்கும் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வ வுனியா மாவட்ட செயலக சிறுதொ ழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற் பாட்டில், விருந்தினர் விடுதி ஒன்றில் இந் நிகழ்வு நேற்று (09) இடம்பெற்றது.

இதன்போது, மாவட்ட மட்ட சிறுதொ ழில் முயற்சியாளர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களது பொருட்கள் காட்சிப்படுத்தப் பட்டதுடன், அது தொடர்பான விளக்கங்க ளும் வழங்கப்பட்டன.

அத்துடன், சிறுதொழில் முயற்சியாளர் களின் உற்பத்திகளை வவுனியா வர்த்தக நிலையங்களிலும், ஏனைய பகுதிகளிலும் விற்பனை செய்தல் மற்றும் உற்பத்திகளை அதிகரித்தல், வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல் தொடர்பாகவும் ஆரா யப்பட்டது.

அத்துடன், வவுனியா வர்த்தகர்களு டன் சிறுதொழில் முயற்சியாளர்களை இணைத்து அவர்களுக்கான சந்தை வாய்ப் புக்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ச.சுஜன் மற்றும் மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள், வர்த்தக சங்க பிர திநிதிகள், சிறுதொழில் முயற்சியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ சாஸ்தா சைவ உணவகம்

வத்தளை ஹேக்கித்த ஸ்ரீ சபரிகிரீசன் ஐயப்பன் சன்னிதானத்தின் இரண்டாவது மஹா கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு ஆலய வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்காகக் கொண்டு ஆலயத்துடன் இணைந்ததாக அமையப்பெற்ற ஸ்ரீ சாஸ்தா சைவ உணவகம் ஆலய அறங்காவலர் ஆர். ஜெயக்குமார் தலைமையில் கோலாகலமாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. சமய நிகழ்வில் கலந்து கொண்ட ஆலய பரிபாலன சபை உறுப்பினர் எஸ். சிவனேச சர்மா, முன்னாள் பிரதமரின் இந்துமத இணைப்பாளர் ஆர். பாபு சர்மாவும் ஆலய நலன் விரும்பிகளும் அருகில் காணப்படுகின்றனர்.

தேசிய ரீதியில் சாதித்த மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலய மாணவர்கள் கௌரவிப்பு

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைதீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வல யத்திற்குற்பட்ட மல்லாவி யோகபுரம் மகா வித்தி யாலயத்தில் தேசிய ரீதியிலான தமிழ்த்தின போட்டி யில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இப்போட்டிகள் கடந்த 07ம் திகதி கொழும்பில் நடைபெற்றன.

தமிழ் அறிவு வினா விடை போட்டி மற்றும் தமிழ் இலக்கண அறிவு போட்டி என்பனவற்றில் சாதனை படைத்த மாணவர்கள் நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

முதலில் சாதனை மாணவர்கள் மல்லாவி நகர் பகு தியிலிருந்து மாலைகள் அணிவிக்கப்பட்டு ஊர்வல மாக பான்ட் வாத்திய இசை முழங்க பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர். நிகழ்வில் வலய கல்வி பிரதிப்பணிப்பாளர், பாடசாலை முதல்வர், அயற் பாடசாலை அதிபர்கள் மாணவர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டி ருந்தனர்.

கேள்வி கோரல் - 2023

பசறை பிரதேச சபை

பசறை பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

- **கேள்வி மாதிரிப் படிவ விநியோகம்** : 2022-11-08ஆம் திகதி முதல் 2022-11-21ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
- **கேள்விகளை ஏற்றுக்கொள்ளல்** : 2022-11-22ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை
- **கேள்வி திறக்கப்படுதல்** : 2022-11-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

02. விலைமனுக் கோரல் மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் விலைக்கோரல் வைப்பு என்பன கீழே தரப்பட்டுள்ளன.

தொ. இல.	விபரங்கள்	கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா)	பிணை வைப்புத் தொகை (ரூபா)	ஆகக் குறைந்த கேள்வி (ரூபா)
01	கடல் மீன் கடை	2000.00	10,000.00	1,860,000.00
02	நன்னீர் மீன் கடை	2000.00	10,000.00	587,000.00
03	மாட்டிறைச்சிக் கடை	2000.00	35,000.00	3,899,900.00
04	ஆட்டிறைச்சிக் கடை	2000.00	10,000.00	205,870.00
05	கோழியிறைச்சிக் கடை	2000.00	10,000.00	540,262.00
06	பஸ் நிலைய பொது மலசலகூடம்	2000.00	10,000.00	780,900.00
07	ஞாயிறு வாரச் சந்தை	2000.00	10,000.00	2,600,100.00
08.	பொதுச் சந்தைக் கட்டிடத்தொகுதி வாகனத்தரிப்பிடம்	2000.00	10,000.00	200,000.00

03. கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பசறை பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை பசறை பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசியின் ஊடாக விசாரித்தறிந்து கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 055 2288274

ஆர்.எம். ஞானதிலக்க,
தலைவர்,
பிரதேச சபை, பசறை.
2022-11-04.

கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்டகோறளே பிரதேச சபை

2023ஆம் வருடத்துக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்துக்கான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கென வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 2022.12.31 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை என்னால் கோரப்படுகின்றன.

இதற்கெனப் பின்வரும் பட்டியலில் உள்ளவாறு ஒவ்வொரு பொருள் சார்பிலும் பதிவு செய்வதற்கென ரூ. 1000.00 வீதமும், ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கென ரூ. 2000.00 வீதமும், திட்டவரைஞர்களைப் பதிவு செய்வதற்கென ரூ. 3000.00 வீதமும் கட்டணங்களைச் செலுத்திப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். (காசுக் கட்டளைகள் மூலம் கட்டணம் செலுத்த வேண்டாமென அன்புடன் தெரிவிக்கின்றேன்)

பொருட்கள் வழங்குதல்

01. காகிதாதிகள்
02. அலுவலக உபகரணங்கள் (இரும்பு, மரம், உருக்கு, பிளாஸ்டிக், கண்ணாடி)
03. கணினிகள் மற்றும் கணினி துணை உறுப்புகள் (பெக்ஸ், மடிக் கணினி, பென்ட்ரைவ், டெப் இயந்திரங்கள்)
04. எல்லாவித மின் உபகரணங்கள் /தெரு விளக்குகள் உட்பட
05. நீர் உபகரணங்கள்
06. விளையாட்டு உபகரணங்கள்/ விளையாட்டுப் பொருட்கள், முன்பள்ளி உபகரணங்கள் மற்றும் பூங்கா உபகரணங்கள்.
07. எல்லா வகையான டயர், டியூப் உள்ளிட்ட வாகன உதிரிப்பாகங்கள்
08. விவசாய உபகரணங்கள் மற்றும் விவசாய இரசாயனங்கள்
09. சுகநல உபகரணங்கள் மற்றும் சுகநலப் பொருட்கள்
10. சீருடைத் துணிகள், பைகள், பாதணிகள் மற்றும் ஏனைய துணி வகைகள்
11. எரிவாயுக் கொள்கலன்கள் மற்றும் தகனசாலைகளுக்கான வழங்கல்கள்
12. எல்லா வகையான கட்டடப் பொருட்கள்
13. ஹியூம் பைப் குழாய்கள், உள்ளிட்ட கொங்கிறீட் தயாரிப்புகள்
14. பாடசாலை உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள்
15. விவசாயப் பயிர்கள், புஞ்செடிகள் மற்றும் வண்ணச் செடிகள்
16. கடமைக்கான உத்தியோக அடையாள அட்டைகள்
17. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள்

சேவைகள் வழங்குதல்

01. அனைத்து அச்சிடும் நடவடிக்கைகளும்
02. அலுவலக உபகரணங்களது திருத்த வேலையும் பராமரிப்பும் (கணினி, அச்சிடும் இயந்திரம், போட்டோ பிரதியிடும் இயந்திரம், பெக்ஸ் போன்றன)
03. வாகனத் திருத்த வேலைகள், சேவிஸ் செய்தல் மற்றும் பராமரிப்பு செய்தல்
04. உணவு விநியோகம் செய்தல்
05. நில அளவீட்டுச் சேவைகள்
06. அபாயகரமான மரங்களை வெட்டுதல்
07. போக்குவரத்துச் சேவைகள்
08. ஒலிபெருக்கி இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்
09. மொழி பெயர்ப்புச் சேவை வழங்குதல்
10. சுத்திகரிப்புச் சேவை (கிளீனிங் சேர்விஸ்)
11. நிருமாணப் பணிகளுக்கென மனித வலு வழங்குதல் மற்றும் இயந்திரங்களை வழங்குதல்
12. கொண்டாட்டப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்
13. அனைத்து வேல்டிங் வேலைகளும்
14. கணினி வலையமைப்பு செய்தல், கணினி மென் பொருட்கள் வழங்குதல், இணையதள நிருமாணம் செய்தல்
15. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்
16. அனைத்து மின்சாரக் கருவிகளது திருத்த வேலை மற்றம் பராமரிப்புச் சேவைகள் (AC/ மின் பிறப்பாக்கிகள் உள்ளிட்ட)
17. திட்ட வரைஞர்களைப் பதிவு செய்தல்
18. சட்டத்தரணி சேவைகளை வழங்குதல்
19. வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல்
20. தீயணைப்புச் சேவைகள்

ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

நிருமாண வேலைகள் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) சீ 9 வகுதியின் கீழ் பாதைகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களுடன் பின்வரும் ஆவணங்களையும் முன்வைத்தல் வேண்டும்.

- மேற்குறித்த செல்லுபடியாகும் (CIDA) சான்றிதழ்களது பிரதி

நிபந்தனைகள்

1. பதிவு பெற்ற வழங்குநர்களை விடக் கேள்வி வழிகாட்டியின் ஆலோசனைகளுக்கமைய தேவையான சந்தர்ப்பங்களின் போது பிரதேச மட்டத்தில் அல்லது வரையறை செய்த கேள்விகளை அழைத்துப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் சபைக்கு உண்டு.
2. தேவையான சந்தர்ப்பங்களின் போது மாதிரிகளை முன்வைக்காத மற்றும் கட்டளைக்கேற்ற வகையில் குறித்த நேரத்துக்கு, உரியதர நிருணயத்துடனான, நல்ல தரமான பொருட்களை விநியோகம் செய்யாத வழங்குநர்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றிவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
3. ஒவ்வொரு பொருளுக்குமெனத் தனித் தனியான விண்ணப்பங்களை முன்வைத்தல் வேண்டும். வர்த்தகப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. வற் (VAT) இற்காகப் பதிவு பெற்றிருப்பின் அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியையும் அண்மையில் பெறப்பட்ட வற் வரி விடுவிப்புச் சான்றிதழின் பிரதியையும் முன்வைத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் : 081 – 2241222
பெக்ஸ் இலக்கம் : 081 – 2241065
மின்னஞ்சல் : cpc.gkps@gmail.com

பதிவு செய்தல்: கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்டகோறளே பிரதேச சபை அலுவலகத்தில் பதிவுகள் நடைபெறும்

ஆர்.ஏ.எஸ். சிசிர குமார
தவிசாளர்
கண்டி கடவத்ஸத்தர மற்றும்
கங்கவட்டகோறளே பிரதேச சபை,
அம்பிட்டிய.

பிராந்திய ஊடகவியலாளர் அலியார் ரஷீத் காலமானார்

பொலன்னறுவை லேக் ஹவுஸ் குறூப் நிருபராக 56 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய அலியார் ரஷீத் கடந்த 05ஆம் திகதி காலமானார்.

அவர் நிந்தவூரைப் பிறப்பிடமாகவும் பொலன்னறுவையை வசிப்பிடமாக கொண்டவராவார்.

சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த இவர், இவருடைய ஜனாஸா நல்லடக்கம் அன்றையதினம் கருதுவளை ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் இடம்பெற்றது.

மொத்த டொலர் கையிருப்பில் 66 சதவீதத்தை எரிபொருள் இறக்குமதிக்கு செலவிடும் பாகிஸ்தான்

பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருப்பதால் குறிப்பிட்டளவு அந்நிய செலாவணியை கையிருப்பாகக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் தன் எரிசக்தி, மின்சக்தி தேவைகளுக்காக பெருமளவு டொலர்களை செலவிட வேண்டிய நிலையில் உள்ளதாக எக்ஸ்பிரஸ் ட்ரிப்யூன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வருடாந்தம் 21.43 பில்லியன் டொலர்களை எண்ணெய் மற்றும் நிலக்கரிக்காக பாகிஸ்தான் செலவிட்டு வருவதாகவும் இது மொத்த அந்நிய செலாவணி கையிருப்பில் 66 சதவீதமாகும் எனவும் குறிப்பிட்டுள்ள இப்பத்திரிகை, எரிபொருளுக்கான செலவு வருடா வருடம் அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தான் தன் மின்சக்தி தேவையை ஈடுசெய்ய அனல் மின்சார நிலையங்களைப் பயன்படுத்துவதால் பெருமளவில் நிலக்கரியை இறக்குமதி செய்கிறது. அதே சமயம் உள்ளூர் நிலக்கரி சுரங்கங்களில் இருந்து 3.8 மில்லியன் தொன் நிலக்கரி வெட்டியெடுக்கப்படுகிறது. தற்போது வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி 7.6 தொன்களாக அதிகரித்திருப்பதோடு இறக்குமதி நிலக்கரியை விட உள்ளூர் தார் நிலக்கரியின் விலை குறைவானது என்றும் தெரிவித்திருக்கும் இப் பத்திரிகை, இதனால் இறக்குமதி நிலக்கரியை பயன்படுத்தும் அனல் மின் நிலையங்களை உள்ளூர் நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் அவற்றில் மாற்றங்களைச் செய்யத் தீர்;மானிக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் இந்தோனீசியாவில் இருந்தே நிலக்கரியை இறக்குமதி செய்கிறது. 171 அமெரிக்க டொலராகக் காணப்பட்ட ஒரு தொன் நிலக்கரியின் விலை தற்போது 407 டொலர்களாக விலை அதிகரிப்பு கண்டிருப்பதாக தெரிவித்துள்ள இப் பத்திரிகை, மின் உற்பத்திக்கான மாற்று வழிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் இதன் மூலமே மின்சக்தி வழங்குவதில் நிச்சயத்தன்மை, செலவைக் குறைத்தல், வெளிநாடுகளை சார்ந்திருக்கும் தன்மையில் இருந்து விடுபடுதல் என்பனவற்றை அடைய முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

எகிப்து காலநிலை மாநாட்டில் இந்திய அமைச்சர் பங்கேற்பு

வளரும் நாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு அவசியம் எனத் தெரிவிப்பு

காலநிலை மாற்றம் தொடர்பான எகிப்தின் ஷாம் எல் ஷேய்க் நகரில் தற்போது நடைபெற்றுவரும் சிஓபி 27 மாநாட்டில் இந்தியாவின் சூழல், வளம் மற்றும் காலநிலை மாற்றத்துக்கான இந்திய மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டுள்ளார். இம்மாநாடு தொடர்பாக சூழல் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இம் மாநாட்டில் கலந்துரையாடி எடுக்கப்படும் முடிவுகளுக்கு இந்தியா முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் காலநிலை மாற்றம் தொடர்பான நிதிக்கான வழி வகைகள் மற்றும் காலவரையறைகளில் எட்டப்படும் முன்னேற்றங்கள் போதுமானவையாக அமையும் என இந்தியா எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வளரும் நாடுகள் காலநிலை மாற்றம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கான நிதி போதுமான அளவுக்கு வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனவே அது தொடர்பில் தீர்மானங்கள் தெளிவானதாக இருக்க வேண்டும். காலநிலை நிதிக்கான நிலைக்குழு பல்வேறு வரையறைகளை நிர்ணயித்துள்ளது. இதன் அடிப்படையில் எம்மால் ஒரு பொதுவான புரிதலுக்கு வர முடியும். பாரிஸ் உடன்படிக்கை மற்றும் இந்த மாநாட்டில் நாடுகள் காலநிலை நிதி தொடர்பில் தெரிவித்த நிலைப்பாடுகளுடன் தற்போதைய கடப்பாடுகள் ஒத்துப்போவது அவசியம். 2020ஆம் ஆண்டு முதல் 2025 வரை ஆண்டுக்கு நூறு பில்லியன் டொலர்கள் என்பது காலநிலை வேலைத் திட்டங்களுக்கான நிதியாக பிரேரிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி பெறப்பட்டாக வேண்டும். அப்போது தான் போதிய வளங்கள் சேகரிக்கப்பட்டு 2024 இல் இலக்குகள் எய்தப்பட முடியும்' என இந்த அறிக்கையில் இந்தியா தன் நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

காலநிலையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் காரணமாக அதிக வெப்பம் அதிக பனிப் பொழிவு, அதிக மழை அல்லது வரட்சி என்பனவற்றை உலகெங்கும் காண முடிவதோடு காற்றின் தரமும் பல நாடுகளில் சீர்கெட்டுள்ளது. எல்லா நாடுகளும் இதைத் தடுக்க விரும்பினாலும் அதற்கான நிதியை ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது. எகிப்து மாநாட்டில் 'காலநிலை நிதி' முக்கிய பொருளாகக் காணப்படுகிறது.

நவரசங்கள் இறுவெட்டு வெளியீடு

மேடை மற்றும் சிங்கள திரைப்படக் கலைஞர் டிஸ்கோ ராஜாவின் நவரசங்கள் எனும் பாடல்களுடனான நடன காட்சிகள் அடங்கிய இறுவெட்டு வெளியீடு எதிர்வரும் ஞாயிறன்று(13 .11) கொழும்பு 13, கதிரேசன் வீதியில் அமைந்துள்ள வீரமயிலன் மண்டபத்தில் மாலை 6மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கலை உள்ளங்கள் அழைக்கப்படுகின்றனர்.

Melstacorp
RESPONSIBLE DIVERSITY

அறிவித்தல்

விசேட பொது சபை கூட்டம்

மெல்ஸ்டாகோர்ப் பிஎல்சி

மெல்ஸ்டாகோர்ப் பிஎல்சி யின் விசேட பொது சபை கூட்டம் மெய்நிகர் (Virtual) முறையில், 2022 நவம்பர் 24ம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு இல 110, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு 10, DCSL PLC 'Mini Auditorium' வளாகத்தில் நடாத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வருடாந்த கூட்டம் CSE பங்களிப்புடன் மற்றும் வழிநடாத்தல்களுக்கமைய Virtual முறையில் நடாத்தப்படும்.

முழுமைபடுத்தப்பட்ட Proxy விண்ணப்பம் 2022 நவம்பர் 22ம் திகதி பி.ப 11.00 மணிக்கு முன்னதாக egm2022@melsta.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிடல் வேண்டும். (பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்திற்கு, 36 மணித்தியாலங்களுக்கு முன்னதாக)

பங்குதாரர்கள் ஆன்லைன் முறையில் பங்கேற்றல்
பொதுக்கூட்டத்தில் பங்கேற்க விரும்பிடும் பங்குதாரர்கள் ஆடியோ அல்லது வீடியோ வழியாக இணைந்திட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்செயற்பாட்டிற்கான வசதியினை வழங்கிட, பங்குதாரர்களினால் குறித்த விபரங்கள் கீழ் காணப்படும் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரிக்கு அல்லது egm2022@melsta.com எனும் முகவரிக்கு மின்னஞ்சலாக, குறைந்தது கூட்டம் நடைபெறும் தினத்திற்கு, மூன்று நாட்களுக்கு (03) முன்னதாக கிடைக்கும் விதம் அனுப்பிடல் வேண்டும். அனுப்பிட உங்களது login விபரங்கள் வழங்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியிலும் அனுப்பிட முடியும்.

பங்குதாரர்களின் விசாரணைகளுக்கு
மேலும் பங்குதார்களுக்கு ஏதேனும் தகவல்கள் அறிந்திட தேவைப்படின், அவ்வாறான விசாரணைகளை கீழ் குறித்துள்ள பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அல்லது egm2022@melsta.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு, குறைந்தது கூட்டம் நடைபெறும் தினத்திற்கு, மூன்று நாட்களுக்கு (03) முன்னதாக கிடைக்கும் விதம் அனுப்பிடல் வேண்டும்.

பங்குதாரர்களுக்கு இவ் அறிவித்தல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த பொது கூட்டத்திற்கான பங்குதாரர் ஆவண பிரதிகள் மற்றும் மற்றைய விளம்பரங்கள் www.melstacorp.com நிறுவன இணையத்தளத்தில் மற்றும் www.cse.lk கொழும்பு பங்குபரிவர்த்தனை இணையத்தளத்தில் பெற்றிட முடியும்.

மெல்ஸ்டாகோர்ப் பிஎல்சி
இல 110, நொறிஸ் கனல் வீதி,
கொழும்பு 10.
தொலைபேசி: 0115 900 300

இயக்குனர் சபையின் அறிவுறுத்தலுக்கமைய
நிறுவன செயலாளர்கள்

2022 நவம்பர் 10

வலயக் கல்வி அலுவலகம் - பிலியந்தலை

வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

இந்த கல்வி அலுவலகம் மற்றும் இதற்குரித்தான பாடசாலைகளில் 1ஆம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரையில் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக 2023ஆம் வருடத்தில் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு 2022-11-24ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01 வழங்கல்

1) காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள்
2) நூலகப் புத்தகங்கள்
3) பாடசாலை உபகரணங்கள்
   i. கணித உபகரணங்கள்
   ii. விவசாயப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
   iii. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
   iv. சங்கீதம், நடனம், சித்திர உபகரணங்கள்
   v. கட்புல செவிப்புல மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
   vi. விசேட கல்விக்கு தேவையான சகல உபகரணங்கள்
   vii. விஞ்ஞான ஆய்வுகூடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
4) அலுவலக உபகரணங்கள் (கணனி, கணனி அச்சுப்பொறிகள், ஸ்கென் உபகரணங்கள் ஏனைய கணனி துணைப்பாகங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், ஏனைய அதுசார்ந்த உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
5) புகைப்படப் பிரதி இயந்திரங்கள் / அச்சுப் பொறிகளுக்கான டோனர், கார்ட்ரிச், ரிபன் (போலி அற்றது)
6) வளிச்சீராக்கி இயந்திரங்கள்
7) கமெரா முறைமை, பாதுகாப்பு கமெரா முறைமை
8) அலுவலக உபகரணங்கள் (உருக்கு மற்றும் மரம்), பாடசாலை மேசை, கதிரை, பிளாஸ்டிக் கதிரை
9) துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (சவர்க்காரம், கழுவும் திரவங்கள், கிருமிநாசினிகள், கைதுடைப்பான்கள்)
10) மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் / டயர், டியூப், பெட்டறி போன்றன வழங்குதல்

02. சேவை வழங்கல்

1) அச்சிடல் சேவைகள்
2) அலுவலக இயந்திரங்களின் சிறிய திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (கணனி, அச்சுப்பொறி, புகைப்படப் பிரதி இயந்திரம், டுப்ளோ இயந்திரம்)
3) மென்பொருள் மற்றும் கணனி முறைமை வலையமைப்பு
4) கட்டிட திருத்தவேலைகள், மின்னியல் வேலைகள்
5) வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள்
6) வாகன தவணை சேர்விஸ்கள்
7) மோட்டார் வாகன திருத்தவேலைகள் / டீசல் - (தொழில்நுட்ப திருத்தவேலைகள்)
8) உற்சவங்கள் மற்றும் ஏனைய விசேட வேளைகளுக்கான உணவு பானங்கள் வழங்குதல்

ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகளுக்காக வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். சகல விண்ணப்பத்திற்கும் விண்ணப்பக் கட்டணமாக 1000.00 ரூபா அறவிடப்படும் என்பதுடன், இத்தொகை மீளளிக்கப்பட மாட்டாது. 2022-11-23ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அலுவலகத்தின் சிறாப்பருக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இந்த அலுவலகத்தின் பொது நிர்வாகப் பிரிவிற்குச் சமர்ப்பித்து வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். உங்களால் விண்ணப்பிக்கப்படும் சேவை அல்லது வழங்கலுக்கு உரித்தான வியாபாரப் பதிவுச் சான்றிதழையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு 2022-11-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், பிலியந்தலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது இந்த அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 0112614200 (பொதுநிர்வாகப் பிரிவு) எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
பிலியந்தலை.
2022-11-10.

வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

(469) வன சீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 2009 22ஆம் இலக்க வன சீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் 9அ அத்தியாயம் மற்றும் தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 BB அத்தியாயத்தின் (2) வது உப அத்தியாயத்தின் கீழான அறிவித்தல்

உத்தேச குடாவிலச்சிய குளத்தை புனரமைப்பதற்கான செயற்றிட்டம்

நீர்ப்பாசனத் திணைக்களம்

(469) வன சீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 2009 22ஆம் இலக்க வன சீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் 9அ அத்தியாயத்தின் கீழ் 1988 56ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மற்றும் 2000 53ஆம் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 BB(I) அத்தியாயத்தின் கீழ் மற்றும் உத்தேச குடாவிலச்சிய குளத்தை புனரமைக்கும் செயற்றிட்டத்தின் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு அறிக்கை பின்வரும் இடங்களில் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர்த்து) மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை பொதுமக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், 811/A, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை, ''பரிசர பியச'', 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
- தொல்லியல் திணைக்களம், சேர் மார்கஸ் பர்னாந்து மாவத்தை, கொழும்பு 07.
- உதவிப் பணிப்பாளர் அலுவலகம் (அனுராதபுரம்), வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், 598/1, மெத்தா மாவத்தை, அனுராதபுரம்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வடமத்திய மாகாண அலுவலகம், இல. 388/40, ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம்.
- உதவிப் பணிப்பாளர், பிராந்திய தொல்லியல் அலுவலகம், அநுராதபுரம்.
- பிரதேச செயலகம், மஹவிலச்சிய
- பிரதேச சபை, மஹவிலச்சிய

யாராவது பொதுமக்கள் அல்லது யாருக்காவது மேற்குறிப்பிடப்பட்ட சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை தொடர்பில் தமது கருத்துக்களை 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாக பத்தரமுல்ல, ஜயந்திபுர வீதி, 811/A இலக்கத்தில் அமைந்துள்ள வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கலாம்.

பணிப்பாளர் நாயகம்,
வன சீவராசிகள் திணைக்களம்,
811/A, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.
2022-11-08

பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை - தளாதுஒய

கேள்வி கோரல் அழைப்பு

உபகரணங்களை வழங்கல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைத்தல்

பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையினால் ஆரம்பிப்பதற்கு உத்தேச பராமரிப்பு அலகிற்காக, இச் சபையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 01 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கி கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு தகுதியும் தகைமையும் கொண்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தொடர் இலக்கம்	உருப்படி	தேவையான எண்ணிக்கை
1	மேசன் கரண்டிகள்	5
2	பிடிசம்மட்டி பெரியது	2
3	பிடிசம்மட்டி சிறியது	2
4	சம்மட்டி	2
5	மட்டம் (Level)	2
6	தூக்கு மட்டம்	2
7	மட்டம் சட்டம் 6 அடி	2
8	மட்டம் சட்டம் 3 அடி	2
9	மூலை மட்டம்	3
10	அளவை நாடா - 100 அடி	5
11	அளவை நாடா 50 அடி (Tape)	5
12	Steal Tape - 3 மீற்றர்	3
13	steal Taps - 05 மீற்றர்	3
14	Speed Level	3
15	மரவாள்	3
16	High Speed Frame	4
17	Finishing Spoon	4
18	Combination Wrench Set - 8mm to 32mm	01 Set
19	Box Wrench Set - 8mm to 32 mm	01 Set
20	Baby Socket Wrench Set 6mm to 24mm	01 Set
21	Circlip Plies	1
22	Open/ Close	
23	Pressure Locking Plies	1
24	Nose Plier	1
25	Screw Driver	1
26	Hydraulic Bottle Jack 10 Ton.	3
27	Tire Lever	1
28	Multi Meter	1
29	மேசை நிலையிடுக்கி (Bench Vice)	1
30	Portable Welding Plant	1

தொடர் இலக்கம்	உருப்படி	தேவையான எண்ணிக்கை
31	Grinder - கம்பிவெட்டுதல்	1
32	Wire Coard - 15 A	30M
33	Plug Top 15 A	1
34	Plug base 15 A	1
35	MCB 15 A - 15	1
36	Spanner 15"	2
37	உருண்டை சுத்தியல்	2
38	Pipe Wrench	1
39	அரிவாள் - பெரியது	3
40	கோடாரி	3
41	Chain Saw	1
42	கயிறு - பெரியது	3
43	வீச்சுக்கத்திகள்	10
44	பாதுகாப்பு இடுப்புப்பட்டி	3
45	மின்காப்பு கையுறை கோடிகள்	3
46	பாதுகாப்பு தலையனைகள்	3
47	பூட் சோடிகள்	3
48	டெஸ்டர்கள்	5
49	Wire Sippers	4
50	கொங்கிறீட்மிக்சர் சி.மி. 01	1
51	தகர்க்கும் உருளை தொன் 02	1
52	சவல்கள்	10
53	மண்வெட்டிகள் 09, 09	10
54	புல்வெட்டும் மெஷின்	1
55	தாச்சிகள்	10
56	வீல் பரோக்கர்	4
57	அலவாங்குகள் 09 அடி	3
58	அலவாங்குகள் 06 அடி	3
59	பிக்காசுகள்	4
60	சம்மட்டிகள்	2
61	வேலித்தூண்அச்சு Height 1.70m Top (100 x 100) m Bottom (150x150) m	10

01. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் முறைமையின் பிரகாரம் கேள்விகள் நடைமுறைப்படுத்தப்படும்.
02. தகைமைத் தேவைப்பாடுகளிற்கு பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும்.
   i. வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
   ii. நிதியியல் இயலுமை
   iii. கேள்விதாரர், அதிகாரம் பெற்ற வர்த்தக வியாபாரியொருவராக இருத்தல் வேண்டும்.
   iv. கொள்வனவாளரினால் ஒப்புக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து, தொழில்நுட்ப விபரக் குறிப்புக்களின் பிரகாரம், அனைத்து உருப்படிகளிற்கும் முழுமையான பொறுப்புக் கூறுங்காலம் ஒன்று இருத்தல் வேண்டும்.
   v. முன்வரும் ஆறு ஆண்டுகளிற்கான உதிரிப்பாகங்கள் தேவையான அளவு உண்டென்பதனை உறுதிப்படுத்தும் இயலுமை கேள்விதாரரிடம் இருத்தல் வேண்டும்.
03. 2022.11.09 அன்று மு.ப. 09.00 முதல் 2022.11.29 அன்று பி.ப. 3.00 வரை மாத்திரம் தலாதுஒய பிரதான அலுவலகத்தில் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும். 2022.11.30 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கேள்விகள், இச்சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். 2022.11.30 அன்று மு.ப. 10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.
04. தாமதமாகக் கிடைக்கப் பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
05. 2022.11.30 அன்று மு.ப. 10.00 இற்கு கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
06. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திலிருந்து 30 நாட்கள், அனைத்து கேள்விகளும் செல்லுபடியாகுதல் வேண்டும்.

மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் :- ரூபா 1,000.00
மீளளிக்கப்படும் பிணைத் தொகை :- ரூபா 5,000.00

081-2404175 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வை.எம்.ஆர். யாபா பண்டார,
தலைவர்,
பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை,
தளாதுஒய.

பெருந்தோட்ட அமைச்சு
இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை ஆணையாளர் பிரிவு

பச்சை தேயிலைக்கான நியாயமான விலையை செலுத்துதல்

2022 ஒக்டோபர் மாதம்

1993 ஆம் ஆண்டின் இல 03 கீழ் திருத்தப்பட்ட சட்டம் 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 8 (2) ன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப 2022 ஒக்டோபர் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களால் கொள்முதல் செய்யப்பட்ட பச்சை தேயிலைக்கான நியாயமான விலை கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளவாறு அறிவிக்கப்படுகின்றது.

தொடர் இல.	பதிவு இல.	தொழிற்சாலையின் பெயர்	சில்லரை விலை ஒக்டோபர்
பதுளை மாவட்டம்			
1	MF1595	இரநாயா	233.18
2	MF0988	சரினா குரூப்	229.53
3	MF0382	திக்வெல்ல	226.21
4	MF0253	வேவெஸ்ஸ	224.93
5	MF0581	அயிஸ்லெபி	223.24
6	MF0821	க்ளெனோர்	223.17
7	MF0777	பிட்டஇரத்மலே	222.26
8	MF0269	தம்பேதென்ன	221.36
9	MF0739	கர்கிலிஸ்	219.84
10	MF1293	லக்கி லேன்ட்	215.82
11	MF0983	ஹப்புதளை	215.81
12	MF0156	ஊவா ஹைலண்ட்ஸ்	215.49
13	MF0381	சவுதம்	214.86
14	MF0217	எல்டெப்	214.49
15	MF1203	ஊவா ஹல்பேவத்த	214.25
16	MF0235	நயாபெத்த	205.36
17	MF0972	கெப்பட்டிபொல தே சக்தி	204.28
18	MF0596	அடாவத்த	203.87
19	MF0712	ப்லேயார்ல்மன்ட்	203.74
20	MF0754	ஊவா ஹப்புத்தளை வெலி	195.99
21	MF0637	உடுவர	195.84
22	MF0677	ஸ்பிரிங்வெலி குரூப்	194.75
23	MF1534	பஸ்ஸர தே சக்தி	192.71
24	MF0598	ஷோலன்ட்ஸ்	192.44
25	MF0041	தேபெத்த	191.89
26	MF1524	எம்புரோய்ஸ்சா	191.67
27	MF0974	ஹப்புகஹவத்த	191.12
28	MF0720	கோனமோட்டாவ	191.07
29	MF0105	கனவரெல்ல	185.12
30	MF1590	கோல்ட் பட்ஸ் ஊவா டீ	183.53
31	MF0388	கம்பஹா	180.13
32	MF0488	வெருளுபத்தன	178.88
33	MF0214	அம்பேதென்ன	178.14
34	MF0667	க்ளேன் எல்பின்ஸ் குரூப்	176.96
35	MF0668	ஹிந்தகல	176.80
36	MF0494	அம்பிட்டிகந்த	174.77
37	MF0683	கிரேக்	172.94
38	MF0371	பட்டவத்த	170.11
39	MF0302	உளுகெதர	169.56
40	MF0329	ஊவா மொரகல்ல	169.46
41	MF0678	தெலெபெத	167.85
42	MF0986	மஹதொவ	163.07
43	MF1000	ரோபெரி	162.73
44	MF0243	கினலன்	159.99
45	MF0522	நிவ் ரோஸ்லண்ட்	159.80
46	MF0234	கோனகெலே	157.47
47	MF0572	ஹோப்டன்	157.35
48	MF0292	பூணாகல	156.61
கொழும்பு மாவட்டம்			
1	MF1264	அவிஸ்ஸாவெல்ல	284.61
காலி மாவட்டம்			
1	MF1342	எவர்கிரின்	276.84
2	MF1346	மஹகெதர	267.52
3	MF1373	மொரகெட்டிய	264.21
4	MF1396	ஹிமாரா	261.94
5	MF1398	அத்துகோரளை	261.32
6	MF1389	கராகொட	255.50
7	MF1367	வத்துரவில	254.89
8	MF0079	சணச	254.52
9	MF0908	கெப்டன் கார்டன்	253.54
10	MF1452	மஹலியத	253.02
11	MF0184	ரேகடஹேன	252.72
12	MF1252	வெளிஹேன	251.43
13	MF1475	முஸ்வென்ன	251.39
14	MF1437	தெல்லேவ	250.83
15	MF1411	சுசன்த	250.69
16	MF1439	எக்வின்	250.11
17	MF0861	வவுலுகல	250.07
18	MF1427	மெனிக்கந்த	249.97
19	MF1318	சினென்சிஸ்	249.88
20	BF0181	இரத்ன	249.67
21	MF1376	சௌபாக்யா	249.42
22	MF1371	நயிந்தாவ	249.37
23	MF1422	இவிஹில்ஸ்	248.66
24	MF1006	இத்தேகல	247.96
25	MF1338	யக்கலமுல்ல	247.74
26	MF1353	ஹில்கார்டன்	246.95
27	MF1334	மாரகந்த	246.90
28	MF1139	ஜெஸ்மின்வெலி	246.30
29	MF1186	தேவகிரி	245.70
30	BF0149	காலு கங்கபட	245.34
31	MF1333	ஹிங்குல்கொட	245.00
32	MF1501	சிஹாரா	244.85
33	MF1434	லியோட்டா	244.50
34	MF1497	கன்னேலிய	243.48
35	MF1494	பரகொடகந்த	243.30
36	MF1314	நெலுவ மெதகம	243.24
37	MF1195	கோல்டன் லீ.ஃப்	242.61
38	MF1548	சுவிஸ்க்கா	242.14
39	MF1370	ருஹுணு	240.65
40	MF1300	இம்புல்கஹகொட	240.44
41	MF1341	துளிஎல	239.40
42	BF0187	நிவ் சிங்ஹவெலி	239.20
43	BF0120	கிரேஸ்லேன்ட்	239.01
44	MF1319	தல்கம்பளை	238.28
45	MF0954	மொரகல்ல	238.13
46	MF1307	குருந்துவத்த	237.59
47	MF1380	கங்கசிரி	237.45
48	MF1332	குருப்பனாவ	235.25
49	MF1303	நில் கந்துர	235.03
50	MF1306	சினேத்	234.94
51	MF1409	இரந்தெனிய	234.69
52	MF1540	சேரன்யா	234.42
53	MF0862	வீவருகொட	232.91
54	MF0142	சிரிமேவன	232.00
55	MF1253	மஹேஸலன்ட்	232.00
56	MF1361	உடுஎல்ல	231.33
57	BF0172	விஜய	230.98
58	MF1323	டேவிட்சன்	230.93
59	MF1526	ஹினிதும ஹில்ஸ்	230.18
60	MF0128	பிம்புராகல	230.07
61	BF0035	ஹில் சயிட்	229.19
62	BF0178	நிவ் கொட்டாவ வெலி	228.91
63	MF1330	ஹல்விட்டிகல	228.85
64	MF1400	மிரிஸ்வத்த	228.39
65	MF0321	தலங்கஹ	228.37
66	MF1393	நிவ் உடுமுல்லகொட	228.20
67	MF0080	வெஹிஹேன	228.05
68	MF1447	இரன்சவி	227.12
69	MF1511	ஜெயசிங்ஹ	227.00
70	MF1401	ஜனஹித்த	224.75
71	MF1251	ஈரமுல்ல	224.00
72	MF1375	தனவல	223.88
73	MF0751	திசர	222.72
74	MF1170	இவிவெலி	222.37
75	MF1271	முஸ்ஸெந்தபொத்த	221.96
76	MF0815	வலஹந்துவ தே சக்தி	218.68
77	MF0655	பத்தேகம	211.51
78	MF1485	குருதியபொத	209.00
79	MF1404	தொட்டுபலவத்த	207.90
80	MF1543	சம்ரின்	207.59
81	MF1350	பட்டுவங்கல	207.49
82	MF1328	மஹாம்பான	207.28
83	MF1510	எகில்மா	207.05
84	MF1438	காலி ரே	200.16
85	MF0304	தல்கஸ்வல	199.76
86	MF1359	திலக்க	197.88
87	MF1384	நெகினிகல	197.81
88	MF1529	கிரின்வின்	197.69
89	MF1549	இரன்மீர்	196.08
90	MF0124	இரசோட்டா	194.87
91	MF1369	மென்டிஸ்	193.50
92	MF1421	இலக்மலி	193.38
93	MF1473	கெல்லபத்த	192.42
94	MF0907	கெட்டந்தொல	189.89
95	MF1504	எல்பிட்டிய தே சக்தி	186.04
96	MF1364	இரத்கந்த	183.13
97	MF1315	றுவன்தென்ன	170.98
98	MF0259	குடாமலான	168.97
99	MF1378	வினோவில்	156.53
ஹம்பாந்தோட்டை மாவட்டம்			
1	MF1564	நிவ் ஹதுகல	209.68
களுத்துறை மாவட்டம்			
1	MF1435	கலத்தர	278.31
2	MF1557	எச்.பீ.பீ.	248.55
3	MF1594	இரத்மல்கொட	240.14
4	MF0147	ரையிகம	237.65
5	MF1481	ரைகம் கோரளே தே சக்தி	237.21
6	MF1544	ஹெடிகல்ல	236.72
7	MF1476	நிவ் ஜே.எஸ்.பீ	236.16
8	MF1563	புலத்சிங்ஹல	234.44
9	MF1455	துன்தொல	233.68
10	MF1472	சுணில்ஸ்	229.46
11	MF1565	லிஹினியாவ	227.29
12	MF1527	கங்கானி	223.26
13	BF0183	பதுரளிய	222.00
14	MF0365	ஹாட்லி	219.86
15	MF1280	மிஹிரிகெலே	217.52
16	MF1503	எல்ஹேவன	217.35
17	MF1399	நில்கஹஹேன	216.97
18	MF1530	குமுது	213.05
19	MF1558	அருண	195.92
20	MF1477	மொரபிட்டிய	194.46
21	MF1465	புரோம்பிரில்	174.12
22	MF1593	ஜே.எஸ்.பீ.நெலுன்தல	170.75
23	MF1492	வின்வுட்	151.75
24	MF1479	ஹெட்டனேன	99.96
25	MF1584	கொழம்பராச்சி	63.09
கண்டி மாவட்டம்			
1	MF0538	லீ வெலோன்	238.55
2	MF0007	கலமுதுன	238.11
3	MF0608	கிரேக்ஹெட்	237.92
4	MF0416	ஹப்பர் லென்டர்ன்ஹில்	227.37
5	MF0013	நிவ் பீகொக் குரூப்	224.68
6	MF0866	வெஸ்ட் ஹோல்	224.09
7	MF0697	நயாபான	216.07
8	MF0402	எல்பிட்டிய	201.71
9	MF0164	இம்புல்பிட்டிய	200.16
10	MF1181	பல்லேகம	197.10
11	MF1596	லிவர்பூல்	194.53
12	MF0020	குருகம	193.84
13	MF1257	ஹப்லன்ட்ஸ்	193.07
பாவனையிலிருந்து அகற்றப்படும் பண்டங்கள் மற்றும் பதார்த்தங்களை விற்பனை செய்தல் மற்றும் அழித்தல்களிற்காக விலைமனுக்கோரல் – 2023

கண்டி தேசிய வைத்தியசாலையின் பாவனையிலிருந்து அகற்றப்படும் பின்வரும் பண்டங்கள் மற்றும் பதார்த்தங்களை விற்பனை செய்தல், அழித்தல் அல்லது அகற்றிக்கொண்டு செல்வதற்காக கண்டி தேசிய வைத்தியசாலையின் பெறுகைக்குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2022.11.10 அன்று மு.ப.9.00 முதல் 2022.12.02 அன்று மு.ப.10.30 வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் 2022.12.02 மு.ப..10.30இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதனால் மு.ப.10.30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

01. வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள் (மருந்து கலன்கள்)
02. வெற்று சேலைன் போத்தல்கள் வெற்று பெனிசிலின் குப்பிகள் மற்றும் பல்வேறுபட்ட கண்ணாடி போத்தல்கள்
03. 05 லீற்றர் வெற்று பிளாஸ்டிக் கலன்கள்
04. 10 லீற்றர் வெற்று பிளாஸ்டிக் கலன்கள்
05. 25 லீற்றர் வெற்று பிளாஸ்டிக் கலன்கள்
06. காட்போட்கள்
07. கடதாசி
08. தேங்காய் சிரட்டைகள்
09. CT நாடாக்கள்
10. எக்ரே சுருள்கள்
11. வெற்று பெனிசிலின் குப்பிகள் மற்றும் பல்வேறு வகையான கண்ணாடி போத்தல்கள்
12. பாவனையிலிருந்து அகற்றப்படும் பண்டங்கள் மற்றும் பதார்த்தங்களை அழித்தல்
13. நுகர்வின் பின்னர் மிகுதியுள்ள உணவு வகைகள்

2022.11.10 முதல் 2022.11.30 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.02.30 வரை மீளளிக்கப்படாத ரூபா 2000.00 இற்கான கட்டணத்தை செலுத்தி, கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரிடம் இதற்கான கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் இலக்கம் 1-7 வரை உருப்படி ஒன்றிற்காக மீளளிக்கப்படும் ரூபா 25,000.00 இற்கான வைப்புத்தொகையும், இலக்கம் 8-12 வரையான உருப்படி ஒன்றிற்காக ரூபா 10,000.00 பிணை வைப்புத்தொகையும் வைத்தல் வேண்டும். உருப்படி இலக்கம் 13ற்காக 30 நாட்களிற்குச் செல்லுபடியாகும் வண்ணம் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 50,000.00 பெறுமானமுள்ள விலைமனுப்பிணையமொன்று அல்லது அப்பெறுமானத்திற்கான தொகையை காசாக வைப்புச் செய்தல் வேண்டும் மேற்படி இலக்கம் 1 முதல் 11 வரையான உருப்படிகளிற்காக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் ஆகக்கூடிய விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு 2023.01.01 முதல் 2023.12.31 வரை உரிய தொகையை செலுத்திய பின்னர் குறித்த பண்டங்களை அகற்றிக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படும்.

இலக்கம் 12 உருப்படிக்காக ஆகக்குறைந்த விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு 2023.01.01 முதல் ஒருவருட காலத்திற்கு டெண்டர் வழங்கப்படும்.

உருப்படி இலக்கம் 13 இற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரரினால் மாதாந்தம் லெத்துவதற்கு ஒப்புக்கொள்ளப்படும் தொகைக்கு நிகரான தொகையொன்று மீளளிக்கப்படும் வைப்புப் பிணையமாக வைப்புச்செய்யப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் ஆகக்கூடிய விலைமனுச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு 2023.02.15 முதல் ஒரு வருட காலத்திற்கு டெண்டர் வழங்கப்படும்.

கேள்விகளை அடக்கும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், "பாவனையிலிருந்து அகற்றப்படும் பண்டங்களிற்கான விலைமனுக்கள்" எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

இது தொடர்பான இறுதித்தீர்மானம் டெண்டர் சபையைச் சாரும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
தேசிய வைத்தியசாலை, கண்டி

இலங்கை துறைமுக அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

கீழ் தரப்பட்டுள்ள உருப்படிகளுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

Tender No.	Name of the Tender	Bid Security Amount (Rs.)	Document fee (Inclusive of VAT)	Closing Date & time
CES/FP/02/PT/6399(EL)	1000 Nos. Carbon Brushes for the Torque Motors of ZPMC Cranes at JCT	25,000.00	1,000.00	08/12/2022 10.00hrs
CES/FP/05/PT/6407(EL)	Air Filters for the Motors of Cranes at JCT & ECT	50,000.00	1,000.00	08/12/2022 10.00hrs
CES/FP/06/ PT/6408(MP)	Spares for 2.5T Mitsubishi / Caterpiller FD25/DP25 Fork Lift Trucks	95,000.00	1,000.00	08/12/2022 10.00hrs
CES/FP/04/PT/6411(EL)	Spare Modules for the Stinis Spreaders at ECT	60,000.00	1,000.00	08/12/2022 10.00hrs
CES/FP/02/PT/6409(EL)	500M of 19C X 2.5 SQMM Festoon Cable for Cranes at JCT	95,000.00	1,000.00	13/12/2022 10.00hrs
CES/FP/03/ PT/6405(MP)	04 Nos. Boom Hoist Wire Ropes of 28MM X 230M	58,000.00	1,000.00	13/12/2022 10.00hrs
CES/FP/03/PT/6410(EL)	Spare Parts for the Stinis Spreaders at ECT	15,000.00	1,000.00	13/12/2022 10.00hrs
CMS/LP/22/PT/08/053	06 Nos. MS " H " Iron 350MM X 350MM X 137KG/M and 16 Nos. MS Channel Iron 200MM X 75MM X 23.4 KG/M	65,000.00	1,000.00	01/12/2022 13.30hrs
CMS/LP/21/PT/01/055	T Shirts (Colour with Logo) – 7600 Nos. for Year 2022	30,000.00	1,000.00	01/12/2022 13.30hrs
CMS/LP/22/PT/17/060	04 Nos. Seal Kit for Rotary Actuator	22,500.00	1,000.00	01/12/2022 13.30hrs
CMS/LP/22/PT/13/58	Maintenance Spares for the Schottel SRP 550 Propulsion Units of M/T Velusumana	25,000.00	1,000.00	01/12/2022 13.30hrs
CES/LP/22/PT/14/59	01 No. Battery Inverter System for Transfer Crane Cabin Air Conditioner	30,000.00	1,000.00	24/11/2022 13.30hrs

02. மொத்த செலவு 5 மில்லியன் ரூபாவை தாண்டும் கேள்விமனுக்களுக்கு 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடு பொருந்தும் என்பதை விலைமனுதாரர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது. அதன்படி மேற்கூடிறிய ஒவ்வொரு கேள்விமனுக்களுடனும் தொடர்புபட்ட அனைத்து தரப்பினரும் ஒப்பந்தக் காலம் முழுவதும் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். மேலும், எந்த ஒரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநர் ஒருவரின் சார்பில் முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவராக செயற்பட விரும்பும் விலைமனுதாரர்கள் பொது ஒப்பந்த பதிவாளருடன் தம்மை பதிவு செய்ய வேண்டும் என்பதோடு தமது விலைமனு ஆவணங்களுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனுதாரர்கள் குறைந்தது கடந்த ஐந்து (5) ஆண்டு காலத்திற்கு மேல் குறிப்பிடப்பட்ட ஒத்த பொருட்களை வழங்கும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தலைமை பொறியியலாளர் (வழங்கல்கள்) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு அலுவலக நேரங்களில் கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

05. விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு முன்னதாக வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை 2022 நவம்பர் 11 ஆம் திகதியில் இருந்து பந்தி 4இல் குறிப்பிடப்பட்டிருக்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.

06. விலைமனுக்களை இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதியில் கீழுள்ள முகவரியில் நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேல் குறிப்பிடப்பட்ட தொகைக்கு விலைமனு பிணையை கொண்டிருத்தல் வேண்டும்.

தலைமை பொறியியலாளர் (வழங்கல்கள்)
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகாரசபை,
இல. 45, லெய்டன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01

தொலைபேசி இல.: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் இல.: 2381652, 2470443

பெறுகை அறிவித்தல்

வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

வைத்தியசாலைகளிற்கு சமைத்த உணவு வழங்கல் - 2023

2023ஆம் ஆண்டில் வைத்தியசாலைகளிற்கு சமைத்த உணவு வழங்குவதற்காக 2022.11.30 அன்று பி.ப. 3.00 வரை வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத்தலைவரினால், தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02 சமைத்த உணவு வழங்கல்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை மற்றும் பொலன்னறுவை பொது வைத்தியசாலைகள் தவிர்ந்த வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான ஏனைய வைத்தியசாலைகளின் விடுதி நோயாளர்களிற்காக

சேவை	வைத்தியசாலைத் தொகுதி	கட்டணங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்		
		கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூ.	2023.04.03 வரை செல்லுபடியாகும் வங்கிப் பிணையம் ரூபா	ஆதன சான்றிதழ் பொது ரூபா
சமைத்த உணவு வழங்கல்	A	3,500/-	124,000/-	250,000/-
	B	3,000/-	85,000/-	150,000/-
	C	3,000/-	75,000/-	125,000/-
	D	3,000/-	60,000/-	75,000/-
	E	1,000/-	25,000/-	60,000/-

03. பொது 170 மூலம் ஆதனச் சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படாதிருப்பின், அத்தொகைக்கு நிகரான தொகையொன்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

04. மேற்படி சேவை வழங்கல்களிற்காக,

i. அனைத்து வழங்குநர்களும் வட மத்திய மாகாணத்தில் வசிக்கும், மற்றும் வட மத்திய மாகாண சபையில் பதிவு செய்யப்பெற்றுள்ள வழங்குநரொருவராக இருத்தல் வேண்டும்.

ii. அனைத்து வழங்குநர்களும் வட மத்திய மாகாணத்தில் வசிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் கூடிய பதிவுச் சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

iii. வழங்கல்களிற்கான பிணையம் மற்றும் ஆதனச் சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. தகைமைகளைப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரர்கள், மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தை வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் காசாகச் செலுத்தி இதற்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2022.11.10 முதல் 2022.11.30 அன்று பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

06. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணங்கள், நிறுவனங்களின் பிரகாரம் ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகளிற்காக தனித்தனியாகத் தயாரித்து, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென தனித்தனியாக முத்திரையிட்டு 2022.12.01 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, பதிவுத் தபாலில், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்/ தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வட மத்திய மாகாணம், அநுராதபுரம், என்ற முகவரிக்கு அனுப்புதல் அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக உள்ளிடுதல் வேண்டும். தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் சேவை மற்றும் சேவைக்கான நிறுவனம், மூலப் பிரதியா, நகல் பிரதியா என்பதனையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

08. கேள்விப் பிணை முறி: மத்திய வங்கியில் பதிவு செய்யப்பெற்று அங்கீகாரம் பெற்றுள்ள வங்கியொன்றிலிருந்து, வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட, 2022.12.01 முதல் 91 நாட்கள் செல்லுபடியாகும் (2022.12.01 முதல் 2023.04.03 வரை) வங்கி வரைவு ஒன்றின் மூலம் அல்லது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிமனையில் உரிய தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. இக் கேள்வி தொடர்பாக திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

டாக்டர் டப்ளியூ.எம். பாலித பண்டார
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்/
தலைவர்,
மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பெறுகைக்குழு
தொலைபேசி: 025-2050718/ 025-2223790

கொள்வனவு அறிவித்தல்

வத்தேகம நகர சபை

இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணைக்கிணங்க பொதுச்சந்தை கடைக்கும், வத்தேகம நகர பஸ் தரிப்பிட பொது மலசலகூட பராமரிப்பும் கொண்டு நடாத்தும் அதிகாரம் 2023 வருடத்திற்கு குத்தகைக்கு விட இரு பிரதிகளுடனான முத்திரையிட்டு அனுப்பப்படுகின்ற விலைமனுக்கள் 2022.11.28 ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. விலைமனு 2022 நவம்பர் மாதம் 25ஆம் திகதி பி.ப.3.30 வரை அலுவலக நேரத்தினுள் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
02. 2022.11.28 மு.ப.10.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
03. விலைமனுக்களிடும் உறையின் இடது பக்கத்தில்தான் வேண்டி நிற்கும் கடையின்/கட்டடத்தின் இலக்கம் வியாபாரத்தை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் வத்தேகம நகர சபை தலைவர் முகவரிக்கு அனுப்ப வேண்டும். இல்லையெனில் நகர சபையில் வைக்கப்பட்டுள்ள பெட்டியிலிட வேண்டும்.
04. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு குறைவாக மற்றும் அனுமதிக்கப்பட்ட அலுவலுக்கு புறம்பாக கோருகின்ற விலைமனுதாரரின் வைப்புப்பணம் சபை தன் வசப்படுத்திக்கொள்ளும்.
05. எவ்வித காரணமும் கூறாது எந்த விலைமனுவையும் ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் வத்தேகம நகரசபைக்கு அதிகாரமுண்டு.
06. வெற்றி பெற்ற மனுதாரர்களுக்கு அவர்களது மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்த பின் அவ்வறிவித்தல் தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் உரிய வைப்புப்பணத்தை செலுத்தி முறையான ஒப்பந்தத்திற்கு வர வேண்டும்.
07. மேலதிக விபரங்களை வத்தேகம நகரசபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் : 081-2475850.

அட்டவணை இல - 01
2023.01.01 - 2023.12.31 வரை

சொத்தின் இலக்கம்	அனுமதிக்கப்பட்ட வியாபாரம் அல்லது காரியம்	ஆகக் குறைந்த விலைக் கட்டணம் வருடத்திற்கு	கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப் படும்	கேள்வி விண்ணப்ப விலை மீளளிக்கப் படாத
13	கோழி இறைச்சி	300000.00	2500.00	500.00
14	மாட்டிறைச்சி	1835000.00	7500.00	500.00
15	மீன்	705000.00	2500.00	500.00
வத்தேகம நகர பஸ் தரிப்பிட பொது மலசலகூடம்	பராமரிப்பும் கொண்டு நடாத்தலும் (நிபந்தனைகள் விலைமனுவில் உள்ளடங்கும்)	460000.00	2500.00	500.00
வத்தேகம நகர சபை மண்டப கீழ் மாடி	விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர)	660000.00	2500.00	500.00

அட்டவணை இல - 02
2023.01.01 - 2025.12.31 வரை

சொத்தின் இலக்கம்	அனுமதிக்கப் பட்ட வியாபாரம் அல்லது காரியம்	ஆகக் குறைந்த விலைக் கட்டணம் வருடத்திற்கு	கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப் படும்	கேள்வி விண்ணப்ப விலை மளளிக்கப் படாத
26	விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர)	46800.00	2500.00	500.00
48	விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர)	43200.00	2500.00	500.00
50	விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர)	39600.00	2500.00	500.00
53	விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர)	36000.00	2500.00	500.00

ரவீந்திர பண்டார
தலைவர்
வத்தேகம நகர சபை
2022.11.03 திகதி வத்தேகம நகர சபை காரியாலயத்திலிருந்து

www.dz.lk
it's what you want

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

பத்தரமுல்ல, செத்சிறிபாய, 08ஆம் மாடியில் அமைந்துள்ள புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2023 வருடத்தில் பின்வரும் பொருட்கள் சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக தகுதியான நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொருட்கள்

1. அனைத்து வகையான அலுவலக காகிதாதிகள்
2. கணனி, புகைப்படப் பிரதி இயந்திரங்களுக்குத் தேவையான துணைப்பாகங்கள் மற்றும் காகிதாதிகள் (டிஸ்கட், ரிபன், டோனர், மற்றும் காகித வகைகள்)
3. அனைத்து வகையான அலுவலகத் தளபாடங்கள். (மரம், உலோகம் மற்றும் ஏனையவை.)
4. அலுவலக உபகரணங்கள் (கணனி இயந்திரம், புகைப்படப்பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், மல்டிமீடியா இயந்திரம், கெமரா உபகரணம், ஒலிபெருக்கி இயந்திரம், மற்றும் துணைப்பாகங்கள் உள்ளிட்ட அனைத்து விதமான கட்புல, செவிப்புல உபகரணங்கள் போன்றவை.)
5. கணனி சார்ந்த துணைப்பாகங்கள் (USB Pen Drive, Wi-Fi dongle, Internet (4G) Dongle Anti-Virus Software, Network Accessories)
6. டயர், டியூப் மற்றும் பற்றரி போன்றவற்றை வழங்கல்.
7. வளிச்சீராக்கி இயந்திரங்கள் வழங்குதல்.
8. மின்சார உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (குளிர்சாதனப்பெட்டி, மின்விசிறி, மின்சார கேத்தல், தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட அனைத்து வகையான மின்சார உபகரணங்கள், மற்றும் அது தொடர்பான அனைத்து மின்சார உபகரணங்கள்)
9. கட்டிடங்களுக்கான நிறப்பூச்சி மற்றும் நிறப்பூச்சிற்குத் தேவையான உபகரணங்கள் (திஸ்ஸமஹாராம பிரதேசம் விரும்பத்தக்கது)
10. டீ சேர்ட், கெப் (தொப்பி) தயாரித்தல் மற்றும் ஊழியர்களுக்கான சீருடைத் துணிகளை வழங்கல்.
11. ஒப்பனை, மேடை பின்புல வடிவமைப்பு, நடனம் மற்றும் நாடக ஆடை அணிகலன்கள், நடனத் துறை மற்றும் நாடகம் தொடர்பாகத் தேவைப்படும் நடிப்புத்துறை பொருட்களை வழங்குதல்.
12. பெயர்ப்பலகை, மற்றும் நினைவுப் படிவங்களைத் தயாரித்தல்.
13. கேடயங்கள், கிண்ணங்கள் மற்றும் பதக்கங்களை வழங்குதல்.
14. கீழைத்தேய மற்றும் மேலைத்தேய வாத்தியக் கருவிகள் மற்றும் இசைக் கருவிகளை வழங்குதல்.
15. முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டு முற்றம் உட்பட முன்பள்ளிக்குத் தேவைப்படும் அனைத்துத் துணைப்பாகங்களையும் வழங்குதல்.
16. 'பிரிகர' மற்றும் பூஜைப் பொருட்களை வழங்குதல்.

02. ஆலோசனை அற்ற சேவைகள்:

1. பாதுகாப்புச் சேவை
2. துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகள்.
3. அனைத்துவிதமான அச்சிடும் வேலைகள் (புத்தகங்கள், விளம்பரக் குழு, கட்டவுட், பெனர், அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள் மற்றும் அனைத்து டிஜிட்டல் அச்சிடும் நடவடிக்கைகள் மற்றும் பிளாஸ்டிக் எழுத்துக்கள் போன்றவை.)
4. கிரபிக் நிர்மாண விடயங்கள் (அழைப்பிதழ், சுவரொட்டி, பாதாகை, விருதுகள் மற்றும் புத்தகம் கட்டுதல்)
5. புகைப்படம் அச்சிடுதல், அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல்.
6. கணனி இயந்திரம், வீடியோ உபகரணம், டிஜிட்டல் கெமரா, புகைப்படப்பிரதி இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த அனைத்து இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தவேலைகள்
7. அனைத்து வகையிலான அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (தளபாடங்கள், வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறி, மின்சாரக் கேத்தல், தொலைக்காட்சிப் பெட்டி உட்பட அனைத்து வகையிலான மின்சார உபகரணங்களும் உட்பட.)
8. ஒப்பனை, மேடை பின்புல வடிவமைப்பு, நாட்டியங்களுக்குத் தேவைப்படும் உபகரணங்களை வழங்குதல், நடிப்புக் கலை அணிகலன்கள் மற்றும் நடிப்பு தொடர்பான உபகரணங்கள் வழங்குதல் மற்றும் உள்நாட்டு சாந்தி கருமங்களுக்கான விலைமனுக் கோரல்.
9. அனைத்து வகையிலான வாத்தியக் கருவிகள் மற்றும் இசைக்கருவிகளின் திருத்தவேலைகள்
10. வைபவங்களுக்கான மேடைகள், கதிரைகள், கூடாரம், ஜெனரேட்டர், நீர் பவுசர் நீர்த்தாங்கி, தற்காலிக கழிவறைகள் போன்றவை மற்றும் அது சார்ந்த அனைத்துப் பொருட்களையும் வழங்குதல்
11. வைபவங்களுக்கான அலங்கார பூவேலைப்பாடு மற்றும் அலங்கார மலர்கள் உட்பட ஏனைய அலங்கார பொருட்களை வழங்கல்.
12. வைபவங்களுக்கான உணவு, பானங்கள் மற்றும் குடிநீர் போத்தல்களை வழங்குதல்
13. வெயாங்கொடை பயிற்சி நிலையத்தின் உற்சவங்களுக்கான உணவை வழங்குவதற்கு பிரதேச வாரியாக பதிவு செய்தல்
14. நடன உடைகள் மற்றும் ஏனைய அழுக்குத் துணிகளை சலவை செய்தல்
15. நடன உடைகள் மற்றும் சீருடைகளைத் தைத்தல்/ அமைத்தல்
16. மேடை பின்புலத்தை வடிவமைத்தல் மற்றும் அது தொடர்பான பொருட்கள் வாடகை அடிப்படையில் வழங்குதல்
17. போக்குவரத்து மற்றும் நிர்மாண வேலைகளுக்கு வாகனம் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல்.
18. கட்டிட நிர்மாணம் தொடர்பான ஆலோசனைச் சேவையை வழங்குதல்
19. வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல், வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் மற்றும் வாகனங்களில் அனைத்து வகையான குஷன் வேலைகள்.
20. போக்குவரத்து வழங்கல், நாடு முழுவதும் அமைந்துள்ள கலாசார நிலையங்களிலிருந்து - வேன் (12, 15 இருக்கைகள் கொண்டவை.) பஸ் மற்றும் சிறியளவிலான லொறி வண்டிகள்.
21. பயிற்சி நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கான இடவசதிகள், உணவு, தங்குமிடங்களை வழங்குதல், சாந்திகர்மங்களை மேற்கொள்ளல் - மலைநாடு/ கீழைநாடு/ சப்ரகமுவ.
22. வடிவமைப்பு கலைஞர்கள், வாஸ்து சாஸ்திர கலைஞர்கள் மற்றும் சிவில் பொறியியலாளர்கள்.
23. மின்சார இயந்திரவியல் பொறியியலாளர்கள்.
24. பிரசாரம், ஊக்குவிப்பு தொடர்பான சேவைகள்.
25. வைபவ முகாமைத்துவ விடயங்கள் (Event Managing)

* 02 ஆலோசகர் இன்றிய சேவை கீழாக, காட்டப்பட்டுள்ள 01/02/09/12/14/16/20 சேவைகள் தொடர்பாக மாவட்ட மட்டம் விசேடமானதாகும்.

03. வேலைகள்

1. கட்டிடங்களின் திருத்த வேலைகள் மற்றும் சிறிய நிர்மாணங்கள் (ICTAD நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளமையை காண்பிக்கும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)
2. கட்டிட உள்ளகத்திற்கு முன்தயாரிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அதுபற்றிய திருத்த வேலைகள்

04. ஆலோசனைச் சேவைகள்

1. பதவி நிலையினர் கொள்ளளவு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்.
2. வெளியக பயிற்சி செயலமர்வுகள் (Outbound Training)
3. இணையதளங்களை அமைத்தல் மற்றும் புனரமைத்தல்

05. அனைத்து வகையான கட்டிட நிர்மாணப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்

1. அமரதேவ அசபுவ நிலையத்தின் நிர்மாண வேலைகளுக்கு பிரதேச வழங்குநர்களைப் பதிவு செய்தல்

பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள்

1. 2023ஆம் வருடத்தில் இந்த அமைச்சிற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள ஆர்வங்காட்டும் வழங்குநர்கள், வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்து அதற்குத் தேவையான விண்ணப்பப் பத்திரத்தை, 1,000.00 ரூபா பணத்தைச் (மீளளிக்கப்படாத ஆயிரம் ரூபா) செலுத்தி கணக்காளரிடமிருந்து (பெறுகை) பெற்றுக்கொள்ளலாம்.
2. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை, 2022.11.11ஆம் திகதி முதல் 2022.12.01ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
3. ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. தமது விண்ணப்பத்துடன் வியாபாரப் பதிவுச்சான்றிதழின் புகைப்படப்பிரதி மற்றும் இயைபுடைய துறையில் மூன்று (03) வருட கால அனுபவம் தொடர்பான சான்றிதழை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
5. பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை, 2022.12.15ஆம் திகதி வரை 'தலைவர், பெறுகைக்குழு, புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, 08ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடிதவுறையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023' எனக் குறிப்பிட வேண்டும். இந்த வருடத்திற்கு பதிவு செய்து கொண்டுள்ள விண்ணப்பதாரர்களும் 2022ஆம் வருடத்திற்காக மீண்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
6. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு மேலதிகமாக இலங்கை தொலைபேசி விபரக்கொத்தின் ரெயின்போ பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
7. நிர்ணயிக்கப்பட்ட வேளையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத அல்லது குறித்த நேரத்திற்கு பொருட்கள் ஒப்படைக்காத அல்லது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிபந்தனைகளைக் கடைப்பிடிக்காத வழங்குநர்களின் பதிவு முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
8. வழங்கல்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக முற்பணத் தொகை செலுத்தப்படமாட்டாததுடன் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கியதன் பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை, கணக்காளர் (பெறுகை) (0112875408) மற்றும் பெறுகைப் பிரிவைத் தொடர்பு கொண்டு (011-2862675) பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,
08ஆம் மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்ல.

(பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA)

2023 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களின் பதிவு செய்தல்

2023 ஆம் ஆண்டிற்கு இந்த நிறுவனத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக இதுபோன்ற சேவைகளை வழங்கும் வழங்குனர்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்காக **2022.11.10** ஆம் திகதி முதல் **2022.12.01** ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள **www.slida.lk** எமது அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்,
இல-28/10, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.

தொலைபேசி இல : 011-5980200 பெக்ஸ் : 011-2584406 மின்னஞ்சல் : mail@slida.gov.lk

---

கட்டான பிரதேச சபை

ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

2023ஆம் வருடத்தில் இந்த நிறுவனத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் தகைமையுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, அவை அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், ''ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2023'' எனக் குறிப்பிட்டு, 'தலைவர், கட்டான பிரதேச சபை, தெமங்ஹந்திய' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

பொருள் வழங்கல்	:	ரூ. 3000.00
சேவை வழங்கல்	:	ரூ. 3000.00
ஒப்பந்தங்கள்	:	ரூ. 6000.00

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 2022-11-30

ஒவ்வொரு விடயத்திற்கும் வெவ்வேறாக பதிவுக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், நிறுவனத்திற்கு வருகை தந்து பதிவு செய்துகொள்ள எதிர்பார்க்கப்படுபவர்கள் வாரத்தின் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரையான அலுவலக தினங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலப்பகுதியில் தெமங்ஹந்தியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்துகொள்ளலாம். தபால் மூலம் விண்ணப்பிப்பதனால் ''தலைவர், கடான பிரதேச சபை'' எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலை மூலம் மாத்திரம் செலுத்தலாம்.

நிபந்தனைகள்:

1. தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து எழுத்து மூலம் விலைமனுக்கள் கோரப்படுவதுடன், வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தன்மை, விலை, பொருள் மற்றும் சேவை வழங்குதல் தொடர்பான அனுபவம் மற்றும் நிதியியல் இயலுமை மற்றும் துறைசார்ந்த அனுபவம் என்பனவற்றின் தகவுத்திறனுக்கமைய பொருத்தமான வழங்குநர் தெரிவு செய்யப்பட்டு தருவித்தற் கட்டளை ஒப்படைக்கப்படும்.
2. சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப பதிவு செய்து கொண்ட வழங்குநர்களுக்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்குரியதாகும்.
3. வியாபாரம் சட்டபூர்வமான செல்லுபடியாகும் பதிவு சகிதம் இருத்தல் வேண்டும்.
4. அறிவிக்கப்பட்டதன் பின்னர், உரிய முறையில் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகள் மற்றும் தரங்களுக்கு அமைவாக பொருட்களை வழங்கத்தவறும் மற்றும் விலைக் கோரல் கடிதத்திற்கு இரண்டு முறை பதிலளிக்காத வழங்குநர்களின் பதிவானது, அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்
5. பொருட்களை வழங்குவது தொடர்பாக, மேலதிக நிபந்தனைகள் தேவைப்படுமிடத்து, அவ்வாறு விதி முறைகளை நடைமுறைப்படுத்தும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
6. 2022-11-30ஆம் திகதியின் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

A பொருட்களை வழங்குதல்

விடய இலக்கம்	விபரம்	விடய இலக்கம்	விபரம்
A (01)	அலுவலக காகிதாதிகள் மற்றும் காகிதங்கள், மாதிரிப் படிவங்கள், அச்சடித்த ஆவணங்கள் மற்றும் அச்சு வேலைகள்	A (09)	துப்புரவேற்பாட்டு உபரகணங்கள் (தும்புத்தடி, ஈர்க்கிள், கம்பூட்ஸ், இறப்பர் கையுறை)
A (02)	அலுவலக உபகரணங்கள் மரம் மற்றும் உருக்காலான அலுவலகத் தளபாடங்கள்	A (10)	சீருடை, சப்பாத்து, மேசை விரிப்புகள், திரைச்சீலைகள் மற்றும் தரைக் கம்பளங்கள்
A (03)	கொங்கிறீட் பொருட்கள், கனரகப் பொருட்கள், நிறப்பூச்சுகள் (வாகனம் கட்டிடங்களுக்காக)	A (11)	வீதி பராமரிப்பு உபகரணங்கள் (ரேக்கைகள், மண்வெட்டி, வீல்பரோ போன்றன) தார் மற்றும் கோலாஸ்
A (04)	மோட்டார் வாகனம் மற்றும் ட்ரெக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள்	A (12)	குப்பை வண்டி, டிரெக்டர் டிரேலர்
A (05)	டயர், டியூப் மற்றும் பற்றரி	A (13)	பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள், கொம்போஸ்ட் தொட்டிகள் மற்றும் குடிநீர் தாங்கிகள்
A (06)	ஆற்றுமணல், கருங்கல், வீதி செப்பனிடும் பொருட்கள், மண் மற்றும் கிரவல் (அனுமதிப் பத்திரத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்)	A (14)	கணனித் தாள்கள் மற்றும் கணனி பற்றுச்சீட்டுகள்
A (07)	அலுவலக அடையாள அட்டைகள்	A (15)	கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் (பிரிண்டர், யூபிஎஸ், டோனர், ரிபன் முதலியன
A (08)	துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (கிருமிநாசினிகள், சவக்காரம்)	A (16)	வீதி விளக்கு மற்றும் மின்சார உபகரணங்கள்

B சேவைகள்

விடய இலக்கம்	விபரம்	விடய இலக்கம்	விபரம்
B (01)	நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் கட்டிட பராமரிப்பு வேலைகள்	B (13)	அச்சு வேலைகள் (அறிவித்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்கள்)
B (02)	மோட்டார் கிறேடர், பெக்கோ இயந்திரம், லோடர் மற்றும் வீதிகளை அழுத்தும் சேவைகள்	B (14)	டிஜிட்டல் பெனர் அச்சிடல் உத்தியோபூர்வ முத்திரை, திகதி முத்திரை தயாரித்தல்
B (03)	கணனி அச்சுப்பொறி (மென்பொருள் மற்றும் வன்பொருள்) மற்றும் கணனி துணைப்பாகங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்	B (15)	நிகழ்ச்சித்திட்டங்களுக்கான உணவு மற்றும் தண்ணீர் வழங்கல் மற்றும் உணவுபான சேவைகள்
B (04)	ட்ரெக்டர் திருத்தவேலைகள்	B (16)	வாளிச்சீராக்கி இயந்திர திருத்தவேலைகள் (வாகனம் மற்றும் அலுவலகம்)
B (05)	கெப்வண்டி மற்றும் ட்ரெக் வண்டி திருத்தவேலைகள்	B (17)	வீதி பெயர்ப்பலகை மற்றும் பெயர்ப்பலகைகளை தயாரித்தல்
B (06)	முச்சக்கரவண்டி திருத்தவேலைகள் மற்றும் சேவைகள்	B (18)	அலுவலகம்
B (07)	உருக்கு கெபினற் மற்றும் உருக்கு அலுமாரி திருத்தவேலைகள் மற்றும் அலுவலக மரத் தளபாட திருத்தவேலைகள்	B (19)	மொழி பெயர்ப்பு வேலைகள்
B (08)	உருக்கியொட்டும் வேலை, இரும்பு வேலை மற்றும் பட்டறரை சேவைகள், நீர்க்குழாய் வேலைகள்	B (20)	சட்டத்தரணி சேவைகள், நில அளவை சேவைகள் மற்றும் ஆலோசனை சேவைகள்
B (09)	வாடகை வாகன சேவையை வழங்கல். (வேன்) ஸ்க்கவேட்டர் இயந்திரம் (PC 90, 100,125) Play Loaded பாரம் தூக்கும் இயந்திரம் (Fork lift)	B (21)	மின் பிறப்பாக்கி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
B (10)	ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் உற்சவப் பொருட்களை வழங்குதல்	B (22)	டயர், டியூப் மாற்றுதல், பெச் ஒட்டுதல், சக்கர சமச்சீராக்கம் செய்தல்
B (11)	சகல வகையான குஷன் வேலைகள் / திரைச்சீலைகள்	B (23)	அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல்
B (12)	தகனச்சாலை திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்	B (24)	போத்தல், பத்திரிகை, உடைந்த பொருட்களை கொள்வனவு செய்தல்

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை கட்டான பிரதேச சபையின் தொலைபேசி இலக்கம் 031-2222575 ஊடாக அலுவலக நேரத்தில் வழங்கல் உத்தியோகத்தரை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கே. சிசிரகுமார பிரனாந்து,
பெறுகைக் குழுவின் தலைவர்,
கட்டான பிரதேச சபை,
தெமங்ஹந்திய.
2022-11-08.

நியூசிலாந்தை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது பாகிஸ்தான் அணி

நியூசிலாந்துக்கு எதிரான டி20 உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

சிட்னியில் நேற்று (09) நடைபெற்ற போட்டியில் 153 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களான பாபர் அசாம் மற்றும் மொஹமட் ரிஸ்வான் 105 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டதோடு இருவரும் அரைச்சதம் பெற்றனர்.

இதன்மூலம் வலுவான ஆரம்பத்தை பெற்ற பாகிஸ்தான் அணிக்காக 5 பந்துகள் மிச்சம் வைத்து ஷான் மசூத் வெற்றி ஓட்டத்தை பெற்றார்.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் வேகமாக ஓட்டங்களை பெறுவதற்கு போராடியது.

எனினும் 49 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்தபோது டரில் மிட்சல் ஆட்டமிழக்காது பெற்ற அரைச்சதத்தின் உதவியோடு நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 152 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருக்கும் பாகிஸ்தான் அணி இன்று நடைபெறும் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான அரையிறுதியில் வெல்லும் அணியுடன் வரும் ஞாயிற்றுக்கிழமை (13) மெல்போர்னில் பலப்பரீட்சை நடத்தும்.

பாகிஸ்தான் அணி சுப்பர் 12 சுற்றின் முதல் இரு போட்டிகளிலும் இந்தியா மற்றும் சிம்பாப்வேயிடம் தோற்று வெளியேறும் நெருக்கடிக்கு முகம்கொடுத்த நிலையிலேயே அதிரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

நெதர்லாந்து அணி தென்னாபிரிக்காவை அதிர்ச்சிகரமாக வீழ்த்தியதை அடுத்து பங்களாதேஷை தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறிய பாகிஸ்தான் இரண்டாவது முறையாக டி20 உலகக் கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்புடன் இறுதிப் போட்டியில் ஆடவுள்ளது.

ஹசரங்க முதலிடம்

டி20 உலகக் கிண்ணத்தில் சோபித்த இலங்கை சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க ஐ.சி.சி. டி20 பந்துவீச்சாளர் தரவரிசையில் ஆப்கானிஸ்தானின் ரஷீட் கானை பின்தள்ளி முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளார்.

சுப்பர் 12 சுற்று முடிவில் டி20 உலகக் கிண்ணத்தில் அதிக விக்கெட் வீழ்த்தியோர் வரிசையில் முதலிடத்தை பிடித்த ஹசரங்க மொத்தம் 15 விக்கெட்டுகளை பெற்றுள்ளார். இதனைத் தொடர்ந்தே 2021 நவம்பர் மாதத்தின் பின்னர் மீண்டும் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

ஹசரங்கவின் மூன்று ஆண்டுகள் டி20 சர்வதேச கிரிக்கெட் வாழ்வில், 52 போட்டிகளில் 86 விக்கெட்டுகளை வீழ்த்தி இருப்பதோடு, அவரது பந்து வீச்சு சராசரி 14.48 ஆகும்.

அநுராதபுரம் ரோல் போல் அணியினருக்கு வரவேற்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

2016 முதல் 2022 வரை தொடர்ச்சியாக ரோல் போல் தேசிய சம்பியன் ஷிப்பை வென்ற அநுராதபுரம் மாவட்ட ரோல் போல் அணியினரை வரவேற்கும் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் மாகாண கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்றது.

இம்முறை 2022ஆம் ஆண்டில் ரோல் போல் தேசிய சம்பியன்ஷிப் போட்டி கல்கிஸ்ஸை வித்தியா வித்தியாலயத்தில் நடைபெற்றது. 11 வயதுக்குட்பட்ட பெண்கள் சம்பியன்ஷிப் 14 வயதுக்குட்பட்ட ஆண்கள் சம்பியன்ஷிப் மற்றும் 17 வயதுக்குட்பட்ட சம்பியன்ஷிப், சிரேஷ்ட பெண்கள் சம்பியன்ஷிப் மற்றும் ஆண்கள் சம்பியன்ஷிப் பிரிவு உள்ளிட்ட போட்டிகளில் அநுராதபுரம் மாவட்ட ரோல் போல் அணி 53 தங்க பதக்கங்களை வென்றது.

இந்திய-இங்கிலாந்து அரையிறுதி இன்று

டி20 உலகக் கிண்ணத்தில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது அரையிறுதிப் போட்டி அடிலெய்ட்டில் இன்று நடைபெறவுள்ளது.

சுப்பர் 12 சுற்றின் குழு இரண்டில் தென்னாபிரிக்காவுடனான போட்டியில் மாத்திரம் தோற்று அந்தக் குழுவில் முதலாம் இடத்தை பெற்ற நிலையிலேயே இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியது.

மறுபுறம் குழு ஒன்றில் ஆடிய இங்கிலாந்து அந்தக் குழுவில் இரண்டாவது இடத்தை பிடித்தே அரையிறுதிக்கு முன்னேறியது. இரு அணிகளும் டி20 உலகக் கிண்ணத்தில் பலப்பரீட்சை நடத்துவது கடந்த பத்து ஆண்டுகளில் இது முதல் முறையாக அமையவுள்ளது.

இந்தியா வலுவான துடுப்பாட்ட வரிசையுடன் களமிறங்குவதோடு இங்கிலாந்து அணி இம்முறை உலகக் கிண்ணத்தில் சற்றுத் தடுமாற்றத்துடனேயே அரையிறுதி வரை முன்னேற்றம் கண்டுள்ளது. எனினும் அந்த அணியின் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு டி20 உலகக் கிண்ணத்திற்கு பொருத்தமானது என்பதால் இன்றைய போட்டியில் இந்தியாவுக்கு சவால் கொடுக்க வாய்ப்பு உள்ளது.

இன்றைய போட்டியில் வெற்றிபெறும் அணி வரும் ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெறும் பாகிஸ்தானுக்கு எதிரான இறுதிப் போட்டியில் மோதும்.

இன்றைய போட்டி இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30க்கு ஆரம்பமாகும்.

கலாவெவ டப்ளியூ.சீ.சீ. விளையாட்டுக்கழகம் நடாத்திய 24 அணிகளைக்கொண்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கெகிராவ ஒரியன்ஸ் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தை வென்ற கலாவெவ டப்ளியூ.சீ.சீ. அணியை படத்தில் காணலாம். (படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

குணதிலக்க மீதான வழக்கு விபரம் வெளியானது

பல தடவைகள் மூச்சுத்திணற வைத்ததாக பெண் குற்றச்சாட்டு

இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணத்திலக்கவுடன் தொடர்புபட்ட வழக்கின் விபரங்களை ஊடகங்களுக்கு வெளியிட சிட்னி நீதவான் நேற்று அனுமதி அளித்துள்ளார்.

நீதிமன்றத்தில் இன்று (09) தொடுக்கப்பட்ட மேன்முறையீட்டை அடுத்து முன்னதாக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நீக்கப்பட்டு நீதிபதியால் அனுமதி அளிக்கப்பட்டது என்று சிட்னி மோர்னிங் ஹெரல்ட் பத்திரிகை நேற்று குறிப்பிட்டிருந்தது.

அனுமதியின்றி உடலுறவில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருக்கும் குணதிலக்க வீடியோ தொழில்நுட்பத்தின் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பாலியல் தாக்குதலின் போது பல தடவை தம்மை மூச்சுத்திணற வைத்ததாக பாதிக்கப்பட்ட பெண் தனுஷ்க மீது குற்றஞ்சாட்டி இருப்பது நீதிமன்றம் வெளியிட்டிருக்கும் ஆவணத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

நியூ சவூத் வேல்ஸ் பொலிஸாரின் ஆவணத்தின்படி, அந்தப் பெண்ணின் வீட்டில் வைத்து குணதிலக்க, கட்டாய உடலுறவில் ஈடுபட்டதாகவும் ஒரு கையை பெண்ணின் கழுத்தில் வைத்து 20–30 விநாடிகள் நெருக்கியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

"புகாரளித்தவர் எதுவும் செய்ய முடியாமல் பயந்தார்" என்று பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இருமுறை மூச்சுத்திணற வைத்ததாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மூன்றாவது தடவை அவர் ஆறு விநாடிகள் பெண்ணின் மூச்சை அடக்கிய நிலையில் அவரது மணிக்கைட்டை பிடித்து விலக்க முயன்றபோதும் 10 விநாடிகளுக்கு கழுத்தை மேலும் இறுக்கமாக நெருக்கினார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

"ஆணுறை இன்றி உடலுறவில் ஈடுபடுவதற்கு சம்மதிக்கவில்லை என்பதில் புகார்தாரர் தெளிவாக இருந்தார். மேலும், மூச்சுத்திணறலில் ஈடுபட்ட நிலையில் உடலுறவில் ஈடுபடுவதற்கும் புகார்தாரர் சம்மதிக்கவில்லை" என்றும் பொலிஸ் அறிக்கையில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ மனை ஒன்றில் பாலிய விசாரணைக்கான சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதோடு தொடர்ச்சியாக மூச்சுத்திணற வைத்ததால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிய மூளையில் ஸ்கேன் சோதனை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் நியூ சவுத் வேல்ஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு முன்னரே இந்த இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்திருந்ததாகவும் நவம்பர் 2ஆம் திகதி சிட்னியில் உள்ள ஒபரா மதுபான விடுதியில் இருவரும் சந்திப்பதற்கு முன்னரே பிரிஸ்பானுக்கு வரும்படி அந்தப் பெண்ணை குணதிலக்க ஊக்குவித்திருப்பதாகவும் பொலிஸ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த இருவரும் மதுபான விடுதியில் அரைமணி நேரம் இருந்து மதுபானம் அருந்திய பின், இரவு உணவை எடுத்துக் கொண்ட பின்னர் படகு ஒன்றில் பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். படகுக்காக காத்திருக்கும் நேரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தம்மை முறையற்ற வகையில் தொட்டதாகவும் அந்தப் பெண் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

எனினும் குணதிலக்க தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் நிராகரித்துள்ளார் என்று அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் நேற்று இடம்பெற்ற விசாரணையின் போது குணதிலக்க சார்பில் சட்டத்தரணி சாம் பரராஜசிங்கம் மற்றும் சட்டத்தரணி சாரா பிளக் ஆகியோர் தோன்றினர்.

இதில் கைது செய்யப்பட்ட பின்னர் குணதிலக்க பாதிக்கப்பட்ட பெண்ணின் சில கூற்றுகளை உறுதிப்படுத்தியபோதும், தாம் அத்து மீறியது அல்லது பெண் சம்மதம் வழங்கவில்லை என்ற கூற்றை நிராகரித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி நாடு திரும்புவதற்கு முன்னதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை குணதிலக்க கைது செய்யப்பட்டார். கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையில் அவரது பிணைமனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கு வரும் 2023 ஜனவரி 12 ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் நிலையில், அதற்கு முன்னதாக பிணை மனு தாக்கல் செய்யப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச செய்திகள்

நேபாள பூகம்பத்தில் அறுவர் உயிரிழப்பு

நேபாளத்தின் மேற்குப் பகுதியை நேற்று (09) 5.6 ரிக்டர் அளவுகொண்ட பூகம்பம் உலுக்கியதில் 6 பேர் உயிரிழந்தனர்.

பூகம்பத்தின் அதிர்வுகள் இந்தியத் தலைநகர் புதுடில்லி வரை உணரப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், உயிருடற்சேதம் குறித்துத் தகவல் இல்லை.

உயிரிழந்தவர்களில் மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் டோட்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என நேபாள பொலிஸார் கூறினர். நிலநடுக்கத்தில் காயமுற்ற ஐவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

அமெரிக்க தேர்தலில் கடும் போட்டி

அமெரிக்க இடைத்தவணைத் தேர்தலில், செனட் சபைக்குக் கடும் போட்டி நிலவுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில் இறுதியாக வெளியான முடிவுகளின்படி செனட் சபையில் குடியரசுக் கட்சி ஏற்கனவே உள்ள 29 இடங்களுடன் 18 இடங்களை வென்றுள்ளது. அதனிடம் இப்போது 47 இடங்கள் உள்ளன.

ஜனநாயகக் கட்சி, ஏற்கனவே உள்ள 36 இடங்களுடன் தற்போது 12 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. அதற்கு இப்போது செனட் சபையில் 48 இடங்கள் உள்ளன.

இடைத்தவணைத் தேர்தலுக்கு முன்னர் செனட் சபை ஜனநாயகக் கட்சியின் வசம் இருந்தது.

தற்போது போட்டி நடைபெறும் 35 இடங்களில் குடியரசுக் கட்சியின் கரம் மேலோங்கினால் ஜனாதிபதி ஜோ பைடனின் திட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் போகும். அது 2024ஆம் ஆண்டு வரக்கூடிய அடுத்த ஜனாதிபதி தேர்தலைப் பாதிக்கக்கூடும்.

மக்களவையைப் பொறுத்தவரை, மொத்தமுள்ள 435 இடங்களுக்குப் போட்டி நடைபெறுகிறது. அவற்றில் 172 இடங்கள் ஜனநாயக் கட்சி வசம் சென்றுள்ளன. 197 இடங்களைப் பிடித்து குடியரசுக் கட்சி முன்னணியில் இருப்பதாக கடைசி முடிவுகள் கூறுகின்றன.

மக்களவை, செனட் சபையோடு சில மாநிலங்களின் ஆளுநர்கள், மாநிலச் செயலாளர்கள், மாநிலத் தலைமைச் சட்ட அதிகாரிகளையும் அமெரிக்க மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

தலிபான்களை எதிர்த்து பெண்கள் ஆர்ப்பாட்டம்

ஆப்கானிஸ்தானில் பெண்கள் ஆறாம் வகுப்புக்கு மேல் கல்வி கற்பதற்கும் வேலைக்குச் செல்வதற்கும் தலிபான்களால் விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராக காபுலில் பெண்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

பெண்கள் மீதான தடைகளால் நாட்டில் வறுமை அதிகரித்திருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த உள்துறை அமைச்சின் முன்னாள் ஊழியர் ஒருவர், "நாம் எதிர்கொண்டுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் கவனம் செலுத்தி எம்மைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 10ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.